

# பூக்கூடை

உவமைக்கவிஞர்

சுரதா

மணிவாசகர் பதிப்பகம்

# பூக்கள்

உவமைக் கவிஞர்

சுரதா

மணிவாசகர் பதிப்பகம்
31, சிங்கர் தெரு, பாரிமுனை,
சென்னை-600108.

நூல் : பூக்கூடை
முதல் பதிப்பு : நவம்பர், 2010
திருவள்ளுவர் ஆண்டு : 2041
**விலை : ரூ. 70.00**
மொத்தப் பக்கங்கள் : 128
அளவு : (டெம்மி) 1 x 8
மணிவாசகர் வெளியீட்டு எண் : 1752

முகப்பு அட்டை மற்றும்
பக்க வடிவமைப்பு:
எம்.ஏ. பாலாஜி
அம்மா கணினியகம், சென்னை-17.



நினைவில் வாழும் நிறுவனர்
ச. மெய்யப்பனார்

அண்ணாமலைப்
பல்கலைக் கழக
முன்னாள் தமிழ்ப் பேராசிரியர்.
பல்கலைக் கழகங்கள்
பலவற்றில் அறக் கட்டளைகள்
நிறுவியுள்ளார்.
'வள்ளுவம்' இதழின்
நிறுவன ஆசிரியர்.
குன்றக்குடி அடிகளார்
'தமிழவேள்' என்றும்,
தருமபுரம் ஆதீனத் தலைவர்
'செந்தமிழ்க் காவலர்' என்றும்
விருதுகள் வழங்கிச்
சிறப்பித்துள்ளனர்.
'பதிப்புச் செம்மல்' என
அறிஞர்கள் இவரைப் பாராட்டுவர்.

நூல்கள் கிடைக்குமிடம்:
மணிவாசகர் நூலகம்
12-B, மேலச் சன்னதி,
சிதம்பரம் - 608001.
தொலைபேசி: 230069

31, சிங்கர் தெரு,
பாரிமுனை, சென்னை - 600108.
தொலைபேசி: 25361039

6, சிவஞானம் தெரு,
தி.நகர், சென்னை - 600017.
தொலைபேசி: 24357832

110, வடக்கு ஆவணி மூல வீதி,
மதுரை - 625001.
தொலைபேசி: 2622853

15, ராஜ வீதி,
கோயமுத்தூர் - 641001.
தொலைபேசி: 2397155

78, செரி சாலை,
சேலம் - 636001.
தொலைபேசி: 3207722

28, நந்தி கோயில் தெரு,
திருச்சி - 620002.
தொலைபேசி: 2706450

அச்சிட்டோர்: மணிவாசகர் ஆப்செட் பிரிண்டர்ஸ், சென்னை-600 021.
தொலைபேசி: 25954528

# பெண்ணே... உன்னோடு!

இந்த நூற்றாண்டின் புதிய தலைமுறைக் கவிஞர்களில் ஒருவரான இளஞ்செழியன், இலக்கிய உலகத்தில் நிலைத்து, பெறும் புகழைப் பெறுவார்.

'பெண்ணே... உன்னோடு!' என்ற நூலுக்கு பெயர் இருக்கிறது. இது காதல் உணர்வைச் சுட்டிக் காட்டும்.

நிலவே... உன்னோடு! என்றிருந்தால் விஞ்ஞான உணர்வைச் சுட்டிக் காட்டும். விண்வெளியே உன்னோடு! என்றிருந்தால் அறிவியல் அகலத்தைக் காட்டும். அடுத்து வரும் நூல்களின் தலைப்புகளில் கவனத்தைக் காட்டவும். ஒரு ஆங்கிலக் கவிஞன் தன்னுடைய ஒருகவிதை நூலுக்கு 18 ஆண்டு முயற்சிக்குப்பின் தலைப்பிட்டானாம். நம் தமிழகத்தில் அவ்வாறில்லை. இனி தமிழ்க் கவிஞர்கள் அனைவருமே தலைப்புகளில் சிந்தனை செலுத்த வேண்டும்.

ஒரு கவிஞன் நூல் எழுதும் போது மறைந்த பெரியவர்களையும் சமூகப் பெரியவர்களைப் பற்றியும், தன் நண்பனைப் பற்றியும், தன்னுடைய ஊரைப் பற்றியும் கவிதை பாட வேண்டும்.

தந்தை பெரியாரைப் பற்றி, 1923ல் கம்பம் பீர்முகமது பாவலர் முதன் முதலில் கவிதை பாடினார். இளந்தலைமுறையினரில் மிகவும் சிறப்புடன் பாடியுள்ளார் இளங்கவிஞர் இளஞ்செழியன். அவர் "பிராணவாயு(க்கு) பிறந்த நாள்" என பெரியாரைப் பாடிய தலைப்புக்கே பரிசுத் தரவேண்டும்.

*மா. இளஞ்செழியன் எழுதிய'பெண்ணே... உன்னோடு!, என்னும் நூலுக்கு 1998–இல் வழங்கிய அணிந்துரை.*

## ஒரு தென்றலின் பயணம்

எங்களைப் போன்ற மலைகளுக்கு நடுவே இந்த சிறு துரும்பும் புறப்பட்டு விட்டது இலக்கியத் தென்றலை சுவாசிக்க. என் அன்புத் தம்பி ஆவூர் சர்புதீன் பாட்சாவின் கவிதைகள் அனைத்தும் மலைகளை உடைக்கும் உளியாய் உள்ளது. இவர் கவிதை உலகுக்கு புதுமை என்று என்னால் சொல்ல முடியவில்லை. மனிதர்களை, சமுதாயத்தை, காதலை எல்லாவற்றையும் அலசி ஆராய்ந்து உள்ளார்.

அம்மன் திருவிழாவில் அப்துல்காதர் தலைமை தாங்க
அய்யாசாமி வடம் பிடித்திழுப்பார்
அங்கே ஆடுகளை அம்மனுக்கு பலியிடுவார்.
இன்றோ அங்கே பலியிடப்படுவது ஆடுகளையல்ல

படிக்கிறபோது மனித சமுதாயத்தில் ஒற்றுமை சீரழிந்துவிட்டது தெரிகிறது, சமுதாயத்தை சாடும் போது,

மனிதர்களை அழித்துவிட்டு
மயானத்தை ஆட்சி செய்ய முடியாது
முதலில் மனிதர்களை நேசியுங்கள்
பிறகு மற்றவற்றை நேசிப்போம்.

உண்மைதான் மனிதர்களை நேசிக்கச் சொல்லித்தர வேண்டிய நிலையை உணர்த்துகிறார். இவர் இன்று புதுமையாக நுழைந்ததாலே நாளை இலக்கிய வானில் வலுவாக காலை ஊன்றுவார் என்ற நம்பிக்கை உள்ளது. இன்றைய இளைஞர்களை போல் இலக்கிய வானில் பறக்கத் துடிப்பது எனைப் போன்ற கவிஞர்களுக்கு சிறப்பாகவே உள்ளது. இவரின் பயணம் வெற்றியடைய என்னுடைய வாழ்த்துக்களோடு மேலும், மேலும் இவர்களிடமிருந்து இது போன்ற நல்ல கருத்துக்கள் அடங்கிய கவிதைகளை எதிர்பார்க்கிறேன்.

*ஆவூர் எஸ். ஏ. சர்புதீன் பாட்சா எழுதிய 'ஒரு தென்றலின் பயணம்' என்னும் நூலுக்கு 1998–இல் வழங்கிய அணிந்துரை.*

## தமிழ்த்தாயின் மடியில்

நல்ல விதைகளாக மண்ணில் விழுந்தால் அது செடியாகி, கொடியாகி, மரமாகிறது. சமுதாயம் பயன் பெறுகிறது. நல்ல கருத்துக்களாக கவிதையில் விழுந்தால் அது மனத்தில் பதிவாகி மக்களின் வழிகாட்டியாகவே விளங்குகிறது. நூற்றுக்கணக்கான கவிஞர்களை, ஆயிரக்கணக்கான புத்தகங்களை இந்த நூற்றாண்டு கண்டிருக்கிறது. ஆனால் பத்துப் பதினைந்து கவிஞர்கள், அதே எண்ணிக்கையிலான புத்தகங்கள் மட்டுமே நினைவுக்கு வருகிறது. நெஞ்சில் நிற்கிறது.

எழுதப்படுகிற கவிதைகளின் எண்ணிக்கை, எழுதிய புத்தகங்களின் எண்ணிக்கை மட்டுமே க்விஞனை அடையாளங் காட்டுகிற செயல்களாகச் சிலர் எண்ணிக்கொண்டு எழுதிக் குவித்திருக்கிறார்கள். தோல்வி கண்டிருக்கிறார்கள். திருக்குறளைப் போலவே சிறப்பான முறையில் சில நூற்களை மட்டுமே எழுதி என்றென்றும் மக்கள் மனத்திலும் இலக்கிய வரலாற்றிலும் சிலர் இடம் பெற்றிருக்கிறார்கள்.

தமிழ்த்தாய் வாழ்த்து தொடங்கி, விரும்புகிற கடவுள்கள், தலைவர்கள் ஒவ்வொருவருக்கம் ஒவ்வொரு வாழ்த்து, ஒரு காதல் பாடல், பொங்கியெழு என்கின்ற வகையில் ஓர் உணர்ச்சிப்பாடல் என எழுதுவது இயல்பான நிலை.

கவிஞர் இரா. புனிதன் வெளியிட்டிருக்கும் தமிழ்த்தாயின் மடியில் என்கிற இந்தக் கவிதை நூலில் குருதிக் கொடை, விதியோடு விளையாடுவோம், வரவும் செலவும், உழைப்பு, நேசித்த நிமிடங்கள் போன்ற சிறந்த கவிதைகள் இடம் பெற்றிருக்கின்றன. சிந்திக்கும் முறையால், எழுதும் வகையால் சிறப்பான நிலையை அடைவதற்கான அடையாளங்கள் இவரது கவிதைகளில் தெரிகின்றன. இவரது முயற்சி வெற்றி பெற வாழ்த்துகிறேன்.

*கவிஞர் இரா. புனிதன் எழுதிய 'தமிழ்த்தாயின் மடியில்' என்னும் நூலுக்கு 1998–இல் வழங்கிய அணிந்துரை.*

## 'கஸ்தூரி ராசாவின் கவிதைகள்!'

"வெய்யில் வட்டாரம் நீலவான் என்றால்
செய்யுள் வட்டாரம் செந்தமிழ் நாடு"

அந்த வட்டாரத்தில் வலம் வந்தது தான் சங்க இலக்கியமாகும். சங்க காலத்தில் ஔவையார், நக்கண்ணையார், அங்கவை, சங்கவை, வெள்ளிவீதியார் போன்ற பெண்பாற் புலவர்கள் சிறந்து விளங்கினர்.

பிற்காலத்தில், பக்தி இலக்கியத்தில் காரைக்காலம்மையாரும், ஆண்டாளும் இடம் பெற்றுள்ளனர்.

இந்த நூற்றாண்டில் திருமதி கவிக்குயில் சௌந்தரா கைலாசம், டாக்டர். கலைமாமணி. சரளா இராசகோபாலன், கலைமாமணி அரசு மணிமேகலை, டாக்டர் பொன்மணி வைரமுத்து, டாக்டர் நிர்மலா சுரேஷ் போன்றவர்கள் கவிதையுலகில் தொண்டாற்றி வருகின்றனர்.

ஆண்பாற் புலவர்களைவிட பெண்பாற் புலவர்கள் கவிதை எழுத முன்வரவேண்டும் என்று பாவேந்தர் பாரதிதாசன் அடிக்கடி என்னிடம் கூறுவார். அந்த எண்ணத்தை நிறைவேற்றிய பெண்பாற் புலவர்களில் 'கஸ்தூரி ராசா' அவர்களும் குறிப்பிடத் தக்கவர்.

"அணிந்துரை வேண்டும்" என்று என்னை அணுகியபோது, நான் நூலுக்கு என்ன பெயர் என்று கேட்டேன். அதற்கு அவர்கள் சிந்திப்பதாக கூறினார்கள். நான் உங்கள் பெயரிலேயே 'கஸ்தூரி ராசாவின் கவிதைகள்' என்று பெயரிடுமாறு கூறினேன். அதை ஏற்றுக் கொண்டு 'கஸ்தூரிராசாவின் கவிதைகள்' என்று இந்நூலுக்குப் பெயர் வைத்துள்ளனர்.

கஸ்தூரி என்பதற்கு மணம் என்று பொருள். புகழுக்கும் மணம் என்ற பொருளுண்டு. மணக்கும் பெயரைக் கொண்ட மங்கை

மாதரசி 'கஸ்தூரி ராசா' அவர்கள். எடுத்துப் ப்டிக்கப் படிக்க மணக்கும் கவிதைகளை இந்நூலில் படைத்துள்ளார்.

'நாட்டு நலம்' என்ற தலைப்பில், மனிதன் இன்று செய்ய வேண்டியது என்ன என்பதைக் கவிஞர் கவிதை வரிகளில் வடித்துள்ளார். இதனை.

**"கலப்பு மணத்தைக் கடிமணம் என்றே**

**கலக்கம் இன்றிப் பின்பற்றல் வேண்டும்" என்கிறார்.**

பெண்ணின் இன்றைய நிலையை 'எந்நாளோ' என்ற தலைப்பில் வெளிப்படுத்தியுள்ளார். மெய்ப்பாடுகளைக் காட்டி கவிதையில் தம் முத்திரையைப் பதித்துள்ளார்.

**"இருவர் நகைப்பு புதிய பிறப்பு**

**இளையவள் என்றதும் தாய் பரிதவிப்பு"**

என்ற அடிகளில் பெண் குழந்தையைச் சமுதாயம் வெறுக்கும் இழிநிலையை இதய முருகப் பாடுகிறார்.


'உன்வரவு நல்வரவு' என்ற தலைப்பில், தை பிறந்தால் வழி பிறக்க வேண்டுமென்று கவிஞர் குறிப்பாக உணர்த்துகிறார். இதனை,

**........."தையும் வந்தது தையல்**

**கவலை தீர்ந்தது: மனமும் இணைந்தது" என்று கூறுகிறார்.**

டாக்டர். கஸ்தூரி ராசா அவர்கள் மணக்கும் கவிதைகளைப் படைத்து, மேலும் மேலும் சிறக்க வாழ்த்துகிறேன்.

*கவிஞர் கஸ்தூரி ராசா அவர்கள் எழுதிய 'கஸ்தூரி ராசாவின் கவிதைகள்' என்னும் நூலுக்கு 1998–இல் வழங்கிய அணிந்துரை.*



## கவியன்பன் கவிதைகள்

நண்பர் மத்தூர் கவியன்பனின் கவிதைகளைப் படித்தேன். பாவேந்தர் பாரதிதாசன் கவிதைக்கு விதைகள் முளைத்துப் பூத்த மரபு நந்தவனமாகவே கவிதை முழுவதும். நண்பர் கவியன்பன் இளைஞர்; நல்ல சிந்தனையாளர்; பகுத்தறிவுவாதி. இவருடைய திருமணம் என் தலைமையிலேயே நடந்தது. திருமணத்திற்குத் தலைமை தாங்கிய என்னை முன்னிலைப்படுத்தி திருமண அழைப்பிதழை கவிதையிலே அமைத்திருந்த பாங்கு மெச்சத்தகுந்தது.

வெள்ளித் தமிழே விழி! என்ற ஈற்றடியோடு தமிழ் மொழியைப் போற்றுகிறார். 'மானுடம் வெல்லவேண்டின் மதங்களைத் தோற்கடிப்போம்' என மதங்களைச் சாடுகிறார்.

**நாவையே பற்கள் வெட்டி**
**நறுக்குதல் என்ன நீதி?**

என்ற இதயக் குமுறலை குருதிக் காட்டில் கொட்டுகிறார். எது மே நாள்? எனக் கேட்டு.

**இடியட்டும் முதலாளி ஆதிக்கந்தான்**
**இணையட்டும் தொழிலாளர் தோள்களுந்தான்**

என உழைக்கும் வர்க்கத்தை ஒன்றுபடுத்திப் பார்க்கிறார்.

**தப்பியிங்கு வந்தமொழி தாய்த்தமிழைத் தாழ்த்துவதா?**
**தடந்தோளா! புறப்படடா தீய்ப்போம்!**

என இந்திக்கு எதிராக முழக்கமிடும் இவர் வரிகள், இவரின் தமிழ்ப்பற்றை பறைகொட்டி நீட்டுகிறது.

முதுகிழமும் ஆசையுறும் போது நாங்கள்
முழுநிலவு, வெளிச்சத்தை எங்கடக்க

எனப் பெண்ணுரிமை பேணுகின்ற வரிகள் பாரதிதாசன் சாயலுக்கு வேர்விடுகிறது.

திருவிளக்கும் மாவிளக்கும் கல்சாமிக்கு
தெருவிளக்கும் இல்லையடா ஆசாமிக்கு

இவை வரிகளா? இல்லை இவர் இருப்பு வைத்திருக்கின்ற ஈரோட்டுப் பெரியாரின் பகுத்தறிவு வெடிகள்.

நூலகத்தை அத்தை மகளாக்கி அழைக்கிறார் பாருங்கள்!

புத்தகமாம் பல்காட்டி பூவை நீ சிரித்தபோது
அத்தைமகள் சிரிப்பெல்லாம் அத்தனையும் மறந்ததடி

நாளும் நாட்டை அச்சுறுத்தும் எய்ட்ஸ் நோயைச் சாடுவதில்கூட இவர்சிந்தனையைச் செலவழித்திருப்பது இவர் போற்றும் சமுதாய ஒழுக்கத்திற்கு வெளிச்சம் போடுகிறது.

நாயாய் நீயும் நான்கு பக்கமும்
நக்கும் வாழ்வை கற்காதே - அட
தேயா உடலைத் தேய்த்து தேய்த்தே
தேனாம் வாழ்வை விற்காதே

வயதால் மூத்து விடாமல் சிந்தனையால் முதிர்ந்து விட்ட இக்கவிஞனின் படைப்புகளில் மொழியுணர்வு, இனவுணர்வு, பகுத்தறிவு இவைகள் ஒன்றினை ஒன்று முந்துகிறது. இவர் முயற்சி வெல்க! வளமான எதிர்காலம் இவருக்குக் காத்திருக்கிறது என வாழ்த்துகிறேன்.

இந்த நூலை வாங்கி தமிழ் உணர்வாளர்கள் பயன்பெற வேண்டுகிறேன்.

*கவிஞர் கவியன்பன் எழுதிய 'கவியன்பன் கவிதைகள்' என்னும் நூலுக்கு 1998-இல் வழங்கிய அணிந்துரை.*

## ஏழிசைப்பாடல்கள்

17ஆம் நூற்றாண்டில் தஞ்சை வேதநாத சாஸ்திரியார் சரபோஜி மன்னரிடத்தில் அரசு கவிஞராக இருந்தார் 1787-1864ல் மேலான குலத்தவர்களைக் கண்டித்துக் கீர்த்தனைகள் பாடியவர். சமுதாயச் சீர்திருத்தவாதியாக வாழ்ந்தவர் ஆவார். நிலவுக்குப்போக வழிகாட்டியும் ஆவார்.

மாயூர் வேதநாயகம் பிள்ளையும் இசைப்பாடல் எழுதியவர். சீர்காழி அருணாசலக் கவிராயர் கீர்த்தனைகள் எழுதியவர். 20ஆம் நூற்றாண்டில் பாரதிதாசன், கவிமணி தேசிக வினாயகம்பிளளை பிற்காலத்தில் இசைப்பாடல்கள் எழுதி புகழ் பெற்றவர்கள். கு.ச. கிருஷ்ணமூர்த்தி, கு.மா. பாலசுப்பிரமணியன், கம்பதாசன், சந்தக் கவிமாமணி தமிழழகன் என். எஸ். சிதம்பரம் என்னும் சுத்தசத்துவாநந்தன் என்பவர் என்னோடு படித்தவரும் ஆவார். பழனி இளம்கம்பன் இந்தத் தலைமுறைக்கு கீர்த்தனைகள் மூலம் இந்து சமுதாயத்தை இவர் வளர்த்தவராவார், இந்த வரிசையில் வல்லம் மா. பழனி என்பவரும் ஆவார். இவர் எழுதிய எழிசைப்பாடல்களில்

**தலைமையாகி நிலைமை பேசும் தலைவா–நீ**
**நிலை மாறி பேசுவது சரியா?**

எனத்தலைமை வகிப்பவனைக் கேட்கின்றார்.

**"மண்ணாளும் மனிதனுக்குப் பெண் ஆளும் ஆசையே**
**பொருந்தாத வாழ்வில் வரும் தினம் பல ஓசையே"**

என வாழ்வில் வரும் நிகழ்ச்சிகளைக் கூறியுள்ளார். அடுத்து

**யார் ஆட்டம் எதுவானால் நமக்கென்ன போடா**
**எப்போதும் நீ காட்டும் மனப் பேதம் தாண்டா**

**பாராட்டுப் பெற்றுப் பலர் உள்ளம் ஏற்றும்**

**பண்பாட்டைக் காத்த சிலஉள்ளம் காட்டுமே**

என உள்ளத்தின் நிலைைய கூறுகிறார்.

இப்படிச்சட்டம், சமூகம், ஆட்சி, சீர்திருத்தம், மேன்மை, வழிபாடு கனிவகைகளில் பல இருப்பது போல இவர் எழுதிய பாடல்கள் இனிமைதரும் விதமாக உள்ளது.

கம்பம் பீர் முகமது பாவலர் 1924-ஆம் ஆண்டிலேயே பெரியாரைப்பற்றிக் கீர்த்தனைகள் எழுதியுள்ளார். அதன்பின்தான் பெரியாரைப்பற்றிச் சிலர் எழுதியிருக்கிறார்கள்.

குறிப்பாகத் தான் பிறந்த ஊரைப்பற்றி வல்லம் மா. பழநி எழுதியுள்ளார். பரமக்குடி வித்வான் சிவராமலிங்கம் 1928-ல்தான் பிறந்த ஊராகிய பரமக்குடியைப் பற்றி எழுதியுள்ளார். இவருக்கு முன்னமே காவடி சிந்து அண்ணாமலை ரெட்டியார், அவர் பிறந்த சென்னிகுளத்தைப்பற்றி 1890-இல் எழுதியிருக்கிறார். வல்லம் மா. பழநியை நினைக்கின்றபோது மேற்கூறியவர்கள் நினைவு எனக்கு வருகின்றது.

நாமெல்லாம் மண்ணின் மைந்தர்கள். இவர்களைப் போலவே கவிஞர்கள் ஒவ்வொருவரும் தாம் பிறந்த ஊரைப்பற்றி அவரவர் பாடல்களில் நூல்வடிவம் பெறச் செய்ய வேண்டும்.


நான் பிறந்த பழையனூரைப் பற்றி ஒரு பாடல்கூட எழுதியதில்லை. வல்லம் மா.பழநி பாடல்களைப் பார்த்தபின் தான் நான் பிறந்த பழையனூரைப் பற்றி அடுத்து வரும் நூலில் எழுதவேண்டும் என்ற எண்ணம் எனக்கு உருவாகியுள்ளது.

கவிஞர்கள் இவரது இசைப் பாடலில் ஒன்றைத் தேர்ந்தெடுத்து தம் இல்லத்தில் கல்வெட்டில் இடம்பெறச் செய்ய வேண்டும். கல்வெட்டு கவிராயர் என்னும் புதுமைப் பெயரைப் பெற வேண்டும். என்று கேட்டுக்கொள்கிறேன். என் எண்ணத்தை நிறைவேற்றினால் புதிய புகழ் கிடைக்கும்.

1934இல் நந்தனார் படத்தில் கே.பி. சுந்தராம்பாள் பாடி ரூபாய். 1இலட்சம் வாங்கியவர் ஆவார். எஸ்.ஜி. கிட்டப்பா என்பவர் தன் திருமணத்தில் சமபந்தி போஜனம் நடத்தியவர் ஆவார். சி.எஸ். ஜெயராமன் முதல்வரின் மைத்துனர் ஆவார். எஸ்.வி.சுப்பையா

பாகவதர் திருவருட்பாவை இசைத்தட்டு வாயிலாகப் பாடிப் பரப்பியவர் ஆவார். இதே போல் சீர்காழி கோவிந்தராஜன், டி.எம். சௌந்தரராஜன், செம்மங்குடி சீனிவாசன், எம்.எஸ். சுப்புலட்சுமி, டி.கே. பட்டம்மாள் இவர்களைப்பற்றி மேற்கோள் காட்டி இந்நூல் பாடியிருந்தால் இன்னும் நன்றாக இருந்திருக்கும். வள்ளலார், இயேசு, புத்தர், கல்கி, சிவன், பார்வதி, விநாயகர், முருகன், சரஸ்வதி இப்படியும் பாடியுள்ளார். வாழ்க இவர் தொண்டு. ஓங்குக இவர்தம் புகழ்.

*கவிஞர் வல்லம் பழநி எழுதிய 'ஏழிசைப் பாடல்கள்' என்னும் நூலுக்கு 1998–இல் வழங்கிய அணிந்துரை.*



## சந்தித்த நாள் முதலாய்

நான் பள்ளியில் படிக்கின்ற பொழுது அடிக்கடி கவிதைகள் எழுதியிருக்கிறேன். ஆனால் அவற்றையெல்லாம் ஒரு நூலாகக் கொண்டுவர வேண்டுமென்று எனக்கு எண்ணமும் இல்லை. ஆசிரியர்கள் யாருமே ஊக்கம் அளித்ததுமில்லை. ஆனால் இலயோலா கல்லூரி மாணவர் கவிஞர் வேல்முருகன் இந்த சிறிய பருவத்திலேயே ஒரு சிறந்த நூலாக "சந்தித்த நாள் முதலாய்" என்ற கவிதை நூலை நமக்குத் தந்திருக்கிறார் என்றால், அது எனக்கு மிகவும் வியப்பைத் தருகிறது. இந்த நூல் இவருடைய முதன்நூலாக இருந்தாலும் ஒரு நல்ல கருத்தோட்டமுள்ள, இலக்கிய முத்திரை பதித்த நூலாகும். வேல்முருகன் கல்லூரிப் பருவத்தில் ஒரு மாணவராக மட்டுமில்லாமல் ஒரு நல்ல மறுமலர்ச்சிக் கவிஞனாகக் காணும்போது நான் மிகவும் பெருமைப்படுகிறேன்.

இவருடைய கவிதைகளைப் படிக்கும்போது இந்த நூற்றாண்டிற்கு மட்டுமல்லாமல் இன்னும் பல நூற்றாண்டுகளுக்கு ஒரு மாபெரும் மறுமலர்ச்சியை உண்டாக்கும் என்பதில் எனக்கு சிறிதும் ஐயமில்லை.

"நட்சத்திரங்களைப் பறித்து – நான்
நாற்று நட்டிடவேண்டும் – அந்த
நாற்றில் விளைந்த மணியை – என்
நாட்டிற்குப் பகிர்ந்திட வேண்டும்"

இதில் இவரின் நாட்டுப்பற்றில் நான் நனைந்தேன்.

"உழவர்களின் கரத்தில் – நான்
இரேகையாகிவிட வேண்டும் – அவர்

உழைக்கும்போது சிந்தும் - அந்த
வியர்வையாகிடவேண்டும்."

இந்த வரிகள் இவர் உழவர்களின் மீது வைத்துள்ளவற்றை பறைசாற்றுகிறது. பூரித்து விட்டேன்.

"இமைச் சிறகால் பறந்து நிலாவில்
இளைப்பாறிட வேண்டும்
இறங்கி வந்து இமய
இடுப்பி லமர்ந்திட வேண்டும்."

எல்லோரும் விண்ணுக்குச் சென்றால் மண்ணில் தான் இறங்கிட ஆசைப்படுவார்கள். ஆனால், இவரோ, இமயத்தின் இடுப்பிலமர ஆசைப்படுகிறார். இது வித்தியாசமே! இதுவரையில் இது என் ஊர்தான் என்று கவிதை எழுதியுள்ளார்கள். ஆனால் என்னுடைய முகவரி என்று எவரும் எழுதவில்லை. இவர் எழுதியிருக்கிறார்.

"வெண்ணிலவைப் பார்ப்பதென்றால் -என்
வீட்டிற்குள் வந்து பாருங்களேன்..."

இது புதுமை!

திருவள்ளுவர், கம்பர், ஒட்டக்கூத்தர், புகழேந்திப் புலவர், ஔவையார், தாயுமானவர், இராமலிங்க அடிகளார் ஆகியோர்களின் பிறந்த ஊர் மட்டும் தெரிகிறது. ஆனால் அவர்களின் சரியான முகவரி தெரியவில்லை. ஆனால் இவருடைய முகவரி வரும் எல்லா நூற்றாண்டுகளுக்கும் எல்லாருக்கும் தெளிவாகத் தெரியவரும். இந்த முத்திரைக் கவிஞர் முகவரியில் ஒரு முத்திரையே தெரிகிறது.

"பஞ்சத்தை ஒழிக்க முடியவில்லை
பட்டினியை விரட்ட முறையுமில்லை
வீராப்பு மட்டும் ஏராளம் - ஆனால்
வெறுங்கையை வீசுது பாரதம்."

இதில் இவர்பட்டினி கிடக்கும் பாரதத்தைப் படம் பிடித்துக் காட்டியிருக்கிறார். பெண்களுக்கு ஏற்படும் அவல நிலையை வெளிப்படுத்த,


"வரதட்சணை என்ற வழக்கினாலே - அவள்
வாடிக்கிடப்பதோ சிறையினிலே
சிறையில் கிடப்பது எத்தனை நாள் - அவள்
சிறகொடிந்து தவிப்பது எத்தனை நாள்."

என்ற இவரின் ஆதங்கத்தை எல்லோரும் சிந்திக்க வேண்டும். இன்னும் உலகம் முழுவதும் உயிர்க்கொல்லி நோய் பரவிக்கொண்டு இருக்கிறது. இதற்கு இவர் "எயிட்ஸ்" எனும் புதுக்கவிதையில் ஒரு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறார்.

"கண்ணடித்து பேசுது உன் பொன்னகைகள் - என்னைக்
கண்ணடிக்க வைக்குது உன் புன்னகைகள் - உந்தன்
புன்னகையை கண்டிட்ட ஒரு மாத்திரத்தில் - என்னை
பூராவும் இழந்திட்டேனந்த சூத்திரத்தில்."

என்ற இக்கவிதை மூலம் காதலி(யி)ன் நெஞ்சத்தையே தொடுகிறார். இதிலிருந்து இவர் காதல் கவிதைகளிலும் கைதேர்ந்தவர் என்று காட்டியிருக்கிறார். மிக இனிமை. இன்னும் இப்படியாக புதுக்கவிதையிலும், மரபிலும் நல்ல நல்ல தலைப்புகளில் நல்ல நல்ல கவிதைகளை சுவையுடன் எழுதியிருக்கும் கவிஞர் வேல்முருகன் இந்த இலக்கிய உலகில் ஒரு வெற்றிமுருகனாக வருவார். வரவேண்டும் என்று என் நெஞ்சார வாழ்த்துகிறேன்.

*கவிஞர் இரா.வேல்முருகன் என்ற வேலவன் எழுதிய 'சந்தித்த நாள்முதலாய்' என்னும் நூலுக்கு 1998-இல் வழங்கிய அணிந்துரை.*



## உருவாக்கம்

வாணியம்பாடி அடுத்த வெள்ளக்குட்டையில் பிறந்த கவிஞர் வசந்தராஜனின் கவிதைகள் முதன் முறையாக "உருவாக்கம்" என்ற பெயரில் நூலாக்கம் பெறுகின்றன. புகழ்பெற்ற எழுத்தாளர் வையவன் அவர்களின் தம்பியான இவர், உயர்நீதிமன்ற வழக்கறிஞர். எனக்கு வேறு சில வழக்கறிஞர் ஆன கவிஞர்களின் நினைவு வருகிறது. 1852இல் கவிதை நூல் எழுதிப் புகழ்பெற்ற

1. திண்டிவனம் இராமசாமி ராஜு, பார்-அட்-லா,
2. கரூர் திருவாசகமணி கே.எம். பாலசுப்பிரமணி
3. முன்னாள் அமைச்சர் கும்மிடிபூண்டி கா.வேழவேந்தன்

தற்போது வெள்ளக்குட்டை வசந்தராஜன்

வானிலிருந்து காற்று, காற்றிலிருந்து நெருப்பு, நெருப்பிலிருந்து நீர், நீரிலிருந்து மண் என்று உருவாக்கங்கள் தொடர்கின்றன.

கவிதை, கதை, கட்டுரை, நாவல், சிறுகதை, நாடகம் - அனைத்துமே ஒரு சிந்தனையின் உருவாக்கம்தான். நூலின் தலைப்பு இவ்வாறு என் சிந்தனையை கிளறிற்று.

கவிஞர் வசந்தராஜன் வித்தியாசமானவர். எடுத்த எடுப்பிலேயே "என்னுரையாய் ஒரு புதுக்கோலம்" கவிதையில் ஒர பிரகடனம் செய்கிறார்.

"கனவுகள் வாழ்கின்றன
கருவல்ல என் கவிதை;
அனுபவங்கள் பேசுகின்ற
அத்தியாயம் என் கவிதை!"

தன்னுரையில் கவிதைக்கோலம் போட்ட வசந்தராஜன் கோலத்தையே ஒரு கவிப்பொருளாக்கிய புதுமை என்னை மிகவும் ஈர்த்தது.

"பிறரை உள்ளே அழைக்க
வீடு
வாசற்படி வைத்துக் கொள்ளும்
இவளோ
வாசறப்படிக்கு முன்பே
வரவேற்புரை எழுதிவைக்கிறாள்."

கோலத்தை வரவேற்புரையாகப் பார்த்த கவிப்பார்வையில் திளைத்த நான், மிகச் சிறந்த கவிதையாக ரசித்தது பேனா [அல்லது] மைக்கூடு. இதில்-

"எனக்கு ரத்தமிருந்து
என்ன பிரயோசனம்?
உன் மூடி திறக்காவிட்டால்
நான் முட்டாள்தானே!" என்கிறார்.

சுரண்டல் கவிதையில்-

"பக்தனைச் சுரண்டும்
தெய்வங்கள்...
தெய்வத்தைச் சுரண்டும்
பக்தர்கள்..."

என்ற பார்வை வீச்சு என்னைச் சிலிர்த்துச் சிந்திக்க வைத்தது. உலகில் யார் யார் யாரைச் சுரண்டுகிறார்கள் என்பதை புதுக்கவிதையாக்கி உணர்த்துகிறார்.

'ஒரு மெழுகுவர்த்தியும் தீக்குச்சியும்' கவிதை முதிர்ந்த மரபு நோக்கும், சீறிப்பாயும் நவீனப் பார்வையும் இணைந்தது.

"முன்னரே சாம்நாள் முனிதக்க மூப்புள"

என்ற நாலடியார் வரியை எனக்கு நினைவூட்டியது பின்வரும் வரிகள்.

உ

"மனிதர்களைப் போலவே

நம்முடைய மரணம் கூட

நாம் உற்பத்தியாகும் போதே

நிச்சயிக்கப் பட்டதுதான்."

'வீடு திரும்பும் நேரம்' கவிதை - *15* ஆண்டுகளுக்கு முன் நான் தலைமையேற்ற ஒரு கவியரங்கில் ஒரு கவிஞர்

"சூரியனுக்குச் சுடுகாடு

மேற்கு வானம்" என்று பாடினார்.

அந்த வரிகளால் கவரப்பட்டு நான் உடனே என் சட்டைப் பையிலிருந்த ஒரு பத்து ரூபாய்த்தாளை எடுத்து அவருக்குப் பரிசளித்தேன்.

வசந்தராஜாவின் இந்தக் கவிதையில்,

"வான மரத்திலே

எத்தனை வெள்ளிப்பூக்கள்

என் தோட்டத்தில்கூட

முல்லை

இப்படித்தான் பூத்திருக்கும்"

என்று பொழுது சாய்ந்து வீடு திரும்பும் நேரத்தில் குடும்பத் தலைவன் நினைக்கிற கவிப்பாங்கிற்கு பத்தாயிரம் ரூபாய் பரிசளிக்கலாம்.

'மின்னல் கோடுகள்' கவிதையில் எந்தத் தலைப்பில் உள்ள கவிதையை வேண்டுமானாலும் எடுத்து, கல்வெட்டில் பொறிக்க வேண்டும் என்று சிபாரிசு செய்வேன்.

"அழுக்கு" கவிதையின் ஆழமும், அழகும், சிந்தனை வளம் மாணவரிடையே பெருக பாடநூலில் இடம்பெறச் செய்வது தமிழக அரசின் கடமை.

"கடன்படு இந்தியனே" கவிதை, இன்றைய இந்திய அரசியல் நிலையை கவிப்பார்வை கூர்ந்து கவனித்த பதிவுகள் பொதிந்தது.

"இங்கு கொள்கை என்பது

யார் கூட்டு சேருகிறார்கள்

என்பதை வைத்து
தீர்மானிக்கப்படுமாம்!"
"நாட்டு நலம்" என்பது
இங்கு விஷயம் தெரிந்த
சில வேடதாரிகள் நடத்தும்
ஒரு நாடகத்தின் தலைப்பாம்!"

'காகிதப் புன்னகை' கவிதை- முத்தமிழ் வித்தகர் டாக்டர் கலைஞர் அவர்கள் திரைப்படம் ஒன்றில் 'காகித ஓடம்' என்று ஒரு பாடல் எழுதினார்.

வசந்தராஜனின் 'காகிதப் புன்னகை' என்ற கவிதை என் எண்ண மின்னலைப் பளிச்சிட வைத்தது கலைஞர் காகிதத்தை ஓடமாக்கினார்.

வசந்தராஜன் காகிதத்தைப் புன்னகையாக்கினார். உயிரில்லாத ஒரு புன்னகைக்கு இவர் கவித்துவம் உயிர் கொடுத்திருக்கிறது.

'நேற்று என்பது இறந்த காலமல்ல' கவிதையில்

"நேற்று என்பது
என்னிடம்
நிற்காமல் சென்றிருந்தால்
என் வாழ்வில்
இன்று என்பதே
இல்லாமற் போயிருக்கும்."

என்ற கருத்து மிக அருமை!

'எழுத்து' கவிதை மிகமிகச் சிறப்பான கவிதை என்பதற்கு,

"எந்த விதிக்கும்
யாருக்கும் பணியாத
ஒரே படைப்பு
இந்த உலகில்
எழுத்து மட்டும்தான்"
"உலகின்

எல்லா நாடுகளிலும்
எழுத்து ஒன்றுதான்
உண்மையான
சுதந்திரப் பிரகடனம்"

என்ற வரிகளே சான்றுகள்.

இந்த நூற்றாண்டில் கவிஞர்களின் எண்ணிக்கை பெருகத் தொடங்கியது பாவேந்தர் பாரதிதாசனுக்குப் பிறகுதான். "பாரதிதாசன் பரம்பரை" என்பது 47 கவிஞர்களை உள்ளடக்கியது. அவர்களில் நானும் ஒருவன்.

அடுத்த தலைமுறையின் முன்னணி வரிசையில் வசந்தராஜனும் நிற்கிறார். மண்ணையும் விண்ணையும் தொடுகிற கவிவீச்சு இவரிடம் தெரிகிறது.

தமிழில் புதுக்கவிதை வளரத் தளம் அமைத்தவர்கள் கவிஞர் கம்பதாசன், வல்லிக்கண்ணன், எழுத்து சி.சு. செல்லப்பா, பின்னர் தொடர்ந்த கவிக்கோ அப்துல் ரகுமான், கவியரசு நா. காமராசன், கவிஞர் மு. மேத்தா, கவியரசு வைரமுத்து, இன்குலாப், இவ்வரிசையில் வசந்தராஜனும் இடம் பெறுகிறார்.

63 நாயன்மார்களைப் போல 63 புதுக் கவிஞர்கள் உருவாகி நாட்டுக்கு நல்ல கருத்துக்களைச் சொல்லி வருகிறார்கள்.

'புதுக்கவிதைப் புகழேந்தி'யாக, வசந்தராஜன் வரும் நூற்றாண்டில் ஒளிவீச வேண்டுமென்று வாழ்த்துகிறேன்.

*கவிஞர் வசந்தராஜன் எழுதிய 'உருவாக்கம்' என்னும் நூலுக்கு 1998–இல் வழங்கிய அணிந்துரை.*



## விடியல் வெளிச்சம்

கவிஞர் தாமரைப் பூவண்ணனை நான் பல்லாண்டுகளாகவே அறிவேன். நல்ல கவிஞர், நற்பண்புள்ளவர். மொழிப் பற்றும் நாட்டுப்பற்றும் இவர் எண்ணங்கிளல் செயல்களில் முதன்மை பெற்றுள்ளன. இவர் கவிதைகள் சமுதாயத்தை படம் பிடித்துக்காட்டும். பாவேந்தர் பட்டயம், உழைப்புச் செம்மல், கவி நிலா போன்ற விருதுகளை பெற்றுள்ளார்.

இவரின் கவிதைகள் "விடியல் வெளிச்சம்" நூலாக வெளிவருவதை வரவேற்று மகிழ்கிறேன். வெளிச்சத்தில் பல வெளிச்சங்கள் இருந்தாலும் "விடியல் வெளிச்சம்" எனும் தலைப்பு மிகச்சிறப்பானது. இருட்டை விரட்டி விடியல் தரும் முதல் வெளிச்சமே சூரிய வெளிச்சம்தான். சூரியனை கண்டால்தான் தாமரை மலரும். நூலின் தலைப்புக்கும் நூலாசிரியர் பெயருக்கும் மிக தொடர்புண்டு என்பதாலே இந்த நூல் மிக சிறப்பாக வந்துள்ளது. நல்ல தலைப்பு விடியல் வெளிச்சம் சூரியனின் வெளிச்சத்தை காட்டுகிறது.

உலகத்தின் இருட்டை விரட்டும் சூரியனைப் போல, தாமரையின் கவிதைகள் சமுதாயத்தின் கெடுதலெனும் இருட்டை விரட்டும். மலர்களிலே தலைமை தாங்கும் தாமரைப்பூ போல, இந்த தாமரைப் பூவண்ணனும் கவிஞர்களுக்கு தலைமை ஏற்பார். 21-ஆம் நூற்றாண்டிற்கு கவிஞர்களை அழைத்துச் செல்வார். இவர் எழுத்தில் எழுச்சி உண்டு என்பதால் மகிழ்ச்சியுடன் வாழ்த்துகிறேன். இவரிடம் எதிலும் வெல்லும் திறனுண்டு என்பதால் எப்போதும் பாராட்டுவேன். தமிழ், தமிழின் நிலைஉயரஉழைத்திடும் விடியல் வெளிச்சம் வாழ்க!

*கவிஞர் தாமரைப்பூவண்ணன் எழுதிய 'விடியல் வெளிச்சம்' என்னும் நூலுக்கு 1999–இல் வழங்கிய அணிந்துரை.*

## தமிழ்மணம்

1895-ஆம் ஆண்டு திருமண அழைப்பிதழைக் கவிதை வடிவில் அச்சிட்டுத் தந்தவர் வேலூரைச் சார்ந்தவர் ஆவார். பெரியாருக்கு உறுதியாக அவருடைய கொள்கைகளுக்கு உறுதுணையாக இருந்தவர்கள் வேலூரைச் சார்ந்தவர்களே. மேலும், சுதந்திரப் போராட்டம் முதன் முதலில் துவங்கியதும் வேலூர்தான் என்றால் சிறிதும் ஐயமில்லை.

சிறந்த சிந்தனையாளர்களையும், சிறந்த படைப்பாளிகளையும் தன்னகத்தே கொண்டது வேலூர். புதுமைகளைச் சிந்திப்பவர்கள் பாரதிதாசனைப் போன்று அவருடைய வாரிசுகளாக கவிதையுலகில் மின்னுபவர்கள் பலர் இருக்கின்றனர். அவர்களுள் கெ. பாலமுரளி என்பவரும் ஒருவர். பகுத்தறிவுக் கருத்துக்களைத் தம் கவிதை மூலமும் முழு நிலவு நாளில் திருக்குறள் கூட்டங்களைத் தொடர்ந்து ஐந்து ஆண்டுகளாக நடத்தி வருபவர். மிகவும் சுறுசுறுப்பான இளைஞர், எதையும் விரைவில் செய்யவேண்டும் என்று விரும்புபவர்.

"தமிழ்மணம்" எனும் தொகுப்பினில் தமிழ் மணம் பரவக்கூடியது. பூமணம் என்றால் ஒரே நாளிலே வாடிவிடும், ஆனால், தமிழ்மணம் தரணி உள்ளவரை வாடாது. இத்தொகுப்பில் பங்கு பெற்றுள்ள கவிஞர்கள், கவிக்குரிசில் வே. இரா. சிவஞானவள்ளல் மிகவும் சிறந்த கவிஞர். மரபுக் கவிதைகள் எழுதுபவர்களில் குறிப்பிடத்தக்கவர். சிறந்த குழந்தைக் கவிஞரும் ஆவார். புலவர் பார்த்தசாரதி அவர்களும் சிறந்த கவிஞர். மரபுக் கவிதைகள் புனைவதில் வல்லவர். புலவர் முனிசாமி அவர்கள் பாரதிதாசனின் மாணவர், சிறந்த புலமை மிக்கவர், பிரெஞ்சு மொழி பேசுவதிலும், எழுதுவதிலும் வல்லவர்.

இந்நூலை நான்கு கவிஞர்கள் கூட்டு முயற்சியோடு செய்துள்ளனர். அவர்களுக்கு என் வாழ்த்துக்கள்.

*கெ. பாலமுரளி தொகுத்த 'தமிழ் மணம்' என்ற நூலுக்கு 1999–இல் வழங்கிய அணிந்துரை.*

## தீர்ப்பைத் திருத்திய தீர்ப்புகள்

கவிஞர் ரவிதாசன் இந்த நூற்றாண்டின் உச்சியில் வாழும் உயர்ந்த கவிஞர். என் தலைமையில் பல கவியரங்கங்களில் பாடியிருக்கிறார். ஒவ்வொரு கவியரங்கிலும் என் பாராட்டைப் பெற்றிருக்கிறார்.

1975இல் என் தலைமையில் பாடிய கவிஞர் வைரமுத்து, இன்று எவ்வளவு உச்சியில் இருக்கிறார் என்பது உங்களுக்கே தெரியும். அதைப்போலவே 1992இல் என் தலைமையில் பாடிய கவிஞர் ரவிதாசனும் இரண்டாவது வைரமுத்தாக வருவார்.

முதல் புத்தகமாக, "இரவைத் தேடும் நிலவைகளை"யும், இரண்டாவது புத்தகமாக "நிர்வாணப் பூக்களையும்" தந்த இவர், மூன்றாவதாக "தீர்ப்பைத் திருத்திய தீர்ப்புகளை"த் தந்திருக்கிறார்.

கவிப்பேரரசு வைரமுத்து எழுதிய ஒரு கவிதை நூல் "திருத்தி எழுதிய தீர்ப்புகள்" என்பதாகும்.

இவர் எழுதியிருக்கும் இந்த நூல் பெயர். "தீர்ப்பைத் திருத்திய தீர்ப்புகள்" இருவருக்கும் புத்தகத்தலைப்பிலும் ஒற்றுமை இருக்கிறது; புகழிலும் ஒற்றுமை இருக்கிறது.

புதியதலைமுறை வரவேற்கக்கூடிய மிகச் சிறந்த கவிதைகளைப் படைத்துள்ளார் ரவிதாசன்.

'கவிதை' என்னும் தலைப்பில் அமைந்த கவிதை வரிகளையும், 'தீர்ப்பைத் திருத்திய தீர்ப்புகள்' என்ற கவிதையின் வரிகளும், 'இது சிரிக்கும் காலமல்ல' என்ற கவிதையில்,

"ஆன்மீகம் காட்டிலும்
அரசியல் புனிதம்

ஏன்தாழ் வானது

எலிகளே அதிகம்"

என்ற வரிகளும், சுப்பிரமணிய சிவா பற்றிய கவிதைகளும் வரலாற்றை வெளிப்படுத்துகின்ற வரிகளாகும்.

இதுபோன்ற வரிகள் கல்வெட்டாக வைத்தால் நன்றாக இருக்கும் என்று கருதுகிறேன்.

இவர் புவிதாசனாக இல்லாமல் ரவி (சூரியன்)தாசனாக இருக்கிறார். கோள்களுக்கத் தாசனாக இருப்பது விஞ்ஞானத்தை வளர்ப்பதாகும்.

கவிஞர் ரவிதாசனின் கவிதைகளைச் சூரிய மேடையில் அரங்கேற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கவிஞர் ரவிதாசன் போன்ற திறமையான கவிஞர்களின் நூல்களை வெளிநாட்டிலும் வெளியிட வேண்டும். விண்வெளியிலும் அரங்கேற்ற வேண்டும், அதுவும் என் தலைமையில் அரங்கேற்ற வேண்டும்.

என்னுடைய நண்பர் நடிகர் சிலோன் விஜயேந்திரன் அவர்களின் மாணவனாக இருப்பதால், நடிப்பிலும் இவர் பல பரிசுகளையும் பாராட்டுகளையும் பெற்றது குறிப்பிடத்தக்கது.

'ஓர் இதயத்தின் தீர்ப்புகள்' என்று ஒரு குறுங்காவியத்தைச் சிறப்பாக எழுதியுள்ள தம்பி ரவிதாசன், பாவேந்தரைப் போல் புரட்சிகரமான கவிதை நாடகங்களை 21ஆம் நூற்றாண்டில் அரங்கேற்ற வேண்டும்.

*கவிஞர் ரவிதாசன் எழுதிய 'தீர்ப்பைத் திருத்திய தீர்ப்புகள்' என்னும் நூலுக்கு 1999–இல் வழங்கிய அணிந்துரை.*

## பாப்பா பாப்பா பாடவா

மங்கை ஒருத்திதான் ஒரு பெண் குழந்தைக்குப் பாட்டு எழுதுவது நல்லது. ஒரு பெண்ணைப் பற்றி ஒரு பெண்ணே சொன்னால்தான் சரியாக சொல்ல முடியும்.

1925-லேயே பாவாணர் குழந்தைப் பாடல் எழுதினார் அதைப்போல, காவேரிப்பாக்கம் நமச்சிவாய முதலியாரும் குழந்தைப்பாடல்களுக்கு முன்னோடியாய் இருந்திருக்கிறார் நூற்றாண்டுகளுக்கு முன் என்று எடுத்துக் கொண்டால் ஔவையார் தான் முதற்குழந்தைகவிஞர் என்று சொல்லலாம் குழந்தைப் பாடல்கள் எழுதிய பெண்பாற் புலவர்கள் வரிசையில் இவரும் சேர்கிறார்.

ஏரி என்ற பாடலிலே ஏரியைப்பற்றி கூறும்பொழுது ஏரியைப் பற்றி சில உதாரணங்களைக் கூறியிருந்தால் சிறப்பாக இருந்திருக்கும். ஏரியைப்பற்றி எழுதும்பொழுது குறிப்புகள் இருக்க வேண்டும். உதாரணமாக, நாமக்கல் ஏரியை இரண்டு தாசிகள் தான் வெட்டி வைத்தார்கள், இப்படி எழுதும்போது, நமக்கு வரலாற்றுச் செய்திகள் கிடைக்கின்றன.

பொதுவாக சமூகத்திற்கும், குழந்தைகளுக்கும் சொல்லியிருக்கிறார் நிலவுக்கு போக வேண்டும் என்று முதன் முதலாக வள்ளலார் சொல்லியிருக்கிறார். ஒரு துறவியே நிலவுக்குச் செல்ல வேண்டும் என்று ஆசைப்பட்டிருக்கிறார். அது இப்பொழுது நடைமுறையாகிவிட்டது. இப்படி அறிவியல் கருத்துக்களை இளம் வயதிலேயே ஊட்டலாம்.

தன்னை அறிந்து... வெண்ணிலாவே... ஒரு தந்திரம் நீ சொல்ல வேண்டும் வெண்ணிலாவே நாதம்... வெண்ணிலாவே அங்கு நானும் வரவேண்டும் வெண்ணிலாவே"

ஒரு துறவிக்கு விஞ்ஞான ஆசை வந்திருக்கிறது புதிய கோணத்திலே சிந்திக்கிறார். அதுபோலப் புதிய புதிய கோணங்களில் சிந்திக்க வேண்டும்.

1925-இல் பாவாணர் கெல்லட்பள்ளியில் பணியாற்றியபோது அவரது குழந்தைப்பாடல் நூல் வெளிவந்தது. அந்த நூலால் அந்த பள்ளியே பெருமை பெற்றது. அதைப்போல இந்த அம்மையாரால் அவரது பள்ளிக்கும் பெருமை சேர வேண்டும்.

பாப்பா பாப்பாவாக இருந்து பருவ மங்கையாக ஆகின்றாள், அதைப்போல இவர் இவரது முதல் நூலான குழந்தைப்பாடல் நூலில் இருந்து பெரிய நூல்கள் வரை எழுதி வளர வாழ்த்துகிறேன்.

இவரது பாடலில் ஏதாவது சிறந்த இரண்டு வரிகளை எடுத்துக் கல்வெட்டாக செய்து இவரது இல்லத்தில் வைக்க வேண்டுகிறேன்.

*கவிஞர் விசாலாட்சி அன்பழகன் எழுதிய 'பாப்பா பாப்பா பாடவா' என்னும் நூலுக்கு 1999—இல் வழங்கிய அணிந்துரை.*



## பெரியார் பிள்ளைத் தமிழ்

"மண்ணுக்கு மரம் பாரமா" திரைப்பட பாடல் மூலம் அறிமுகமான கவிஞர் பி.கே. முத்துசாமி பெரியார் பிள்ளைத்தமிழை வெண்பாவால் படைத்திருக்கிறார். நல்ல முயற்சி- எழுச்சி 'பெரியார் பித்தன்' என்பது இதன் மூலம் விளங்குகிறது.

முதன் முதலில் வெண்பாவால் பிள்ளைத் தமிழ்ப் படைத்திருக்கிறார். மேலும் பெரியார், அண்ணா, கலைஞர், இயேசு இவர்களைப் பற்றிய காப்பியங்களை வெண்பாவால் படைத்துக் கொண்டிருக்கிறார்.

புதுகவிதை எழுதி புலவர், கவிஞர்களாக வந்து, வளமிளிரும் இந்தக்கால கட்டத்தில் இவர் மரபு கவிதைகளால் அஃதும் வெண்பாவால் படைத்துக் கொண்டிருக்கும் இவர் துணிவை பாராட்டாமல் இருக்க இயலாது. இதிலும் தமிழ்த்தாய்ப் பெற்றத் தவச் சேய்களின் தலைசிறந்த - சாதி மதமற்ற தன்மானத் தந்தை பெரியாரைப் பற்றிப் பிள்ளைத் தமிழும், காப்பியமும் படைத்திருக்கிறார்.

இவர் படமெடுக்க வந்து, பாட்டெழுதி, கவிஞர் ஆனார், 1956-இல் நாங்கள் அறிமுகமானோம். இரண்டு படங்களில் இருவரும் இணைந்து பாடல்கள் எழுதியுள்ளோம். இதயம் நிறைந்து, இணைந்த நண்பர்களாகியிருக்கிறோம்.

பெரியாரை பிள்ளைத்தமிழில் பாடியது மகிழ்வாக இருக்கிறது. நான் யாரையும் வாழ்த்தி வரவேற்பது என் தலைவன் தந்தை பெரியார் பாதையில் சரியாது, சரியாகச் செல்பவர்களைத்தான் தெளிவுபடுத்துவேன். தொடர்ந்து செல்ல, செயல்பட. இக்கவிஞன் இன்றுவரை எத்தனை இடர் தொடரினும், தமிழ் எழுச்சி இம்மியும் இளகாது தம் எண்ணத் தொடரில் இடையுறாது ஏறுநடையிடுபவர்.

தந்தை பெரியாரின் தலை சிறந்த தொண்டர்களில் இவரும் ஒருவர். இக்கவிஞன் எழுதிய மண்ணுக்கு மரம் பாரமா என்ற திரைப்படப் பாடலை எத்தனை இலட்சம் பேர் கேட்டு மகிழ்ந்திருப்பார்கள்.

இக்கவிஞனுக்கு3-10-98-இல் தஞ்சை திருவையாறு தமிழய்யா கல்விக் கழகம் 'வெண்பாவேந்தர்' என்ற சிறப்பு விருதும், பொற்கிழியும் வழங்கி சிறப்பித்திருக்கிறார்கள். தமிழ் பிறந்த காலம் தொட்டு இன்றுவரை யாரும் பெறாத பெரும் பேறாம் வெண்பா வேந்தர் விருது பெற்றிருக்கிறார்.

பெரியாரை மழலைச் செல்வமாக்கிப் பிள்ளைத் தமிழ்ப் படைத்திருக்கிறார் கவிஞர். கற்பனைத் திறனுக்கு அவர் படைத்த வெண்பாக்களில் சில

மூவகை முத்தமிழாய் முப்பாலின் முக்கனியாய்
நாவில் நயமுறும் நட்பாளன்! – சாவிலான்
சாதி யொழிப்பிலே சர்வமும் தம்முன்னே!
ஓதி வருகைதா ராய்! – வருகைப் பருவம்

கூடுவிட்டுக் கூடுற கொட்டி வைத்த முத்தமெல்லாம்
மாடாடு மாந்திரிடை வந்ததையா! – பாடுபடும்
பாட்டாளி வர்க்கத்தில் பட்டொளிரும் முத்தமையா!
ஈட்டுவித்து முத்தமரு லே! – முத்தப்பருவம்

நாடாளும் நெஞ்சமில்லை நாணய நாசமில்லை
ஏடாளும் எண்ணமுமக்[கு] ஏராளம்! – பாட்டாளன்
ஊருலக மாந்தர் உயர்வாக்கும் உன்னத
நேரியனே செங்கீரை ஆடு! – செங்கீரைப் பருவம்

அறியாப் பருவத்தில் ஆத்திக வாத
நெறியிலே அய்யா நெகிழ்ந்து – வெறியரின்
வீண்செயல் வீழ்த்தி விவேக நிலைநிறுத்திக்
காண்பேரர்க் கெளிதானார் காண்!

*கவிஞர் பி.கே. முத்துசாமி எழுதிய 'பெரியார் பிள்ளைத்தமிழ்' என்னும் நூலுக்கு 1999–இல் வழங்கிய அணிந்துரை.*

## 'நிலாச்சோறு'

திருத்தணிகை முருகனின் திருத்தலம் என்பது புராணம். தமிழ் வளர்த்த இலக்கணப் பெரும்புலவர்கள் தோன்றி வாழ்ந்த சிறப்பிடம் என்பது வரலாறு.

சரவணப் பெருமாளையர், விசாகப்பெருமாளையர்!

இவர்கள் இருவரும் சைவ மரபினர். இருவரும் பல அரிய நூல்களை இயற்றியவர்கள்.

சரவணப் பெருமாளையர் இரவில் உறங்கும்போது. தலைமாட்டில் ஒரு புறம் திருக்குறள் நூலையும் மறுபுறம் தேவார நூலையும் வைத்துக் கொள்வார். விழிக்கும்பொழுது பிறர் முகத்தில் விழிக்காமல் இத்தமிழ் நூல்களைப் பார்க்க வேண்டும் என்பதே இவர் விருப்பம்.

இத்தகைய தமிழ்ப்பற்றாளர் வாழ்ந்த ஊரில் கவிஞர் தணிகைச் சிலம்பன் அவர்கள் வாழ்வது நல்ல பொருத்தமாகும்.

பள்ளி ஆசிரியராகப் பணிபுரிந்த இக்கவிஞர், மாணவர் நலத்தையும் அவர்கள் பெற வேண்டிய பண்புகளையும் பழக்கங்களையும் பற்றி நன்கு அறிந்துள்ளார்.

மாணவர்கள் சிறப்பாகப் பயிலவேண்டும்; சிறந்த ஒழுக்கமுடையவராக வளர வேண்டும்; நல்ல முறையில் தமிழைக் கற்றுச் சிறக்க வேண்டும் என்று மிகவும் விரும்புகிறவராக இருக்கிறார். இப்படிப்பட்ட நல்ல உள்ளம் படைத்த ஆசிரியர் கவிஞராகவும் விளங்குகிறார். ஆசிரியர்களில் கவிஞராகச் சிலர் இருப்பதை வரலாறு காட்டுகிறது.

சிறந்த பண்பாளர் கவிமணி தேசிகவிநாயகம்பிள்ளை அவர்கள், சீர்திருத்தம் வளர்த்த புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள், மொழி

ஞாயிறு எனப் புகழ்பெற்ற தமிழிழறிஞர் தேவநேயப் பாவாணர் அவர்கள்.

இப்படிப் பலரை நினைத்துப் பார்க்கலாம்.

பேராசிரியை அரசு மணிமேகலை, பொன்மணி வைரமுத்து போன்ற பெண் மக்களும் நினைக்கத் தக்கவராவர்.

தணிகைச் சிலம்பன் எழுதியுள்ள மாணவர்க்கான பாடல்களைப் படித்தேன். இசையுடன் கூடிய சந்தப் பாடல்களாக நன்கு படைத்துள்ளார். எளிமையாய் எழுதுவது கடினம். இவர் இதில் தம் திறமையை நன்றாக வெளிப்படுத்தியுள்ளார். மாணவர்கள் சந்தத்தோடு பாடி ஆடி மகிழலாம்.

நூல் தலைப்பே நன்றாகவுள்ளது. நிலாச் சோறு தாய்மையையும் இளமையையும் நினைவூட்டுகிறது.

இக்காலத்தார் எழுத்துப் படைப்புகள், செய்தித்தாள்கள் பிழை மலிந்த தமிழாக வருவதைக் கண்டு மனம் துடிக்கிறார்; வருந்துகிறார்; அதைத் தடுத்து அழிக்க வழி காண்கிறார். வளரும் பள்ளி பிள்ளைகளிடமே அடிகோல வேண்டும் என எண்ணுகிறார்.

'உச்சரிப்பில் எச்சரிக்கை' வேண்டும் என்று வெவ்வேறு வகைகளில் விதவிதமாப் பிழை நீக்கும் முறைகளில் விளக்கம் கூறுகிறார். இவரது மொழிப் பற்றும், மொழி வளர்ச்சிக்கு உரிய விழிப்புணர்ச்சியும் ஊக்கமும் பாராட்டத்தக்கன. பிற ஆசிரியர்களும் இவ்வழியில் மனஞ்செலுத்தித் தாய் மொழித் தமிழைப் பிழை இன்றி எழுதவும் பேசவும் செய்தல் பெருங் கடமையாகும்.

காலக்குரல் எனும் தலைப்பில் அமைந்துள்ள கருத்துக்கள் கண்போல் காக்கத் தக்கவை; போற்றத்தக்கவை.

பேச்சாளராகலாம் எனும் தலைப்பில் உள்ள பாடலும் பாராட்டுக்குரியது. மாணவர்கள் படித்துப் பயன்பெற வேண்டும்.


தமிழறிஞர் கா. நமசிவாயர் எழுதியதைப்போல இவரும் கதைப்பாடல்கள் எழுதியுள்ளார். இதுவும் குறிப்பிடத்தக்கது.

தலைவர்களையும் அறிஞர்களையும் கவிஞர்களையும் இவர் பாடியிருப்பது மாணவர் மனத்தில் நிலைப்பதாகும்.

பல தலைப்புகளில் பல்சுவை விருந்து படைத்துள்ளார் என்பதே என் கருத்து. நிலாச்சோறு மாணவருலகத்துக்கு ஏற்ற நெய்ச்சோறு எனலாம்.

தணிகைச் சிலம்பன் கவிதைச் சிலம்பன் ஆகியுள்ளார். இவர் தொடர்ந்து தமிழ் விருந்து தர வேண்டும்; புகழ்பெற வேண்டும். பரிசுகளும் பாராட்டுகளும் பெற்றுக் கவியரசு கண்ணதாசன்போல் சிறக்க வேண்டும் என வாழ்த்துகிறேன்.

*கவிஞர் தணிகைச்சிலம்பன் எழுதிய 'நிலாச்சோறு' என்னும் நூலுக்கு 1999-இல் வழங்கிய அணிந்துரை.*



## வானருவி

நான் கரவு இல்லாத கவிச் சான்றோன் என்று என்னை கவிஞர் கடலூர் அ. தேவநாதன் அடிக்கடி பல கூட்டங்களில் சொல்லிப் பேசியிருக்கிறார். வெள்ளை உள்ளம் கொண்டவர் என்று பாராட்டி இருக்கிறார். இப்படிப்பட்ட நல்லவர்கள் நாட்டில் நெடுநாள் வாழ வேண்டும் என்று போற்றி இருக்கிறார்.

கவிஞர் கடலூர் அ. தேவநாதன் அவர்கள் "தமிழ் ழகரப் பணி மன்றம்" என்று தொடங்கி நடத்தி வருகிறார். அந்தப் பெயரே மிக மிக அற்புதமான ஒன்று என்று அடிக்கடி நான் அவரிடமும் பலரிடமும் கூறியிருக்கிறேன். அம்மன்றம் தேவையானபோது. திட்டமிட்டுத்த திறமைமிக்கவரால் தொடங்கப்பட்டுள்ளது. அதன் பெயர்ப்பலகையைக்கூட தான்தான் தொழிலாளர் நல வாரிய கருத்தரங்குக் கூடத்தில் நடந்த சுதந்திர நாள் பொன்விழாக் கவியரங்க மேடையில் முன்னிலை வகித்துத் திறந்து வைக்க உதவினேன். அன்றைய பொன்விழாக் கவியரங்கத்தைத் தலைமை ஏற்று, சட்டமன்றத்தை நடத்துவது போலச் செம்மையாக நடத்திக் காட்டிய திறமை, பெருமை இந்நூலாசிரியருக்கு உண்டு.

இவர் என் தலைமையில் ஏராளமான கவிதைகளைப் பாடியுள்ளார். அவற்றில் பல இந்நூலில் இடம் பெற்றுள்ளன. பல காணப்படவில்லை. இடம் இல்லை என்ற காரணத்தாலோ அல்லது சிறப்பாக இல்லையே என்ற காரணத்தாலோ அவை இடம் பெறாமல் போயிருக்கலாம். சிறப்பாக இல்லாததால் இடம் பெறவில்லை என்றால், இடம் பெற்றவை எல்லாம் சிறப்பானவை என்று ஆகிவிடுகிறது.

சிலம்பொலி கடற்கரைக் கவியரங்கில் "வேள்வி பிறந்த விதம்" என்ற தலைப்பில் என் தலைமையில்தான் பாடினார். அந்தப் பாடல் மரபாக இல்லாவிட்டாலும், மனதைத் தொடும் கருத்தைச் சொல்லிப்

பாடினார். குளிரில் துன்பப்படாமல் அத்தனை குடும்பமும் குந்தி உண்டு. குளிரைப் போக்கிக் கொள்ளும் இந்த மகத்தான வழியைக் கண்டுபிடித்து மற்றவர்கள் மார் தேய மரம் ஏறி விறகு வெட்டிச்சேர்த்து வைத்ததை நோகாமல் எடுத்து வந்து ஒடித்துப் போட்டு நாள்கணக்கில், குளிர் காய்வதற்குப் பெயர்தான் வேள்வி என்று சொல்லி முடித்திருப்பார்.

அந்தப் பாடலைத்தான் பின்பு மரபுக் கவிதையாக இந்நூலில் மாற்றம் செய்துள்ளார். அதையும் வெண்பாவாகச் செய்து சேர்த்திருப்பது போற்றற்குரியது. இதில் சொல்லியுள்ள கருத்துக்களை பகுத்தறிவுக் கருத்துடைய ஒருவரும் இதுவரைக்கும்கூடக் கண்டு பிடித்துச் சொல்லவில்லை. இந்தக் கவிஞர்தான் முதன் முதலில் வேள்வி பிறந்த காரணம் என்ன என்று கண்டு சொல்லியுள்ளார்.

நான் தலைவராகவும், டாக்டர் சேப்பன் நிறுவனத் தலைவராகவும் இருந்துசெயல்பட்டு வரும் "திருவள்ளுவர் உலகத் தமிழ்ச் சங்கம்" செம்மையுடன் கூட்டங்களை நடத்த எங்களுக்கு மிகவும் உறுதுணையாக இருந்து உதவி செய்து வருவதைப் பாராட்டுகிறேன். இவர் எமது சங்கத்துக்குத்தான் என்று இல்லாமல் தமிழ் எழுத்தாளர் கழகம், முத்தமிழ் முற்றம், எழுத்துலகப் பெருமன்றம், முத்தமிழ் ஆய்வு மன்றம் என்று பல தமிழ் அமைப்புகளிலும் பங்கு கொண்டு தொண்டாற்றுவதை கண்டு பெருமை கொள்கிறேன்.

திருக்குறளுக்கு அறிவியல் முறையில் பொருள் எழுதி வெளி வரவேண்டும் என்றேன். முதற் குறளுக்குப் புதுமையான முறையில், அருமையாக அறிவுடன் சிந்தித்து விளக்கவுரை அளித்துள்ளார். இந்தக் கவிதை நூலில் முதல் கவிதையாக அது உள்ளது.

அவர் ழகரம் பற்றிப் பாடியுள்ள கவிதைகள் எல்லாம் எதைக் காட்டுகின்றன என்றால் அவர் தமிழ்மீதும், ழகரத்தின்மீதும் கொண்டுள்ள பற்றைப் பறைசாற்றுகின்றன.

இவர் என்னிடம் நெருங்கிப் பழகுபவர் என்பதால் இன்னும் எனது கவிதைப் பாணியைப் பின்பற்றிச் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அவர் பாடும் கவிதைகளில் அதிகமான உவமைகளைச் சொல்லி இன்னும் சிறப்பானதொரு நூலை விரைவில் அளிக்க வாழ்த்துகிறேன்.

3

"தூய் காற்றைத் துய்க்கின்ற போதே மாந்தன்,
துவளாது கெட்டதையே பிறர்க்குச் செய்வான்,
மாய் காற்றை உட்கொள்ளும் மாந்தனானால்
மண்ணளவு மடுவளவு செய்வான் கேடு.

என்று அருமையாக அறிவியல் நோக்குடன் பாடி இது போன்ற பல பாடல்கள் அளித்துள்ளார்.

"மண்ணில் பூத்த மண் மலர்கள் காற்றடித்தால்
வாடி நாற்புறமும் சிதறி ஓடுகின்றன.

காற்றில்லா அண்டத்தில் பூத்த விண்மலர்கள் வாடாமல் மேற்குத் திசையில் எப்படிப் பறக்கின்றன?" என்று கேட்டு, விடையையும் (தனது மரபில்லாக் கன்னிக் கவிதையில்) சொல்லி... இதைப்போல இன்னும்பல அறிவியற் கருத்துக்களை அழகாக வெளிக்கொணர்ந்துள்ளார். இப்படிப்பட்ட பகுத்தறிவுக் கவிஞர் பல்லாண்டு வாழ வேண்டும் என்று வாழ்த்துகிறேன்.

*ழகரப் பணிக்கவிஞர் கடலூரர் அ. தேவநாதன் எழுதிய 'வானருவி' என்னும் நூலுக்கு 1999–இல் வழங்கிய அணிந்துரை.*



## நெஞ்சில் பூத்த மலர்கள்

பயன்படுத்துவதைப் பொறுத்து மனிதமூளை, இனிக்கும் கரும்புக்கு இணையானது எனச் சொல்லலாம். கரும்பிலே வட்டக் கோடுகள் கொண்ட கரணைகள் பல உள்ளன. மனிதமூளையிலும் பல வகையான சிந்தனை வட்டங்கள் எழுவது உண்டு.

மூளை என்னும் கரும்பைப் பிழிந்து வரும் சாறு உரைநடை என்றால், அந்தச்சாற்றிலிருந்து வடிக்கும் வெல்லமே கவிதை என ஏன் கூறக்கூடாது?

அளவில் பெரிதான உரைநடைக் கரும்புச்சாறும், அளவில் சிறிதான கவிதை வெல்லமும் தமிழ் இலக்கியம் என்னும் பொங்கலை இனிக்க வைக்கத் தேவையானவை.

உரைநடையோ, கவிதையோ - எத்தகைய படைப்புக்கும் ஓர் இலக்கு என்னும் இலட்சியம் இருக்க வேண்டும். சிந்தனைத் தெளிவற்ற மந்தைக் கூட்டம் போன்ற மக்களை, விலங்குத் தன்மைகளிலிருந்து விடுவித்துக் கூர்மையும் நேர்மையும் கொண்ட அறநெறியுள்ள 'மனிதர்' நிலைக்கு உயர்த்துவதே எழுத்துப் படைப்புகளுக்கு இலட்சியமாக அமைதல் வேண்டும்.

இலக்கு இல்லாத கவிதையோ உரைநடையோ காலக் காட்டாற்று வெள்ளத்தை எதிர்த்து நிலைக்கவே முடியாது கற்சிலையாக!

இன்று தமிழ் நாட்டில் 'கவிஞர்' பட்டத்துடன் மற்றவர்களைக் கவரும் முயற்சியில் ஈடுபடுவோர் கணக்கில் அடங்கமாட்டார். தகுதியை வளர்த்துக் கொள்ளும் தாகம் இல்லாத அவர்களில் எத்தனைபேர் பழந்தமிழ் இலக்கியங்களை ஓரளவாவது பார்த்திருக்கின்றனர்? எத்தனைபேர் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் பாடல்களைப் படித்திருக்கின்றனர்? எத்தனைபேர் பேரறிஞர்

அண்ணாவின் நூல்களைப் படித்துத் தமிழ் மறுமலர்ச்சி நடையை அறிந்திருக்கின்றனர்.

இன்றைய இளங்கவிஞர்களில் எத்தனைபேர் 'பாடுவதற்கு ஏற்ற ஓசை அளவு உடையது தான் பாடல்' என்பதையாவது உணர்ந்திருக்கின்றனர்? எதுகையும் மோனையும் இணைந்து ஆட்சி செய்தால்தான் - இளமையும் எழிலும் கொஞ்சும் ஆணும் பெண்ணும் ஈன்றெடுக்கும் குழந்தையைப் போல-இனிமைகள் பொங்கும் பாடல் மலரும். இந்த எண்ணத் தெளிவோடு எத்தனைபேர் தங்கள் எழுதுகோல் நடனத்தை நடத்துகின்றனர்?

இத்தகைய அவல நிலையில் கவிஞர் வ.க. வெற்றிவேல் அவர்களின் படைப்பாற்றலில் பூத்துள்ள 'நெஞ்சில் பூத்த மலர்கள்' என்னும் நூல் நம் நெஞ்சத்தை மகிழ்ச்சி அருவியில் நீராட்டுகிறது.

இவருடைய பாடல்கள் எல்லாவற்றிலுமே, எதுகையும் மோனையும் எம்பிக் குதிக்கும் கடல் அலைகளைப் போலத் துள்ளி எழுந்துள்ளன;நம் உள்ளத்தில் இன்ப வெள்ளத்தைப் பாய்ச்சுகின்றன.

அதே வேளையில், தன்னல வெறியைத் தகர்க்கும் - பொதுநலச் சமுதாயப் பார்வையை ஊட்டும் - ஏதேனும் அறிவுரை அல்லது அறநெறி ஒவ்வொரு பாடலிலும் ஓங்கி நிற்கிறது; ஒளி வீசுகிறது.

பொதுவாக, ஆண்களிடம் உள்ள வெளியுலகப் பார்வையையோ பொதுப்பணி ஆர்வத்தையோ எல்லாப் பெண்களிடமும் எதிர்பார்க்க இயலாது. ஏனெனில். கூட்டுக்குள் முடக்கப்படும் புறாக்களைப்போல வீட்டுக்குள்ளேயே அடங்கிக் கிடந்து, கட்டிய கணவனையும் பெற்ற பிள்ளைகளையும் கவனிப்பதில் வரும் களிப்பே போதுமானது என வாழ்வதுதான் பெரும்பாலான பெண்களின் இயல்பு. அவர்களது மென்மையான உடல்கூறும் அதற்குகாரணமாக இருக்கலாம்.

அவ்வாறு சுருங்கிய வட்டத்திற்குள்ளேயே ஒடுங்கிக்கிடக்கும் பெண்களைத் தன்னலம் இல்லாத தொண்டுச் சுடர்களாக மாற்ற வேண்டும்; வீட்டுக் கடமைகளோடு நாட்டுப் பணிகளை ஆற்றும் நங்கையராக உயர்த்த வேண்டும்; இத்தகைய வேட்கையை

இந்நூலில் வரும் பல பாடல்களில் வீறு நடைபோடச் செய்திருக்கிறார் கவிஞர் வெற்றிவேல்.

'ஆணுக்குப் பெண்நிகராய்
ஆனதொரு காலம் - இந்த
அகிலத்தைப் பெண்ணாளும்
நாளுமிந்த நாளே!
'வானுக்குக் கலமேறிப்
பறக்கின்ற பெண்ணை- இந்த
வையத்தில் கண்டு நாமும்
பூரித்தது உண்மை."

- இந்த எழுச்சியூட்டும் வரிகள் 'பெருமை நிறைந்த பெண்' என்னும் பாடலில் (பக்கம் :26) இடம் பெற்று உள்ளன. இவற்றின் வாயிலாக, ஆடவரைப் போன்றே ஆரணங்குகளும் அரசியலில் ஈடுபட்டு நாட்டையும் ஆளமுடியும்; அறிவியலில் தேர்ச்சி பெற்று விண்வெளியையும் ஆள முடியும்; என்னும் தன்னம்பிக்கையை அண்மையில் நடைபெற்ற நிகழ்ச்சிகளைக் கொண்டே விதைக்கிறார் கவிஞர்.

இல்லறம் நல்லறமாக இனிக்கத்தக்க வழிகளையும் பாடல்களாக இவர் படைத்துள்ளார். குடும்பப் பெண்கள் தங்கள் கணவரையும் பிள்ளைகளையும் பேணிக்காப்பதைப் போலவே, மாமனார், மாமியார், கொழுந்தன், நாத்தனார் போன்ற உறவினரையும் மதித்துக் காப்பது எவ்வளவு இன்றியமையாதது என்பதையும் இவர் அழகுற அறிவுறுத்துகிறார்.

வரவேண்டிய மருமகள் பாடலின் (பக்கம்:53) வரிகள் இவை:

'அத்தையுடன் மாமாவை ஆதரிக்கும் பெண்ணாக
நத்திநாத்த னார்கொழுந்தன் நலம்காக்க வரவேண்டும்
உறவினர்தாம் வந்துவிட்டால் உற்சாகம் பெற்றவளாய்
பிறர்மனந்தான் நோகாமல் பேணுபவள் வரவேண்டும்.'

"பட்டுத் துணிக்குத் தனிப்பொலிவு தருவது சரிகை; பாட்டுத் துகிலுக்குத் தனி ஒளியைத் தருவது உவமை" என்பார் என் நண்பர் அ.மறைமலையான்.

கவிஞர் வெற்றிவேல் உவமைகள் மின்னும் பாடல்களை நெய்வதிலும் தேர்ந்த படைப்பாளியாகத் திகழ்கிறார். இதோ சில எடுத்துக்காட்டு வரிகள்:

**பொன்னழகு மேனியெலாம் மின்னல டிக்குது**
**பூங்குழலும் காற்றிலாடி மேகம் ஆகுது**
**பொன்மகளும் வாய்திறந்தால் முத்தும் தெறிக்குது**
**புருவமதோ உயர்வதனால் வில்லும் ஆகுது**

(பாடல்: அழகு அழுகிறது: பக்கம் 48)

தமிழ்ப் பெண் பாவலர்களில் தலைசிறந்தவராகத் திகழ்ந்தார் வெண்பாக்கள் பாடிய அவ்வையார். அவர் தென்மை மரத்தை நன்றிப் பண்புக்கு உவமைப் பொருள் ஆக்கினார். அதே தென்னையை நண்பர் வெற்றிவேல் எத்தகைய ஓவியமாக உருவகம் செய்கிறார் பாருங்கள்!

**தென்னைஇளம் மங்கையவள்**
**பெண்ணழகு கொண்டதையும்**
**பண்ணழகு செய்தேனடி யாப்பில் – அந்த**
**பெண்ணணங்கு நெஞ்சதனில்**
**வண்ணழகுக் கொங்கைகளும்**
**கண்ணிலாடிக் குலுங்குதடி தோப்பில்**

(பாடல் நெஞ்சில் பூத்த மலர்கள்: பக்கம்:22)

இந்த அணிந்துரையின் தொடக்கத்தில் சுட்டிக் காட்டியதைப் போன்று எதுகை- மோனை எழில்களை வடிக்கத் தெரியாதவர்கள் பலரும் 'கவிஞர்' என உலா வரும் இந்தக் காலத்தில் அந்த அருமையான சொல்லாட்சிகளை மிக எளிதாகக் கையாள்வதில் தம் பாடல்கள் மூலம் அவர்களுக்கு அறைகூவலே விடுக்கிறார் நண்பர் வெற்றிவேல்.

'அய்யாமுறைத் திருமணம்' (பக்கம் 61) 'தள்ளிவைத்த திருமணம்' (பக்கம் 67), 'கவிதைப்பெண்' (பக்கம்88) ஆகிய மூன்றுபாடல்களும் இரண்டு அல்லது நான்கு எதுகைகளோடு நின்றுவிடவில்லை. அய்யாமுறைத் திருமணப்பாடலில் 32 மற்ற

இரு பாடல்களிலும் 28 ஓர் இன எதுகைகளும் கொண்டதாக நீள்கின்றன. மூன்று பாடல்களும், எந்த எதுகையில் தொடங்கினதோ அதே இன எதுகை பாட்டின் இறுதிவரைக்கும் ஆற்றோட்ட நடைபயின்று அழகு பூக்குகின்றன. 'திருப்புகழ்' பாடிய அருணகிரிநாதர் கூட எட்டு எதுகைக்கு மேல் தாண்டியதாகத் தெரியவில்லை. இந்த வகையில் இணையில்லா எதுகைச் சிற்பியாக நம்மை வியப்பில் ஆழ்த்துகிறார் வெற்றிவேல்.

'அந்தாதி' வகைப்பாடல் புனைவதிலும் தமக்கு ஆற்றல் உள்ளதையும் அன்னமே! கலை வண்ணமே!" (பக்கம் 46) என்னும் பாடல் வாயிலாக இவர் மெய்ப்பித்துள்ளார்.

நெஞ்சில் பூத்தமலர்கள் என்னும் இந்நூலில் தமிழ்ப் புலமை மிகுந்தோர் இயற்றக்கூடிய மரபு வழியிலான விருத்தப்பாக்களையும் தாழிசைகளையும் பார்க்க முடிகிறது; யாப்பு இலக்கணம் அறியாத படிக்காத நாட்டுப்புற மக்களும் பாடத்தக்க சந்தங்கள் தாளமிடும் இசைப்பாடல்களையும் காண முடிகிறது. அத்தகைய இசைப்பாடல்களே நூலின் பெரும்பகுதியைப் பிடித்துக்கொண்டு உள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது.

'நல்லவரைப் போலசிலர்
நாடகந்தான் ஆடுகிறார்
நம்பி தான் கொண்டேனடி நட்பை- அவரும்
நஞ்சுடைய மனிதரென்று
நன்கறிந்து கொண்ட பின்னே
நான் அவரை ஒதுக்கினேன் குப்பை

(பாடல்: பட்டறிவு போட்டதடி விளக்கு: பக்கம் 149)

'அஞ்சி நடந்தவள் மிஞ்ச ஒலித்திட
செம்பு சுமந்திடுவாள் - பால்
தந்து பணிந்திடுவாள் - அவள்
செவ்வாய் இதழோரம் முல்லை மலர்ந்திட
நாணிக் குனிந்திடுவாள் - தன்
மேனி கனிந்திடுவாள்'

(பாடல்: மஞ்சம் பூத்த மலர்: பக்கம்: 94)

மக்கள் சமுதாயம் மூட நம்பிக்கைகளின் குப்பை மேடாக மாறிவிட்டதே என்று மனம் கொதித்தார் தந்தை பெரியார். எனவே பகுத்தறிவின் துணை கொண்டு அதனைத் துப்புரவு செய்யும் தூய பணியில் தம்மை முழுமையும் ஒப்படைத்துக் கொண்டார் அவர். பல்வேறு புரட்சித் திட்டங்களை அவர் பூக்கச் செய்தார். அவற்றுள் ஒன்று 'சீர்திருத்தச் சுயமரியாதைத் திருமணம்' அதனையும் இந்தக் கவிதை நூல் மாலையில் மணம் கமழும் மலராகத் தொடுத்துள்ளார் நண்பர் வெற்றிவேல்.

'அண்ணாவின் சட்டமுந்தான்
அமலில் இருக்கையிலே
அய்யாமுறைத் திருமணத்தை
நடத்தி முடிப்போமே!'

'அய்யாமுறைத் திருமணம் (பக்கம்:61) என்னம் பாடலில் வரும் இந்த வரிகள், கவிஞரின் சமுதாயச் சீர்திருத்த ஆர்வத்தைக் காட்டுகின்றன.

இருபதாம் நூற்றாண்டில்தான் வாழ்வியலை ஒட்டிய புதுமைக் கருத்துக்கள் பொலிகின்ற தமிழ்க்கவிதை நூல்கள் ஆயிரக்கணக்கில் பூத்துள்ளன. அவற்றுள், பெண்களைச் சுற்றியே எல்லாப் பாடல்களுமே நெய்யப்பட்ட இலக்கிப் பட்டாடையாக வெளிவந்துள்ள பாடல் நூல் நெஞ்சில் பூத்த மலர்கள். இதனை எழில் கொஞ்ச இயற்றியுள்ள கவிஞர் வ.சு. வெற்றிவேல் அவர்களை நெஞ்சாரப் பாராட்டுகிறேன். வாழ்த்துகிறேன்'

இவரது பெயருக்கு ஏற்பவே இவருடைய இலக்கிய முயற்சிகளும் வெற்றி பெறுவதாகுக!

*கவிஞர் வ.சு. வெற்றிவேல் எழுதிய 'நெஞ்சில் பூத்த மலர்கள்' என்னும் நூலுக்கு 1999–இல் வழங்கிய அணிந்துரை.*

## சிலம்புச் செல்வர் வரலாறு

தமிழ்நாட்டுத் தலைவர்களுள் நாட்டுப்பற்றும் மொழிப்பற்றும் நிறைந்த மிகச்சிறந்த தலைவராக விளங்கியவர் ம.பொ.சி. அவரின் சாதனைகளை உலகு நன்கு அறியும். கவிதை உலகுக்கு அவர் பெரிய ஆதரவை வழங்கி வந்துள்ளார்.

தமிழ்நாட்டின் புகழ்பெற்ற கவிஞர்களோடும் அவர் தொடர்பு கொண்டிருந்தார். ஏராளமான இளங்கவிஞர்களையும் வளர்த்துள்ளார். அவர் பின்னால் ஒரு பெரிய கவிஞர் படையே இருந்து வந்தது வரலாறு.

ஒரு மொழியில் 'கவிதை வடிவம்' என்பது நெடுங்காலம் நிலைத்து நிற்கும் ஆற்றலுடையதாகும். ஏற்கனவே, 'சிறுவர்க்கு - சிலப்பதிகாரம்' தந்த புலவர் சி. ஞானமணியை, சிலம்புச் செல்வர் வரலாற்றையும் எழுதுமாறு கேட்டுக் கொண்டேன்.

என் கருத்தை ஏற்று இந்நூலைச் சரியாகச் செய்துள்ளார். இத்தொண்டு மேலும் இவருக்குப் புகழ் சேர்க்கும் என உளமாரப் பாராட்டுகின்றேன்; வாழ்த்துகின்றேன்.

*சி. ஞானமணி எழுதிய 'சிலம்புச் செல்வர் வரலாறு' என்னும் நூலுக்கு 2000– இல் வழங்கிய அணிந்துரை.*

## துறவதிகாரம்

## [திருத்தாயகம்]

பொதுவாக தாயகம் என்போம். இந்த புதிய பித்தன் "திரு" என்கிற அடைமொழியையும் சேர்த்திருக்கிறார். முடிவில் "திருத்தாய் - அகம்" என்று தாழ்ந்து கிடக்கும் திராவிடர்களைப் பார்த்து அறைகூவல் விடுக்கிறார்.

தாய்-அகம் என்று தமிழ்த்தாய் - திராவிடத்தாய்- சக்திதாய் என்று மூன்று தாய்களைக் கண்முன் நிறுத்துகிறார்; பேசுகிறார். பொருமுகிறார். மனித தாயின் - மனைவியின்- பாவையின்"புறம்" நல்கும் பண்பைப்படம் பிடிக்கிறார். புதிய திராவிடம் படைக்கக் காதலையும், தாய்க் குலத்தையும் முதன்மைப்படுத்துகிறார்.

துறவதிகாரத்தில் திராவிடர்கள் - தம்மண்ணை, மொழியை, மூல மனுநீதிச் சோழன் நெறிமுறையை மறந்ததைத் துறந்ததைப் படம் பிடிக்கின்றார். வென்ற மண்ணை ஆளாத மூவேந்தர் தொடங்கி துறந்த ஒவ்வொன்றையும் பண்பாட்டு மையமாகக் காட்டுகிறார்.

மருள் மதம் முர்க்கமான தாக்கு. அருள் மதம் உருக்கமான சாக்கு. சர்ச்சை எழும்; தீப்பொறி பறக்கும். மறநாடு என்று மயங்குகிறார். கடந்த காலத்தைப் படம் பிடிக்கும் துணிச்சலான கண்ணோட்டம்.

திராவிடர்களின் ஆட்சிமொழி - ஒற்று மொழி- மறைமொழி தான் வடமொழி என்பது பித்தனின் துணிந்த கருத்து. அணு பிளப்பால் இலமூரிக் கண்டம் உடைந்தது என்று சொல்கிறார். பித்தனின் கற்பனை தானே! ஆனாலும் ஆங்கிலம், பாலி, பிரவாளம் என்று மொழிகளின் தாக்குதல்களைப் பார்க்கும்போது பித்தனின் ஆய்வுசரி என்று மொழி பொறுத்த மட்டில் தோன்றுகிறது. வடபுலத்

திராவிடர்களின் அம்புகளை அணுஉலைக் கணைகள் என்கிறார். மீனவச்சி மகன் வியாசர் திராவிடன் என்கிறார்.

## துறவதிகாரம்

தமிழே! நீ வாழ்க! என்று வாழ்ந்த நேர்ந்த தருணமென்று வந்தது என்று தயங்குகிறார். "துணையார் பித்தில் தமிழ் விட்டேன், தாழ்வுற்றேன்" என்று கலங்குகிறார் ஆங்கிலமே! வாழ்க! என்று வாழ்த்தும் பேரை எங்கும் கண்டதில்லை என்றுவியர்க்கிறார். நியூயார்க்கில் மீட் செய்யும் இரண்டு இண்டியன்சு - டமில்சு பற்றி சாட்டையடி கொடுக்கிறார். கடைச்சங்கம் என்று கடையாகி விட்டோம் என்று பொருமுகிறார். முத்தமிழுக்குப் புதிய மூன்றாக சுதந்திரம், சமத்துவம், சகோதரம் என்கிறார். மலையாளி, நிப்பானியர் மொழிப்பற்றைப் பாராட்டுகிறார்.

> **பொதுமனிதன் பொதுமக்கள் புரியா மொழியில்**
> **பேசுவது பெருமையென்னும் புன்மைப் பட்டோம்; (5:22)**
> **பிறர்மொழியில் பேசுவதால் புத்தி சாலி**
> **ஆங்கிலத்தில் ஆளுவதால் அய்யன் நானே! (5:23)**

என்று நிப்பானியர் மடல் பாடல்கள் அத்தனையும் எதார்த்தமானவை.

இராவணனும் இராமனும் கருப்பர் தமிழர் திராவிடர். இராமன் இலிங்கத்தை வணங்கியவன்! (அதாவது அவனுக்குப் பிறகே வைணவம்.. என்பதாக!)அசோகன் போர் துறந்தான். நீர் முடி துறந்தீர்! சமணர் ஆனீர்! ஏன் போர் பாடினீர்! என்று இளங்கோ அடிகளையும் வம்புக்கு இழுக்கிறார். வென்ற வடபுலத்தைப் பிற்காலச் சோழரும் ஏன் ஆளவில்லை? தமிழர் அனுராதாபுரத்தைப் பதினான்கு முறை வென்றனரே என்று அடுத்து வரும் ஈழத்துப் புரணிக்குக் கட்டியம் கூறுகிறார்.

அன்று செயங்கொண்டான்; இன்று பயங்கொண்டான் அன்று கருணாகரன் போர் முடித்தான். இன்று பிரபாகரன் போர் தொடுத்தான் என்று 240 சந்தப் பாடல்களில் பரணி பாடுகிறார். நிலம் திறப்பும், புலம் திறப்பும், பேய் தேடியதும், காளி நாடியதும் புதுமைப் படைப்பு.

முன்னெவரும் மண்ணகத்தில் தன்னுயிரை
மானத்தால் மனிதக் குண்டாய்ச்
சின்னமிடக் கண்டதில்லை செந்தமிழ்த்தாய்
சக்திவென்றி தானு கொளுமே! [8:239]

வீரத் தமிழர் ஈழத்தில்! சோரம் போனவர் சுதந்திர இந்தியாவில் - என்பது காட்டமான காட்டம்!

இந்திய வரலாற்றில் சமத்துவப் பயிர் வளர்க்கப்படவில்லை. அத்தினாபுரம், புகார், காஞ்சி, சென்னை என்று வரலாறு புரட்டுவது தனிபாணி. பட்டினப்பாக்கம் இங்குமுண்டு *(9:75)* என்று சென்னையைப் புகாரோடு ஒப்பிடும் முதல் கவிஞர் இவராக இருக்கலாம்.

ஆரியருக்கும் ஆயர்ச் சேரிக்கும் வடபுலத்தில் தொடங்கிய வாழ்க்கைத் தொடர்பை நூல்முழுதும் கொண்டு செல்கிறார். நல்லயுத்தி, முல்லை நில தெய்வம் கண்ணன் எப்படி மாபெரும் கடவுளாக உருவெடுக்கிறான் என்பதற்கு இந்த ஆயர்பாடி மடல் அடிக்கல் நாட்டும்.

வியாசர், இளங்கோ, நால்வர், பெரியார் என்று நான்கு கட்டங்களில் நான்கு தமிழ்ப் புரட்சிகள் நிகழ்ந்தன. புதியகோணம்! முதல்புரட்சி வடபுலத்தில் நடந்தது; தோற்றது. வியாசன் எழுத்து வடிவம் தர "கலப்பினத்தார்" தமிழைப் புறக்கணித்தனர். முத்தான புதிய பார்வை நான்காவது புரட்சி அண்ணாவுக்குரியது. இருபதாம் நூற்றாண்டில் தோன்றி நிகழ்ந்து வருவது.

துடிக்காமல் தமிழ்ப்புரட்சித் தொடரும் காலைத்
துடிக்கவிட்டு தலைக்கிடத்திப் போனார் அண்ணா! [11:18]
தொட்டகரம் விட்டகதைத் தொடர்வ தெந்நாள்
தொடங்கிவிட்ட தமிழ்ப்புரட்சித் தழைப்ப தெந்நாள்? [11:19]

திராவிடரின் மக்கள் மொழி (தமிழ்), ஆட்சிமொழி (மறைமொழியாகிய வடமொழி) என்று புதிய கருத்தைத் தருகிறார்) திராவிடரின் "இக்குணம்தான் பக்தி இன்று ஆங்கிலத்தால் பாடு!" *(15:15)* என்று சமூக மனையியலைப் படம் பிடிக்கிறார். நூலின் கருவுக்கு முதல் வெற்றிப்படி இது.

கல்வி கேள்வி கலைகளில் சிறந்த வாழ்வாங்கு வாழும் திராவிடர் பெறும் பட்டமே முப்புரிநூல்!

**வையம் சிறப்பிக்க முப்புரிநூல் சூட்டிடுவர்**
**ஐயர் பிறப்புவழி இல்.** [16:29]

திராவிடர்களின் குடும்பதெய்வக் கோட்பாட்டை நுணுக்கமாக விளக்குகிறார்.

**தாவில்லை... குறிப்பில்லை கொத்தினர்எங்கு உறைந்தாலும்**
**தோவில்லை துயரில்லை தொழுதுவரும் தெய்வத்தான்**
**மூலத்தில் எந்தகுடி மூண்டதென்று நெஞ்சுணர்வார்!** [17:22]

ஆயிரக்கணக்கான குடும்ப தெய்வங்களைப் புத்தத் துறவியர் தொகுத்தனர் என்று முழங்குகிறார்.

**அவ்விதம் செய்தது பெரும்புரட்சி**
**அருமைத் திராவிடர் சிலைபுரட்சி**
**பவ்வியப் புத்தத் துறவியர்போல்**
**பெரும்பணிசெய்தவர் எவரும்இல்லை!** [17:32]

தெய்வங்களுக்கு ஊர்திகள் ஏன் என்று திராவிடரின் சுற்றுச்சூழல் காரணத்தை முன்வைக்கிறார்! அரிய பார்வை!

**படையும் நடுங்கும் பாம்பினத்தைப்**
**பரம சிவன்தான் காத்து நின்றான்**[18:28]
**துப்பாக்கித் தோட்டாச் சுடுமுறையால் வெம்புலிபோல்**
**உப்பாக்கி விட்ட உயிர்பலவாம் –ஒப்பிடுவீர்!**
**விஞ்ஞான மாந்தர் வெறும்சூழல்; தொன்கருப்பர்**
**மெய்ஞ்ஞானம் நல்லரவம் சான்று!** [18:42]

திருநீறின் மருத்துவம் பற்றிய மேன்மைக் குறித்து திராவிடச் சித்தர் சைவர்களைப் போற்றுகிறார். பேறில்லா நாமம் என்றே சுட்டுகிறார். சிந்திக்க வேண்டிய சித்த மருத்துவம். பரிணாம வளர்ச்சியாக இரணியன் முதல் பெரியார் வரை எட்டு கால கட்டங்கள் நாடக பாணியில் அரங்கிடுகிறார். முட்டாள் நாள் நிகழ்ச்சிகள் சிரிக்க வைக்கின்றன. சாட்டையடி கொடுத்துச் சிந்திக்கவும் வைக்கின்றன.

**யாப்படை வென்றால் நமக்கென்ன!**

**யார்நமை ஆண்டால் இனிஎன்ன!**

**பார்வீதி பரமன் கையிலன்றோ!**

**பாரத எழுத்துப் பழுதுவதே!** [20:65]

"நாடோடி வந்த இயல்பின்னும் வீறும்!" (20:71) என்கிறார். கலப்பினத்தாரின் 3000 ஆண்டு பரிணாம வளர்ச்சியைப் படம் பிடிக்கிறார். சீர்திருத்தவாதிகளும் நோக்காத கோணம்! நெஞ்சைப் பிளக்கும் பரிணாமம்! பண்பாட்டு வரலாற்றுப் பார்வைக்கு இந்த ஒரு மடலே காட்டியம் கூறும்!

சமயப் புரட்சிகள் மூன்றை முறைப்படுத்துகிறார். சைவமதம் தொன்மையானது. காலம் பல கோடி நூற்றாண்டு என்கிறார் அடியார்கள் பாணியில்! இரணியன் தொடங்கி புத்தன் வரை வைணவத்திற்கு 200 ஆண்டுகள் தருகிறார். பிறகு 1300 ஆண்டுகள் புத்தமதம் நிற்கிறது.

**முதலாம் சமயப் புரட்சியிதாம்; முன்னோர்**

**நுதலான் சமயநெறி வாழ்வாம் - புதிய மதம்**

**வைணவம் என்றதால் வாழ்ந்திருந்த செம்முறையும்**

**சைவம் எனப்பகர்ந்தார் சார்ந்து.** [21:25]

**புத்தன் எழுந்தான் புதுநெறிஎண் வாழ்வுமுறை**

**சித்தம் படித்தான் புரட்சியிட்டான் - அத்துமிற**

**சாடிய வேத சனாத்தனர்வாய் மூடியதே**

**கூடிய ஞானஒளி கோப்பு.**[22:31]

காலடி சங்கரர்தான் சைவம் - வைணவம் சேர்த்து இந்துமதம் செய்தார்.

**பின்வந்த ஆங்கிலர் பேர்ஒன்று வேணும்என்று**

**முன்மொழிந்த பேர்இந்து எனலாகும்-தொன்கிரேக்கர்**

**இந்தியா என்றுபெயர் இட்டார் அறிவீரே!**

**முந்திநா டுற்றபெயர் வேறு.** [22:36]

புத்தன் அருளால் வைதீகரை வாழ விட்டான்; சங்கரர் மருளால் சமணர்-பௌத்தரைக் கழுமரம் ஏற்றினார்- அகிம்சை-இம்சை என்றே

இரண்டு மதங்களையும் சுட்டுகிறார். தெரிந்த வரலாற்றுச் செய்திதான். அதிர வைக்கிறது. இந்தியாவின் பண்பாட்டு வரலாற்றின் மூன்றாம் திருப்புமுனை இது.

**உற்றார் உறவினர் சுற்றம் உயிர்அனைத்தும்**
**வெற்றாய்க் கொலைசெய்ய போரெடுத்தான்- குற்றம்கேள்!**
**ஆன்மன் நிலைப்பாம் அதனால் கொலையிலையாம்**
**வீண்மண் குரல்கண்ணன் வீடு. [24:43]**

வைணவ சைவ சமயத் தெய்வங்களுக்கு இரண்டு மனைவிகள் ஏன் எப்போது ஏற்பட்டது என்று புலன் ஆய்கிறார். "மக்கள் தொகை மிக தொகைமிக மண்ணில் குறைந்ததடீ!" *(27:1)* என்று சங்கரரின் ஏழாம் நூற்றாண்டைக் கண்முன் நிறுத்துகிறார்! "பித்தா! பிறைசூடு!" என்று கூட்டும் காரணம் புதிய பார்வைதான்! நியூட்டனின் விஞ்ஞானப்படைப்புகளைப் பட்டியல் கோடிட்டுக் காட்டுகிறார். *(27:14)*

**மக்கள் தொகை பெருகி ஐரோப்பா மாற்றமுற**
**திக்கும் புதுஉலகு தான்! [28:49]**

என்று அமெரிக்கா, ஆஸ்திரேலியா கண்டங்களைக் கண் முன் நிறுத்துகிறார். ஐரோப்பா வழியில் இந்தியாவில் மக்கள் தொகைப்பெருக்குகிறதே என்று கொதிக்கிறார். புதிய நிலத்துக்கு எங்கே போவோம்?" "சூலை இனித் தடுப்பார் யார்?" *(29:41)* என்று ஜவகர்லால் நேருவையும் தராசில் ஏற்றுகிறார். ஆரியரின் மனப்போக்கைப் படம் பிடிக்க இருக்கு வேதப்பாடல்கள் மொழிபெயர்ப்பு அருமை!

மொழி பெயர்க்கப்பட வேண்டிய நூல். வேதிப் பொறியியல் படித்து, பொறியியலில் முனைவர் பட்டம் பெற்று, அதன்வழி நின்று, தமிழ்த்துறையோடு எந்தவகைத் தொடர்பும் இல்லாமல் ஒரு தலைமுறைக்குமேல் வந்து வாழ்ந்துவிட்டவர் இயற்றிய நூல். திராவிட இயக்கக் கழகங்கள் அனைத்தும் விளம்பரம் செய்ய வேண்டிய நூல். தமிழ்கூறும் நல்லுலகம் ஆதரவு நல்க வேண்டிய நூல்.

*கவிஞர் பிறன்மொழிப்பித்தன் எழுதிய 'துறவதிகாரம் (திருத்தாயகம்)' என்னும் நூலுக்கு 2000இல் வழங்கிய அணிந்துரை.*

## பூம்பொதிகை

கவிதைகளின் தரத்தைவிட, கவிஞர்களின் எண்ணிக்கை உயர்ந்து வருகிற காலம்.

அதிகமாக எழுதவேண்டும் என்பதைவிட பயனுள்ளதாக சில எழுதினாலே சிறப்பானது என்று கருதுபவன் நான்.

எதைச் செய்தாலும் சிறப்பாகச் செய்ய வேண்டும் என்று எண்ணுகிற, எண்ணியதைச் செய்து முடிக்கிற பேராற்றல் படைத்த கவிஞர் ஆ. திருவாசகன் அவர்கள் ஓய்வில்லாமல் உழைப்பவர். எதைத் தொடங்கினாலும் அதைத் தொடர்ந்து செய்து வருபவர்.

நான் உட்பட எத்தனையோ பேர் இதழ் தொடங்கி அதைத் தொடர்ந்து வெளியிட முடியாமல் விட்டுவிட்டோம். ஆனால் தான் தொடங்கிய 'வீரசைவ முரசு' இதழினை பல்வேறு இன்னல்களுக்கிடையே தொடர்ந்து வெளியிட்டு வருபவர்.

அதைப்போன்றே தாம் தொடங்கிய அருள்சுடர் பதிப்பகத்தின் வாயிலாக ஆண்டுதோறும் தரமான தமிழ் நூற்களை வெளியிட்டும் வருகிறார்.

இதுவரை நான்கு கவிதைத் தொகுதிகளை எழுதிவெளியிட்டு நாற்திசையும் புகழ்பெற்று விளங்கும் கவிஞர் ஆ. திருவாசகன் அவர்கள் திருவாசகத்திற்கு சிறப்பான உரையெழுதியும், பாவேந்தர் பாடல்களை முழுமையாக தொகுத்து வெளியிட்டும் தமிழ் இலக்கிய உலகில் பெரும்புகழைச் சுமந்து நிற்பவர்.


'தேனாரம்' தந்த திருவாசகன் அவர்கள் 'பூம்பொதிகை' என்ற அருமையான கவிதைப் படையலை இப்போது தமிழுக்கு வழங்கியிருக்கிறார்.

மரபும், புதுமையும் கலந்த இந்த தொகுப்பு காலத்தை வென்று நிற்கும் கவிதை நூல்.

எளிமையும், இனிமையும் கலந்து எழுதும் திறமையைப்பெற இந்த நூலை இளங்கவிஞர்கள் படிக்க வேண்டும்.

சிறந்த நூலைப்படைத்த கவிஞரை வாழ்த்துகிறேன். பாராட்டுகிறேன்.

*கவிஞர் ஆ. திருவாசகன் எழுதிய 'பூம்பொதிகை' என்னும் நூலுக்கு 2000-இல் வழங்கிய அணிந்துரை.*



## முகமது மைதீன் கவிதைகள்

முகம்மது மைதீன் அவர்களை நான் பன்னெடுங்காலமாக நன்கறிவேன். நான் மட்டுமன்று, நான் மதிக்கும் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்களாலும் இவர் மதிக்கப்பெற்றவர்; பாராட்டப் பெற்றவர்.

புரட்சிக்கவிஞர் வாழ்ந்த காலத்திலேயே அவர் தலைமையில் உருவாக்கப்பட்ட தமிழ்க்கவிஞர் பெருமன்றத்தில் இவர் செயற்குழு உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப் பெற்றவர். பின்னர், என் தலைமையில் தமிழ்க்கவிஞர் பெருமன்றத்தின் சார்பில் நடந்த கவிதைப் பேட்டியில் குடவோலை முறையில் முதற்பரிசு பெற்றவர்.

எளிதில் நான் யாரையும் கவிஞன் என்று ஒப்புக் கொள்ளுவதில்லை. ஆனால், நான் ஒப்புக்கொள்ளும் கவிஞர் இவர். அளப்பறிய ஆற்றல் கொண்ட இவரைத் தமிழகத்தின் தலைசிறந்த கவிஞர் என்று புகழ்வதில் பெருமகிழ்வடைகிறேன்.

இவர் என் தலைமையில் பல கவியரங்கங்களில் கலந்து பாடிப் பரிசுகள் பல பெற்றவர்.

'முகம்மதுமைதீன் கவிதைகள்' என்னும் இவ்வரிய நூலைப் படித்தேன். படித்தேன் என இனித்தது இந்நூல். எளியநடை, கற்பனை வளம், உவமை நயம், சொல் ாட்சி, சுய விளக்கம், சந்தம், பல்வகைப் பாலினங்கள் அடங்கிய இந்நூலைப் படைத்த கவிஞரை நான் காரணங்கருதிப் பாராட்டுகின்றேன்.

தன் பெயராலேயே தலைப்பை வைத்துக் கவிதை நூல் வெளியிடுவது தன்னம்பிக்கையை வலியுறுத்தும் செயலாகும்.

கணீரென்ற குரல் வளம் உள்ள இவர் முறையாய் இலக்கணம் பயின்றவர். சுயஒளிச் சூரியனைப் போன்று சுயசிந்தனை மிக்கவர்.

நான் யார் யாரைப் பாராட்டுகின்றேனோ அவர்களெல்லாம் புகழ்பெற்றிருக்கிறார்கள். அந்த வகையில் இவரும் மிகப்பெரிய புகழ்பெறுவார்.

முனைமுறியா முற்போக்குச் சிந்தனையாளரான இவரை நான். புத்தகத்தின் பக்கங்கள் போல் அடுக்கடுக்காகப் பாராட்டுகின்றேன்.

**வாழ்க கவிஞர் முகமது மைதீன்!**
**வளர்க இவர் தம் கவிதைத் தொண்டு!**

*கவிஞர் முகம்மது மைதீன் எழுதிய 'முகம்மது மைதீன் கவிதைகள்' என்னும் நூலுக்கு 2000இல் வழங்கிய அணிந்துரை.*



## சிந்தனைச் சிதறல்கள்

கவிஞர் துரை இராமநாதன் கடந்த 25 ஆண்டுகளாகத் தாம் கலந்து கொண்ட கவியரங்கங்களில் பாடிய கவிதைகள் சிலவற்றுக்கு "சிந்தனைச் சிதறல்கள்" என்னும் பெயரில் நூல்வடிவம் தந்துள்ளார். கவிஞர் கண்ணதாசன். வாணிதாசன் போன்ற கவிஞர் பெருமக்கள் தங்களின் கவியரங்கப் பாடல்களை நூல்களாக வெளியிட்டுள்ளார்கள். அவ்வடியொற்றி இந்நூலும் வெளிவந்திருப்பது வரவேற்கத்தக்கது. ஆசிரியர் கவியரங்கங்களில் பல ஆண்டுகள் தொடர்ந்து பங்கு பெற்றுவருவது இதனால் வெளிப்படுகிறது.

இந்நூல் முழுவதும் செறிவமைந்த மரபுக் கவிதைகளையே கொண்டுள்ளது. ஆசிரியப்பா, ஆசிரிய விருத்தம், அம்மானை, வெண்பா, கட்டளைக் கலித்துறை, இன்னிசைச் சந்தப்பா. சிந்துப்பா என அனைத்து வகை மரபுப் பாடல்களும் இயற்றக்கூடிய திறன்பெற்றவர் இவ்வாசிரியர் என்பது தெளிவாகிறது. பாடல்கள் யாவும் ஆற்றொழுக்கு போல் தெளிவான, எளிய, இனிய நடையில் அமைந்து சுவைக்கத் தக்கதாய் உள்ளன.

சான்றாளர்கள் சிலரைப்பற்றி இவ்வாசிரியர் பாடியுள்ளார். நாடறிந்த நல்லவர்களைப் பலரும் பாடுவது இயல்பு. எனினும் திருக்குறள் அவதானி இராமையா அவர்களையும் பாடியிருப்பது போற்றுதலுக்குரியது.

பல்சுவைப்பகுதியில் படைத்துள்ள பாடல்கள் யாவும் சமுதாய நோக்குடன் பாடப்பட்டுள்ளன. "விரல்முனையில் வெளிச்சம்" என்ற பாடலின் அனைத்தும் தொழிலாளர்களின் கைவிரல்கள்தான் உலகுக்கு ஒளியைத் (பயனை) தருகின்றன என்று கலைஞர்கள் வரிசையில் முடிதிருத்துவோரையும் சேர்த்திருப்பது பாராட்டத்தக்கது.

கவடிலாக் கம்மியான் கருமானுடன் தச்சன்
கல்லிலுயிர் ஊட்டும் சிற்பி
அவமிலா ஓவியன் அயர்விலா எழுத்தாளன்
அழகுமுடி திருத்தும் அறிவன்

"இருள் பிரியா வானம்" என்ற தலைப்பில்,

மருள்கொண்ட மனத்தில் புத்தர்
மாஞானம் கண்ட தைப்போல்
பெருகிய கங்குல் தன்னில்
பயனொளி நல்கும் திங்கள்.


என்ற வரிகளில் அமைந்துள்ள உவமை நயமும்

வானமாம் கரிய நங்கை
வைரம்போல் ஒளியை நல்கும்
மீனமாம் நகைகள் பூண்டு
மதியொளி திலக மிட்டு

என்ற வரிகளில் அமைந்துள்ள உருவகமும் துய்க்கத்தக்கதாய் உள்ளன.

இக்கவிஞரின் தமிழ்பற்றும் பாடல் திறனும் பாராட்டுக்குரியன. இவர் பணி மேலும் சிறக்க வாழ்த்துகிறேன்.

*கவிஞர் துரை. இராமநாதன்B.A., எழுதிய "சிந்தனைச் சிதறல்கள்" என்னும் நூலுக்கு 2000இல் வழங்கிய அணிந்துரை.*



## தேன்மலர்ச்சோலை

தாய் மொழிப்பற்றும் தாய்நாட்டுப் பற்றும், மனித நேயமிக்க புலவர் சுகுமாரி அருண கிரியை 1990ல் அவர் இல்லத்தில் தேனீ இலக்கியத்தின் 'பாவேந்தர் நூற்றாண்டு விழா' கவிதைக் கல்வெட்டு திறந்து வைத்தது முதலே அறிவேன். அப்போது முதல் அவரைப்பற்றி ஒவ்வொரு கூட்டத்திலும் மேடையில் புகழ்ந்துரைப்பேன்.

மரபுக் கவிதை எழுதும் இவரின் கவிதைகளில் சமுதாயச் சிந்தனை வெளிப்படுகிறது. பெண் கவிஞர்கள் எண்ணிக்கை அதிகமாக வேண்டும். அந்த வரிசையில் இவர் இடம் பிடித்திருப்பது நல்ல அறிகுறி. கடல் கடந்த மலேசியாவில் 'கவிக்குயில் சரோஜினி நாயுடு' போல் சரோஜா என்ற கவிஞரைக் கண்டேன். அவர் 1948லேயே பாரதிதாசனார் பற்றிப் பாடல் எழுதியுள்ளார். என் தலைமையில் கவியரங்கத்தில் பாடிய அந்த சரோஜாவும் ஓர் ஆசிரியர். சென்னையில் வாழும் புலவர் சுகுமாரியும் ஆசிரியராக, நல்ல கவிஞராக இருப்பது கண்டு மகிழ்ச்சி. இருபத்து மூன்று இல்லக் கல்வெட்டு வைத்தவரில் இவர் ஒருவரே முதல் பெண்மணி, அதன் பிறகு திருவாரூரில் மேலும் இரண்டு இல்லத்தில் திறந்து வைத்தபின் இருபத்தைந்து ஆகியது.

'தேன்மலர்ச்சோலை' நல் தலைப்பு வைத்துள்ளார். சோலை என்றாலே மனதுக்கு இதமும், இன்பமும் தரும். புத்தர்கூடச் சோலையில் போதி மரத்தடியில் அமர்ந்து மெய்யறிவு பெற்றார். புலவர் சுகுமாரி மலர்ச்சோலையல்லாமல் "தேன்மலர்ச்சோலை" என்று பெயர் வைத்திருப்பது நல்ல கருத்துள்ள, இனிய பாடல்களைக் கொண்ட கவிதை நூல் என்பதால் என் பாராட்டுக்குரியவர். எதிர்காலத்தில் நல்ல பாராட்டு, சிறப்பு இவருக்கு காத்திருக்கிறது. கிடைக்கும் என்று நம்புகிறேன்.

கல்வெட்டு வைத்தவர்களில் பெண்களில் இவர் முன்னோடி. கருத்துகளில் இவர் முன்னோடி, கவிதைகளில் இவர் முன்னோடி. இந்நூலைப் படித்த பிறகு மறைந்த கவிஞர்கள், சான்றோர்கள் பற்றியும், கவிதைகள் எழுதியுள்ளார் என்று காணும்போது இவரது பரந்த மனப்பான்மையும் விரிந்த உள்ளமும் தெரிகிறது. நெஞ்சில் வஞ்சகமில்லாத காரணத்தால் வாழும் கவிஞர்களைப் பற்றி எழுதியுள்ளார்; நல்ல சமுதாயச் சிந்தனைகளை விதைத்துள்ளார். இந்த நல்ல செயல்களை ஒவ்வொரு நூலிலும் பின்பற்ற வேண்டும். இவரது கணவரும் உடன் துணை புரிந்து ஊக்குவிக்கிறார் பாராட்டுகள். மகனும் கவிஞர் என்பதறிந்து வாழ்த்துகிறேன். இவர் குடும்பம் கவிதைக் குடும்பமாக இருப்பது கண்டு மகிழ்ச்சி.

இவரது பாடல்கள் பாடநூலில் இடம்பெறத் தகுதியுடையவை. புலவர் சுகுமாரி விண்வெளியிலும் கவியரங்கம் நடத்த வேண்டும்; உரை நடையிலும் நிறைய நூல்கள் எழுத வேண்டும் இவரது 'தேன்மலர்ச் சோலை' கவிதை நூலும்,இவரது முயற்சிகளும் வெற்றி பெற வாழ்த்துகிறேன். வாழ்க! வளர்க! வெல்க!

*புலவர் சுகுமாரி அருணகிரி எம்.ஏ.பி.எட்., எழுதிய 'தேன்மலர்ச்சோலை' என்னும் நூலுக்கு 2000–இல் வழங்கிய அணிந்துரை.*



## ஆசிரியர் இனக்காவலர்

தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் மன்றத்தின் மாநிலப் பொதுச் செயலாளர் பாவலர் மீனாட்சிசுந்தரம் இளமைக் காலந்தொட்டே என்னுடன் தொடர்புடையவர். அவருடைய கவியாற்றலும் பேச்சாற்றலும் அன்றே போற்றத்தக்கதாக இருந்தது. தொடக்கப்பள்ளி ஆசிரியர்களுக்காவே தன் வாணாளை ஒப்படைத்துவிட்ட அவர்தம் தன்னலம் கருதாத் தொண்டு மாற்றாரையும் மருளச் செய்வதாகும்.

1992-இல் பெரியார் திடலில் நடைபெற்ற ஐம்பெரும் விழாவில் கவியரங்கத் தலைமையுரையில் ஓயாமல் உழைத்து வருகின்ற மீனாட்சிசுந்தரத்தின் ஒரு நாள் நிகழ்வை எவரேனும் பாட்டில் வடித்தால் மாண்புடையதாகும் என உரைத்தேன்.

என் விருப்பதற்திற்கேற்ப ஒரு நாள் நிகழ்வை அல்ல-மீனாட்சியின் வாழ்க்கையையே பாவியமாக நன்செய்ப்புகழூர் அழகரசன் தீட்டியுள்ளது பெருமைக்குரிய ஒன்றே! ஒரு கவிஞருடைய வரலாற்றை ஒரு கவிஞரே எழுதுவது அரிதாகும். அந்த வகையில் இந்நூல் பெருமைக்குரிய ஒன்றாக மிளிர்கிறது.

63 நாயன்மார்களின் வரலாற்றை முதன் முதலில் பாட்டில் வடித்த பெருமை சேக்கிழாருக்கு உரியது. அடுத்து என் விருப்பிற்கேற்ப பாவேந்தரின் வரலாற்றைப் பாட்டில் வடித்த பெருமை 'முத்துக் கவிமுகில்' புலவர் அருணா பொன்னுசாமியையே சாரும்.

கம்பர், காளமேகம், தாயுமானவர், ஒட்டக்கூத்தர் போன்றோர்க்கு உரைநடையில்தான் வரலாறுண்டு. யாரும் பாவியமாகத் தீட்டினாரில்லை. சோழ மண்டலப் பாவலராகிய மீனாட்சிக்கோ இன்று பாவியமாகவே வரலாறு படைக்கப்பட்டுள்ளது.

இந்நூலை எழுதிய நன்செய்ப் புகழூர் அழகரசன் என் தலைமையின் கீழ் நிகழ்வுற்ற பல பாட்டரங்கங்களில் பங்கு கொண்டு சிறப்புற்றவர்; இடக்கை எழுத்தாளர். தமிழ் மீது, மாறாத காதல் கொண்டவர். அவருடைய 'வேர்ப்பலா' இன்னும் சுவையூட்டுவதாகவே உள்ளது. அவர் மேலும் சிறக்க வாழ்த்துகிறேன்.

மீனாட்சி சுந்தரத்தின் அயரா உழைப்பு. தன்னலமற்ற தொண்டு, தளரா மொழித்தொண்டு மேலும் தொடர வாழ்த்துகிறேன். தெ.பொ.மீனாட்சிசுந்தரம்பிள்ளைக்குச் சிலையில்லை எனினும் இவருக்கு சிலை வைக்கும் காலம் வரும். இவரது பாடல்வரியை ஆசிரியப் பெருமக்கள் ஆங்காங்கு கல்லில் வடித்துப் போற்றுவார்களாக.

*கவிஞர் நன்செய் புகழூர் அழகரசன் எழுதிய 'ஆசிரியர் இனக் காவலர்' என்னும் நூலுக்கு 2000–இல் வழங்கிய அணிந்துரை.*



## மகரந்தம்

"மகரந்தம்" மணமிக்கது; மிருதுவானது; அழகானது; சுவையானது; தேனை நாடும் வண்டுக்கு வரவேற்பு அளிப்பது இம் "மகரந்த" கவிதைத் தொகுப்பு இரும்பினை ஈர்க்கும் காந்தமென கற்போரின் சிந்தையை கவருமென்பதில் ஐயம் இல்லை. தற்போதைக்கு என்ன வேண்டும் என்னும் தெளிவான பார்வைக்கு உள்ளாகும் கவிஞன் தன் பரந்த பார்வையால் சமூகத்தை கம்பீரமாக தூக்கி நிறுத்துகிறான். நடுக்கடல் அலைபாயும் கலத்துக்கு கலங்கரை விளக்கம்; வேட்கைக்கு சந்தனம் வெயிலுக்கு நிழல் என்பதாக அமைந்துள்ள "மகரந்தத்துக்கு" என்னுடைய பாராட்டுக்கள்.

உள்ளத்தை உள்ளவாறு கூறும் ஒப்பற்ற கொள்கைக்கு உடன் பிறந்தோனாகத் தன்னைக் காட்டிக்கொள்ள கவிஞன் முயற்சி செய்துள்ளான். உழைக்கும் வர்க்கம் தன்னை மாற்றி அமைத்துக் கொள்ள வேண்டும் என வெளியிடும்போது எத்தனை எத்தனை வேலைகளின் வினைகள் உண்டோ அவற்றைச் செல்லி அதுபோது தடைகளாக இருக்கும் நீள ஆடை அணிகலன்களால் வேலை முழுமை பெறாது என்று கூறுவதை நாம் ஒத்துக் கொள்ள வேண்டும்.

புதிய புதிய வழி காணுதல்கள் இல்லாமல் போனதால் வேலை இல்லாத் திண்டாட்டம் உருவாகியுள்ளது என்பது உண்மை. அதிலுள் ஓய்வுபெற்ற பின்னும் "விடாது உடும்பு போல் மறுபடி பிடித்துக் கொள்வதும், நீட்டித்துக் கொள்வதும் பாதிவேலை வாய்ப்பைக் கெடுத்து விடுகிறது" என்று அவர் கூறும் கருத்து சரிதானே!

மக்களுக்கு நேரத்தைப் போக்குவது பெரிய பிரச்சனை. அதைச் சரிகட்ட கண்டு பிடிக்கப்பட்டதே ஆட்டம் பாட்டம் கொண்டாட்டம் தேர்த்திருவிழா என்பதெல்லாம், ஒவ்வொரு குடும்பமும் ஒரு தெய்வ

வணக்கத்தைக் கற்பித்துக்கொள்ளும் அதிசயம், உலகம் முழுதும் உண்டு. இப்படி தெய்வ வணக்கம், பொங்கல், பந்தி, திருவிழா, பட்டு, நகை நட்டு, வாணவேடிக்கை, கூத்து, என்று விரித்துக் கொண்டே போவோர் எப்படி அறிவியல் சிந்தனைக்கு சிக்கனச் சிந்தனைக்கு அடிகோல முடியும்? அதானல்தான் வெளிநாட்டிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்டு நம் நிலத்தைக் கெடுப்பதற்கென்றே அனுப்பப்பட்டு அடர்ந்து கிடக்கும் வேலிக்காத்தான் முள் மரங்களை நீக்குவதற்குக்கூட அக்கரை இல்லாது மக்கள் உள்ளனர் என்பதை 'உரசிப் பார்க்கிறேன்' என்பதில் சுட்டிக் காட்டுகிறார். அதனால்தான் தம் குழந்தைகளின் உடலும் பாதமும் வெளுத்துப் போகுதே! வளரவில்லையே எனக் கண்டு கொள்ளக்கூட நேரமில்லாமல் இருப்பதை "ஓ பாதங்களே" என்பதில் வெளிப்படுத்துகிறார்.

கஞ்சராய் கருமியாய் மக்கள் உள்ளதைச் சொல்லி இப்படிப்பட்டவரா, கடவுளுக்கு பக்கமிருப்போர்? என "எத்தரின் மயக்கத்தில்" சாடுகிறார். பழைய நினைவுகளில் காலத்தை ஒட்டும் "திண்ணை போராளிகள்" திண்ணை இல்லாத காலத்தும் தீவட்டிகளாகிக் கொண்டுள்ளனரே, என்பதால்தான் "பழையதைத் தின்னாதே தூக்கம் வரும், பழையதை நினைக்காதே ஏக்கம் வரும்" என்று சொல்லிவிட்டு அதையும் மீறிச்செய்வதனால்,"

"தூக்கமும் ஏக்கமும் தோல்வியைக் கொடுக்கும்" எனக்கூறும் அவர் கருத்தை கல்வெட்டாக்கலாம் என முன்மொழிகிறேன்.

பகுத்தறிவுச் சிந்தனையோடு மணம் வீசும் மகரந்தத்தில் சொல் தெளிவு, கருத்தாழம், புதுமையான கண்ணோட்டம் எளிய யதார்த்த நடை ஆகியவை காணப்படுகின்றன. முன்னோர்களின் மறுபக்கமாக இம் "மகரந்தம்" விளங்குகிறது. மணக்கும் மகரந்தம், மேலும் மணக்க என் மனமார்ந்த வாழ்த்துக்கள்.

*கவிஞர் அ. விஸ்வம் எழுதிய 'மகரந்தம்' என்னும் நூலுக்கு 2000–இல் வழங்கிய அணிந்துரை.*

## புல்லாங்குழலில் புதுராகம்

பூவின் அழகை வண்டும் - சூரியனின் அழகை வெப்பமும் - நிலவின் அழகை பெண்மையும் - இதழின் அழகைச் சிரிப்பும் சொல்வதுபோல உணர்ச்சியின் அழகைக் கவிதை சொல்கிறது என்று செல்வி ஜெ. ஹாலீதா சொல்லியிருப்பது சுவையாகவும் - சுருக்கமாகவும் 'சுருக்'கென்று தைப்பது போலவும் இருக்கிறது. நுணுக்கமாகவும் நுட்பமாகவும் எழுதியுள்ளார்.

கவிதை என்பது படிப்பவர் மனதில் தைக்க வேண்டும். இந்தக் கவிதைகள் தைக்கின்றன என்று நான் துணிந்து சொல்வேன்.

'திருப்பாவை'யைத் தீந்தமிழில் பாடிய ஆண்டாளைப் போல ஒரு இளந்தமிழ்ப்பாவை 'புல்லாங்குழலில் புதுராகம்' இசைத்திருக்கிறது.

தமிழிலக்கிய வரலாற்றில் அவ்வையார், காக்கைப் பாடினி, ஒக்கூர் மாசாத்தியார், நக்கண்ணையார், நன்னாகையார், நப்பசலையார், இளஎழனி, பாரிமகளிர், பெருங்கோப்பெண்டு, பொன்முடியார், வெண்ணிக் குயத்தியார், வெள்ளிவீதியார்... போன்ற பெண்பாற்புலவர்கள் பல கவிதைகளைப் பாடியிருக்கின்றனர்.

இந்திய வரலாற்றில் கவிக்குயில் சரோஜினி தேவி மிகச்சிறந்த பெண்பாற்புலவராக மதிக்கப்படுகிறார்.

நாம் வாழும் இந்த நாளில் திருமதி சௌந்தரா கைலாசம், அரசு மணிமேகலை, மதிஒளி, பொன்மணி வைரமுத்து, நிர்மலா சுரேஷ், தாமரை போன்ற கவிஞர்கள் பெண்குலத்திற்குப் பெருமைதேடித்தரும் பெண்பாற் புலவர்களாக விளங்குகின்றனர். அவர்கள் வழியில் செல்வி ஜெ. ஹாலீதா கவிதை பாட வந்திருப்பது மிகுந்த மகிழ்ச்சியையும் வியப்பையும் தருகிறது.

'காக்கையின் காவியம்' என்ற தலைப்பில் எழுதப்பட்ட கவிதை உண்மையிலேயே உள்ளத்தை உருக்குகிறது.

ஒரு குயில், காக்கையைத் தேடிவந்து காக்கையின் கூட்டில் தனக்கோர் இடம் கேட்கிறது. குயிலின் இனிய குரலில் மயங்கிய காக்கை இடம் கொடுக்கிறது. காக்கைக் குஞ்சுகளோடு குயில் கொஞ்சி மகிழ்கிறது. திடீரென்று காக்கை இறந்து போக தனக்கு இடந்தந்த காக்கையை எண்ணிக் குயில் குக்கூ! குக்கூ! என்று கூவிக்கொண்டே இருக்கிறது. இதுதான் கவிதையின் கருத்து!

இப்படி ஒரு நல்ல சிந்தனையை இனிய கவிதையாக்கி நம்மை இன்பத்தில் ஆழ்த்துகிறார் ஹாலீதா!

தீபாவளியையும் பொங்கலையும் பற்றிப் பாடியுள்ள கவிதைகள் வித்தியாசமான புதிய சிந்தனை.

பெண்ணுரிமைக்காக மின்சாரப் புயலாக மாறும் இந்த இளஞ்கவிஞர்.

"பெண் என்றாலே பிரச்சினையா
பெண்பார்க்க வந்தாலே தட்சணையா?"

என்று கேட்டுப் பொங்கி எழுகிறார்.

"பிள்ளைகளைச் சுமக்கும் நாங்கள் அதற்காகக் கூலி
கேட்கவில்லையே"

என்று குமுறுகிறார்.

"சிறகுகள் முளைக்கும் இப்பருவம்
சிகரங்கள் அடையத்தான்...
வானத்தைப் பிடிக்கத்தான்
வழுக்கி விழுவதற்கல்ல" என்கிறார்.

சூரியனைச் சந்திரன் தேடுவதாகவும்-

நகங்கள் விரலிடம் வசனம் பேசுவதாகவும்-

அலைகளின் ஓசையை மலைப்பாறை ரசிப்பதாகவும் மிகச்சிறப்பாக கற்பனைசெய்து கவிதைகள் வடித்துள்ளார்.

"இளைய சமுதாயம் தலைமை ஏற்கட்டும்
முதிய சமுதாயம் முத்தங்கள் கொடுக்கட்டும்"

உணர்ச்சிமயமான கவிதைகளால் என் உள்ளத்தைக் கொள்ளை கொண்டுவிட்ட செந்தமிழ்ச் செல்வி ஜெ. ஹாலீதாவை உச்சிமோந்து வாழ்த்துகிறேன்.

தொடக்கமே சிறப்பாக இருப்பதால் எதிர்காலமும் சிறப்பாகவே இருக்கும் என்பதில் ஐயமில்லை.

வாழ்க! வளர்க! வெல்க என வாழ்த்துகிறேன்.

*செல்வி ஜெ. ஹாலீதா எழுதிய 'புல்லாங்குழலில் புதுராகம்' என்னும் நூலுக்கு 2000-இல் வழங்கிய அணிந்துரை.*



## பார்வையின் கோணங்கள்

உள்ளம் நனையும் பொழுது உணர்வுகள் உலர்த்தப்படுவது தான் கவிதை. அம்முறையில், சங்ககாலம் தொட்டு மாபெரும் சபைகளையொத்து சந்தநயம் இட்டு, தமிழ் மொழியின் முத்து என வான்புகழ் புலவர்கள், அறிஞர்கள் என இந்நாள்வரை நாம் ரசிக்க பலதரப்பட்ட காப்பியங்களையும், கவிதைகள் முதலியன போன்ற படைப்புகளையும் இருவிழி, பார்வை உள்ளவர்கள் மட்டுமே சமைப்பது இயல்பானதாக கருதப்பட்டாலும் அவ்வப்போது செவி, வாய், விழி, புலன்கள் இழந்த ஹெலன்கெல்லர் (Helen Keller) போன்ற ஊனமுற்றோர்களும் பார்வையற்ற ஜான்மில்ட்டன், இரட்டை புலவர்கள் எனப் பெயர்பெற்ற ஊனமுற்ற புலவரை தன் தோளில் சுமந்து அரசவகைகளுக்கும், பிறநகரங்களுக்கும் சென்று தமிழ் மொழி வளர்த்த பார்வையற்ற புலவரும், தன் முதுகில் குருவினால் எழுத படிக்கப்பெற்று வளர்ந்த அந்தகக்கவி வீரராகவ முதலி, ஆத்தூர் தாசி என்பவள்கூட தமிழ் மொழியின்பால் கொண்ட ஆர்வத்தினால் தாசி தன் இருப்பிடத்திலேயே தங்க வைத்து கவிகள் போன்ற படைப்புகளை புனைவதற்கு என ஆதரிக்கப்பட்ட பார்வையற்ற தங்கமாம்பழக் கவிராயர் போன்றோர் பட்டியல்களை காணுங்கால் கற்பனைக்கும் படைப்புகளுக்கும் பார்வை (ஊனம்) தடைக்கல்லாக இருக்க இயலாது என்பதை உணரலாம்.

இவர்கள் வரிசையில் *(01-07-1963)* ல் பிறந்த இளங்கவிஞர் ச. முருகேசன், எம்.ஏ.பி.எட். பி.ஜி.டி.பி.ஆர். அவர்களால் (சத்ரபதி விருது பெற்றவர்) படைக்கப் பெற்றுள்ள பார்வையின் கோணங்கள் என்னும் தொகுப்பின் கவிதைகளில் சொல், பொருள், சீர், சந்தம், எதுகை, மோனை, அடுக்குத்தொடர், சிலேடை அணி, உவமை உவமானங்கள் செறிந்துள்ளதை அறியலாம்.

இக்கவிதைகளில் இறைவாழ்த்து, தாய்வாழ்த்து, மாணவ வாழ்த்து, நட்பின் வகைகள், பண்பின் பாங்குகள், காதல்

உணர்வுகள், காதல் தோல்வி, தோல்வியிலும் வெற்றி, தம்பதியர் வாழ்த்து, வாழ்க்கை அனுபவங்கள், பொதுவான சமுதாய நோக்கு, பார்வையற்றோர் சமுதாய நோக்கு, இழப்புக்கு ஒரு இரங்கல், வாழ்வினை வளமாக்க ஒரு சாகாவரம் என அமைந்துள்ள அனைத்தும் நயமானவையே.

குறிப்பாக

தாயே எனும் கவிதை, பாதை மாறும் பயணம், மாமன் மகளே, உன்னை நினைத்தாலே போதும், இந்த மண்ணே இல்லையேல் போன்ற கவிதைகளை திரைப்படப் பாடல்களாகவும் அமைக்கலாம்.

காதல் யார் சொன்னாரோ என்ற கவிதையில் பல எழில்மிகு உவமை, உவமானங்கள் கையாளப்பட்டிருந்தாலும் இறுதியில் கூறப்பட்டிருக்கும்.

**"இரவு பகல் அயராத அகல்வெளி விண்ணுக்கு**
**தனித்தனி விளக்குகளை யார் அமைத்து தந்தாரோ"**

என்ற வரியில் எடுத்தியம்பியுள்ள "தனித் தனி விளக்குகள்" என்பது விண்மீனை குறிப்பதாக அமைந்துள்ளது. இந்த விண்மீனை சங்க கால புலவர்கள் "அகலா மீன்" என்றார்கள். ஏனெனில் நீர் மீன்கள் கல்லெறிந்தால் அகன்று விடும் ஆனால் இம்மீன்களோ வில் வளைந்தாலும் அகாலாதவை என கூறப்பட்டுள்ள சங்க இலக்கியப் பாடலை நினைவூட்டுவதாக அமைந்துள்ளது.

ஒரு கலை நட்பு என்ற கவிதையில் இறுதி வரியான

**"நஞ்சோர்க்கு இலக்கு ஆகிநீ போகும் போதும்**
**ஊழ்வினையன்றி அனையென்று கண்ணீர்க்கு ஏது"**

நண்பர் பிரிவை ஏற்காத துயரத்தை விளக்கும் பாங்காக அமைந்துள்ளது.

பார்வையற்றோருக்கான கல்விக்கு வித்திட்ட, அவர்களின் உயர்வுக்கு சத்திட்ட லூயிஸ் பிரெய்லி அவர்களின் புகழை நிலை நாட்டும் வகையில் அமைந்துள்ள சங்கத்தின் கொடிப்பாடல் உலக அனைத்து மொழிகளிலும் மொழி பெயர்க்கப்பட வேண்டிய ஒன்று.

இவ்விளங்கவிஞர் (1963ல்) பிறந்த இந்நாளில் சுத்தானந்த பாரதி, பாரதிதாசன், கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை, கவியரசு கண்ணதாசன், கர்மவீரர் காமராசர், கவிஞர் வாணிதாசன், மகாகவி வி.வே. முருகேச பாகவதர், கவிஞர் முருகேச முதலி, கவிஞர்.குருவிகரம்பை சண்முகம், கவிஞர் வேழவேந்தன் போன்ற உயர்ந்த 63 ஆசிரியர்களின் கவின்மிகு படைப்புக்கள் படைக்கப்பட்டுள்ளன என்பது சிறப்புக்குரியது. மேலும், இல்லை என்ற கவிதையில்

"பார்வை இழந்த போதும் மனதில் மகிழ்ச்சி நீங்குவதில்லை"

என்ற வரிக்கு ஏற்றார் போல் தன்னம்பிக்கையோடு பட்டறிவு வெளிச்சங்களை தெளிவாக காட்டியிருக்கும் இப்பார்வையற்ற இளங்கவிஞரைபோல் வளரும் கவிஞரை ஊக்கப்படுத்தும் வகையில் இச்சமுதாயத்தினருக்கென்று தமிழக அரசு மட்டுமின்றி தேசிய மற்றும் பல்வேறு அரசுகளும் விருதுகள் கேடயங்கள் பரிசுகள் வழங்க முன் வரவேண்டும்.

எளிய நடையில் புதுக்கவிதைகள் வெளிவந்து கொண்டிருக்கும் இந்தக் கால கட்டத்தில் மரபின் பெருமைகளை மறவாமல் தமிழுக்கு பெருமை சேர்த்துள்ள

**இப்பார்வையற்ற கவியே வாழ்!**
**இவரை ஈன்றெடுத்த புவியே வாழ்!**
**இவருக்கும் சொல்வரிகளை தந்த தமிழே வாழ்!**
**பலருக்கும்நல்நெறிகளை சுமந்த அமிழ்தமிழே வாழ்!**

*கவிஞர் ச. முருகேசன் எழுதிய 'பார்வையின் கோணங்கள்' என்னும் நூலுக்கு 2000–இல் வழங்கிய அணிந்துரை.*



## நிகழ்கால நிஜங்கள்

கவிஞர் அசூர் கெ. தங்கதாசன் கவிதைகளைப் படிக்கின்ற போது, எனக்குப் பச்சையப்பன் கல்லூரி முன்னாள் பேராசிரியர் மோசூர் கந்தசாமி முதலியார்தான் நினைவுக்கு வருகிறார். ஏனென்றால்; திருஞானசம்பந்தர், 'வாழ்க அந்தணர் வானவர் ஆவினம்' என்று பாடலைத் தொடங்குகிறார். கந்தசாமி முதலியாரோ, 'வாழ்க அந்தணர்' என்று தொடங்காமல், 'வாழ்க தமிழர்' என்று பாடி, சென்ற நூற்றாண்டிலே புரட்சி செய்தவர். அந்த மோசூர் கந்தசாமி முதலியார் போல் இந்த ஆசூர் கெ. தங்கதாசன் அவர்களும் 'நிகழ்கால நிஜங்கள்' என்ற நூலில் தமிழினத்தையும் தமிழையும் போற்றுகிறார்.

'நிகழ்கால நிஜங்கள்' என்ற தலைப்பே அறிவியலை நினைவூட்டுகின்ற தலைப்பாக இருக்கிறது. நிகழ்காலத்தில் விஞ்ஞான வளர்ச்சி மேலோங்கி, எல்லாக் கோள்களிலும் மனிதர்கள் குடியேறப் போகின்றனர். இது நிகழ்கால நிஜங்களாகப் போகின்றன. அதற்கு உகந்தவாறு இந்தத் தலைப்பு அமைந்திருக்கிறது.

அமரர் விந்தனும் தங்கதாசனும் ஒரே சாதி. அதாவது அச்சுக்கோப்பாளர்கள்.

'தமிழுக்கும் அமுதென்று பேர் - அந்தத்
தமிழ்இன்பத் தமிழ்எங்கள் உயிருக்கு நேர்'

என்ற பாவேந்தர் பாடலை அச்சுக் கோத்தவர், பின்னால் தலைசிறந்த எழுத்தாளராகிய 'விந்தன்' ஆவார்.

என்னுடைய நூலாகிய 'பாரதிதாசன் பரம்பரையை' அச்சுக்கோத்தவர் கவிஞர் ஆசூர் கெ. தங்கதாசன் ஆவார்.

இவரைப் பல்லாண்டுகளாக அறிவேன். 1991ஆம் ஆண்டு மூவேந்தர் அச்சகத்தில் 'பாரதிதாசன் பரம்பரை' என்னும் நூல் அச்சாகும்போது, அங்குப் பணிபுரிந்த இவரிடம் இப்படிக் கூறினேன்:

"தம்பி! இந்நூலை நன்றாக அச்சடித்துக் கொடு. உன்னையும் பாரதிதாசன் பரம்பரையில் சேர்த்துவிடுகிறேன்!" என்றேன்.

பிறகு, தானே முயன்று தமிழைக் கற்று கவிபுனைந்து அதை என்னிடம் காட்டி, 'பாரதிதாசன் பரம்பரையில் சேரும் தகுதி இருக்கிறதா?' என்றார். பாரதிதாசன் பரம்பரையில் சேர, சில தகுதிகள் வேண்டும். அந்தத் தகுதி இவரிடம் நிறையவே இருப்பதால், இவரைப் பாரதிதாசன் பரம்பரையில் சேர்ப்பதில் பெருமை அடைகிறேன். இந்தக் கவிஞரிடம் 'தமிழ் கனி' கனிந்திருப்பதால், இந்தக் கனி, இனி பாரதிதாசன் பரம்பரையின் சொந்தக் கனி!

விந்தன் எழுத்தாளர் மட்டுமல்ல; சில திரைப்படங்களுக்குப் பாடல்கள் எழுதிய தன்மானக் கவிஞர். அவரைப் போலவே ஆசூர் கெ. தங்கதாசன் தன்மானக் கவிஞர் என்பதில் சந்தேகமில்லை.

இவருடைய பாடல்களில் எடுத்துக்காட்டாக இதோ இரண்டொன்றைத் தருகிறேன்.

'இருபத்தோராம் நூற்றாண்டை இயக்குக' என்ற தலைப்பில்

"துணிச்சல் மிக்க பெண்களே
துணிந்து வாருங்கள்
............
விண்ணுலகின் எல்லைவரை நீங்கள் செல்லணும்
வீட்டுக்குள்ளே கிடப்பதைத்தான் தூக்கி எறியணும்"

என்கிறார்.

இதேபோல் சிறந்த புகழ்பெற்ற கவிஞர்களாகிய மகாகவி பாரதி, பாவேந்தர் பாரதிதாசன், கவியரசு கண்ணதாசன் இம்மூவரைப் பற்றியும் சிறப்பாகப் பாடியுள்ளார்.

ஒரு மேடையில் பேசும்போது கண்ணதாசனுக்குச் சிலை வைக்க வேண்டுமென்று சொன்னேன். அது பின்பு நிறைவேறியது.

இப்போது அவருக்குச் சிலைஉள்ளது. அவரைப்பற்றி எழுதியிருக்கும் கவிதை என்னை மெய்சிலிர்க்க வைத்தது. வஞ்சனை இல்லாமல் அவரைப் புகழ்ந்து பாடியுள்ளார்.

'மரம் வளர்ப்போம்' என்ற தலைப்பில் மரங்களை ஏன் வளர்க்க வேண்டும் என்று கூறியுள்ளது சிறப்பானது. இதைப்பற்றி 1926ஆம் ஆண்டிலேயே ஒரு கவிஞர் பாடியுள்ளார். திரைப்படத்திலும் இதைப்பற்றி ஒரு பாடல் இடம் பெற்றுள்ளது. உலகில் பிற்காலத்தில் 'எய்ட்ஸ்' என்னும் நோய் வரக்கூடும் என்று கருதியே, முற்காலத்தில் எய்ட்சை தடுப்பதற்கு தமிழர்கள் வழியைக் கண்டனர். அதுதான் 'ஒருவனுக்கு ஒருத்தி' என்னும் திருமணவாழ்க்கை. ஆனால், 'எய்ட்சே வருக!' என்ற தலைப்பைக் கண்டு வியந்தேன். பிறகு கவிதையைப் படித்தபோது, எய்ட்சை யாருக்கு வரவேற்கிறார் என்று புரிந்து கொண்டேன். இதோ அந்த வரிகள்:

ஒழுக்கம் கெட்ட மானி டர்க்கு
எய்ட்சே நீயும் வருக!
ஒழுக்கம் கெட்டு நடப்ப வர்க்கு
பாடம் கற்றுத் தருக!"

இப்போது புரிகிறதா கவிஞர் எய்ட்சை வரவேற்றதன் நியாயம்.

'தை மாதம்தான் தமிழாண்டின் தொடக்கம்' என்று க. நமச்சிவாய முதலியார் அவர்கள் 1918ஆம் ஆண்டு முதன் முதலில் கூறினார். ஆனால், அரசியல்வாதிகளால் அது இன்னும் முழுமையாகக் கடைப்பிடிக்க முடியாமல் உள்ளது. அதைப்பற்றியும் கவிஞர் தங்கதாசன் 'தை மகளே தமிழாண்டு!' என்று மிக அருமையாகப் பாடியுள்ளார். இப்படிப் புதுமைக் கருத்துக்களையும் புரட்சிக் கருத்துக்களையும் கொண்டுள்ள இவர், பாவேந்தரைப் போலவும் என்னைப் போலவும் எதிர்காலத்தில் புகழ் பெறுவார் என்று உறுதியாகக் கூறுகிறேன்.

கவிஞர் ஆசூர் கெ. தங்கதாசன் கவிஞர்களுக்கெல்லாம் ஒர சிங்கதாசனாக வருவார் என்பதை உறுதியுடன் கூறுகிறேன். இருபத்தெட்டு வயதான இந்த இளங்கவிஞனை, எண்பது வயது கிழக்கவிஞனாகிய நான் மனதார வாழ்த்திப் பாராட்டுகிறேன்.

*கவிஞர் ஆசூர் கெ. தங்கதாசன் எழுதிய 'நிகழ்கால நிஜங்கள்' என்னும் நூலுக்கு 2000-இல் வழங்கிய அணிந்துரை.*

## சிதறிய வெண்முத்துக்கள்

"சிதறிய வெண் முத்துக்கள் - தமிழ்
இலக்கியத்தின் சொத்துக்கள்"

உலகப் பொதுமறையை உயர்வெண்பாவில் நன்பாவாய் வடித்திருக்கும் நண்பர் ஏகாம்பரத்திற்கு என் வாழ்த்துக்கள்.

இது அரிய பெரிய முயற்சி. தமிழ்கூறும் நல்லுலகத்திற்கு இதனைப்போல் தரமான நூல்களை வழங்கிடுவீர்.

இத்தகைய ஒரு சிறந்த வெண்பா நூலை வெளியிட்டிருக்கும் இதய கீதம் பதிப்பக நிறுவனர் இரா. எழிலரசுக்கு நீண்ட வாழ்த்துக்கள்.

*ர.க. ஏகாம்பரம் எழுதிய 'சிதறிய வெண்முத்துக்கள்' என்னும் நூலுக்கு 2001இல் வழங்கிய அணிந்துரை.*



## நெருப்பில் பூத்த மலர்

நெருப்பில் பூத்த மலர்- எனும்

தொகுப்பின் மூலம் கவிஞராய் பூத்திருக்கும்

பானுமதி காசிராஜனுக்கு என் வாழ்த்துக்கள்.

"சமயமற்ற நாடழகு
சாதியற்ற வீடழகு
சண்டையில்லா ஊரழகு
சாத்திரங்கள் மறத்தலழகு

இப்படி தொகுப்பெங்கும் உங்கள் கவியழகு. கருத்தழகு, சொல்லழகு அழகாய் மலர்ந்துள்ளது.

வான்மழைபோல் உலகமெல்லாம் - உங்கள் கவிதை தேன்மழை பொழியட்டும்.

இத்தொகுப்பை செம்மையாக வெளியிட்ட இதயகீதம் பதிப்பக நிறுவனர் இரா. எழிலரசு இதுபோல் இன்னும் பல நூல்களை வெளியிட்டு வெற்றிபெற என் தமிழ் வாழ்த்துக்கள்.

*கவிஞர் பானுமதி காசிராஜன் எழுதிய 'நெருப்பில் பூத்த மலர்' என்னும் நூலுக்கு 2001இல் வழங்கிய அணிந்துரை.*

## இளந்தமிழா எழுந்திரு!

தந்தை பெரியாரும், பேரறிஞர் அண்ணாவும் தமிழர்கள் விழிப்போடும், செழிப்போடும இருப்பதற்காக தங்கள் எழுத்தாலும், பேச்சாலும், செயலாலும் வாழ்நாளெல்லாம் உழைத்து வந்த உத்தமத் தலைவர்கள்.

அரைநூற்றாண்டு காலத்திற்குமேல் அரும்பெரும் தலைவர்கள் பலர் உழைத்தும், தமிழர்களிடம் விழிப்புணர்வு ஏற்பட்டிருக்கிறதா? என்று கேட்டால் 'இல்லை' என்பதுதான் பலரது கருத்து.

நமது புலவர் ஞானசேகரனின் கருத்தும் அதுதான். அதனால்தான் 'இளந்தமிழா எழுந்திரு' என்கிற கவிதைத் தொகுதி உருவாகி மலர்ந்திருக்கிறது.

உலக உத்தமர் காந்தியடிகளில் தொடங்கி 'குறள் வழி நடப்போம்' என்று முடியும் எழுபத்து நான்கு கவிதைகள் இத்தொகுதியில் இடம்பெற்றிருக்கின்றன.

மரபுவழிப்பாடும் கவிஞர்கள் அருகிவிட்ட இந்தக்காலத்தில், மரபு வழியில் மட்டுமின்றி, சிறப்பான வகையில், செழிப்பான சிந்தனைகள், தேர்ந்த கருத்துக்களைக் கொண்ட நல்ல கவிதைகளைப் படைக்கும் ஆற்றலாளராகத் திகழ்கிறார் நம் புலவர் ஞானசேகரன் அவர்கள். எடுத்துக்கொண்ட தலைப்புகளில் விழித்திருக்கும் கருத்துக் களைப் பார்த்தால் இது இவரது முதல் படைப்பு என்றே சொல்லு வதற்கு இயலாது.

காஞ்சி, சுரதா, காவியப்பாவை, கனிமொழி ஆகிய பல்வேறு எடுகளில் பலமுறை எழுதியுள்ள நீண்டகால அனுபவம், புலவரின் கவிதைகளில் தெரிகிறது.

ஒன்றிய நடுநிலைப்பள்ளியின் தலைமையாசிரியராக இருந்து ஓய்வுபெற்ற புலவர் ஞானசேகரன் உருவாக்கியுள்ள இந்த நூலைப் படித்தால் அனைவரும் அவரது கவிதைகளுடன் ஒன்றிப் போய்விடுவார்கள்.

பக்கந்தோறும் சுவையுள்ள கவிதைகள்!

படிக்குந்தோறும் பயனுள்ள கருத்துக்கள்

இந்நூல் தமிழர்களின் கைகளில் தவழவேண்டிய தரமான கவிதைநூல்!

புலவர் ஞானசேகரனின் முயற்சியை பாராட்டுகிறேன்! வாழ்த்துகிறேன்.

*திருவோக்கி புலவர் ந. ஞானசேகரன் எம்.ஏ. பி.எட்., எழுதிய 'இளந்தமிழா எழுந்திரு' என்னும் நூலுக்கு 2001–இல் வழங்கிய அணிந்துரை.*



## ஒற்றை ரோஜா

இப்புவியில் உள்ள அத்தனை பொருட்களையும் ரசனையுடன் பார்த்தால் அதில் ஒரு அழகு தெரியும். நதியில், மலையில், மலரில், மழையில், மண்ணில், விண்ணில் இப்படியாக அழகின் மொத்த வடிவாக இவ்வுலகம் உள்ளது கலை ரசனையுள்ளவர் களால் மட்டுமே ரசிக்க முடியும். இயற்கையழகினை எழுத்து வடிவில் உருவகப்படுத்தி. கவிதையாக வடித்து. எல்லோரும் ரசிக்கும்படி செய்யும் திறமை கவிஞர்களிடம் உள்ளது கற்பனைத்தாயின் முதல் குழந்தையை தாலாட்டி. சீராட்டி வளர்ப்பவன் கவிஞன். அந்த வகையில் ஒற்றை ரோஜா என்ற கவிமாலையைத் தொடுத்த சூரியா அவர்களும் சிறந்த கவிஞர். காதல் உள்ளம் கொண்டவர்களின் மனதில் கற்பனை மணம் சுகந்த மணமாக கமழ்ந்து கொண்டே இருக்கும். இந்த கவிதை தொகுப்பு நூலில் உள்ள ஒவ்வொரு கவிதையும் கருத்துள்ளதாகவும். செந்தமிழ் சுவையோடு. தெளிவான நடையோடு சிந்தையை மகிழச் செய்வதாக அமைந்துள்ளது. உணர்ச்சிப் பூர்வமான எண்ண வெளிப்பாட்டினை வார்த்தை ஜாலங்களோடு வர்ணித்து எழுதியிருப்பது பாராட்டுதற்குரியது. சிந்தையின் விந்தைமிகு கற்பனைகளை எளிய முறையில் இனிய நடையில் எழுதிப்படிப்பவரின் மனதினை பரவசம் படுத்தக்கூடியவர் என்பதை வெளிப்படுத்தியுள்ளார். கவிஞர் சூரியா அவர்கள் வருங்கால இலக்கியவுலகில் சிறகடிப்பார் என்பது உறுதி.

*கவிஞர் வீ. சூர்யா எழுதிய 'ஒற்றை ரோஜா' என்னும் நூலுக்கு 2001– இல் வழங்கிய அணிந்துரை.*

## பாரதிதாசன் புரட்சிக்கவி

கவிஞர் மணிமொழி குறிப்பிட்டது போல 1944ஆம் ஆண்டு புரட்சிக்கவி நாட்டிய நாடகம் சேலத்திலும் நாமக்கல் நகரிலும் ஆறு நாட்கள் நடைபெற்றன. முதல் நாள் நாடகத்திற்கு கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணனும் நிறைவு நாள் நாடகத்திற்குத் தந்தை பெரியாரும் தலைமை வகித்தனர். அப்போது அந்த நாடகம் கவிதையாகவே நடத்தப்பட்டது.

அன்றைக்கு அந்த நாடகத்தில் நான் அமைச்சராக நடித்தேன். அன்றைக்கு அந்த நாடகத்திற்குப் பெரியார் தலைமை தாங்கினார். இன்றைக்கு நானே இந்த நாடகத்திற்குத் தலைமை தாங்குவது எனக்குப் பெருமையாக இருக்கிறது.

முதன் முதலில் ஒரு நாடகம் கவிதை நாடகமாக அரங்கேற்றப்பட்டது பாவேந்தரின் நாடகம்தான்! என்னை ஊரிலிருந்து வரவழைத்து அந்த நாடகத்தில் நடிக்க வைத்தனர். இன்று இந்த நாடகத்தில் நடித்த பிள்ளைகள் எல்லோருமே மிகச் சிறப்பாக நடனமாடி நடித்தனர். கவிஞராக நடித்த பிரதீப் குமார் உணர்ச்சி பூர்வமாக நடித்தார்.

இந்தக் குழுவினர் மலேசியா போன்ற நாடுகளுக்குச் சென்று இந்த நாடகத்தை அரங்கேற்ற வேண்டும். அதற்கு நான் வேண்டுமானால் நண்பர்களிடம் சொல்லி ஏற்பாடு செய்கிறேன். மலேசியாவில் எனக்கு நிறைய நண்பர்கள் இருக்கிறார்கள். சுருதிலயா நாட்டியாஞ்சலி குழுவினர் மலேசியா செல்லவேண்டும். நல்ல வரவேற்பு கிடைக்கும் - செல்வாக்கும் பெறலாம்.

இந்திய நாட்டிய நாடகத்தை கவிஞர் மணிமொழி மிகச் சிறப்பாக எழுதியிருக்கிறார் - அருமையான பாடல்களை வடித்திருக்கிறார். அவர் மிகவும் கெட்டிக்காரர்! நுட்பமாக எழுதியிருக்கிறார். மிகச் சிறந்த அறிவாளி! அவர் மேலும் சிறப்படைவார்!

இந்த நாட்டிய நாடகப் பாடல்களையெல்லாம் தொகுத்து நூலாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பாரதிதாசன் 'பாரதியார் கவிதா மண்டலம்' என்ற இலக்கி இதழை வெளியிட்டார். மணிமொழி 'பாரதிதாசன் கவிதா மண்டலம்' இலக்கிய இதழின் ஆசிரியராக இருந்து வெளியிட்டு வருகிறார். நான் அந்த இதழின் சிறப்பாசிரியராக இருக்கிறேன்.

பாரதிதாசனின் புரட்சிக்கவி நாட்டிய நாடகத்தை வடித்த கவிஞர் மணிமொழி அவர்களையும் - இதிலே நடித்த கலைஞர்களையும் மிகவும் பாராட்டுகிறேன்.

எனது எண்பதாவது பிறந்தநாள் விழா நடக்கும்போது முத்துவிழா காணும் மூத்த கவிஞர் என்று என்னை வாழ்த்தியுள்ள நீங்கள் நூறு நாடகங்கள் நடத்தி புகழ் பெறவேண்டுமென்று வாழ்த்துகிறேன்.

*கவிஞர் மணிமொழி எழுதிய 'பாரதிதாசனின் புரட்சிக்கவி' என்னும் நூலுக்கு 2001–இல் வழங்கிய அணிந்துரை.*



## சபைக்கு வராத சாணக்கியர்கள்

கவிஞர் சுடர்வண்ணன் எழுதியுள்ள கவிதை நாடகம் "சபைக்கு வராத சாணக்கியர்கள்" அருமையான நாடகத் தலைப்பு - கவிதை நாடகங்களை, பாரதியார் "பாஞ்சாலி சபதம்" ஆகவும், புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் "புரட்சிக்கவி" ஆகவும் எழுதியுள்ளனர். இன்னும் பலர் எழுதியுள்ளனர். அந்த வரிசையில் கவிஞர் சுடர்வண்ணனும் இந்தக் கவிதை நாடகத்தை எழுதியுள்ளார். இந்தக் கவிதை நாடகத்தின் சில காட்சிகளை அவர் எனக்கு வாசித்துக் காட்டியபோது 9-12-1944ஆம் ஆண்டில் புரட்சிக் கவிஞர் எழுதி அரங்கேற்றமான "இன்ப இரவு" என்ற கவிதை நாடகந்தான் நினைவிற்கு வந்தது.

சேலத்தில் உள்ள சென்ட்ரல் டாக்கீஸில், தந்தை பெரியார் தலைமையில் இந்த நாடகம் அரங்கேற்றமானது. அமைச்சர் பாத்திரத்தில் நான்கூட நடித்திருக்கிறேன். இசையமைப்பாளர் டி.ஜி. லிங்கப்பாவின் சகோதரி சரஸ்வதி கதாநாயகியாகவும், ஞானமணி கதாநாயகனாகவும் நடித்தனர். அந்தக்கவிதை நாடகத்தைப் பார்த்த பெரியார், பாரதிதாசன் அவர்களை வெகுவாகப் புகழ்ந்து பாராட்டினார். இந்த நாடகத்திற்காக. சந்தனைச் சிற்பி சிங்கார வேலர், முன்னாள் சபாநாயகர் கே.ராசாராம், இயக்குநர் எஸ்.பி. முத்துராமனின் தந்தை காரைக்குடி இராமசுப்பையா ஆகியோர் இணைந்து பாடுபட்டனர். சிங்கார வேலர் வீட்டில்தான் நாடக ஒத்திகைகள் நடைபெற்றன. கவிஞர் சுடர்வண்ணன் காட்சிகளை வாசித்தபோது கடந்த அம்பத்தெட்டு ஆண்டுகளுக்கு முன்பு, புரட்சிக் கவிஞர், 'இன்ப இரவு' கவிதை நாடகத்தை எங்களுக்கு வாசித்துக் காண்பித்த நிகழ்ச்சி நினைவிற்கு வந்தது. புரட்சிக் கவிஞரின் துணிச்சலும், கவிதையாற்றலும், கவிஞர் பெற்றுத் திகழவேண்டுமென்று வாழ்த்துகிறேன். சிறந்த கவிதை நாடக நூலை எழுதியுள்ள சுடர்வண்ணன் திறமையைப் பாராட்டி, "பாரதி தாசனின்

பரம்பரையில் ஒருவராக" - நாடக ஆசிரியர் சுடர் வண்ணனை அறிமுகப்படுத்துவதை பெருமையாக கருதுகிறேன்.

கடந்த காலங்களில் எத்தனையோ கவிஞர்கள் கவிதை நாடகங்கள் எழுதியிருக்கிறார்கள். அவைகளில் ஒரு சில நூல்கள்தான் நூலகங்களில் உள்ளன. மற்றவைகள் மக்கள் பார்வைக்கு வராமல் போய்விட்டன. கவிஞர்சுடர் வண்ணன், அவர் எழுதி அரங்கேற்றமான "தேரோடும் வீதியிலே" மேடை நாடகத்தை நூலாக்கி வெளியிட்டுள்ளார். அதே போல் இந்தக் கவிதை நாடகத்தையும் நூலாக்குகின்ற முயற்சியில் ஈடுபட்டுள்ளார். அவரது இந்த சிறந்த முயற்சியைப் பாராட்டி, வாழ்த்துகிறேன். தொடர்ந்து சிறந்த கவிதைத் தொகுப்பு நூல் ஒன்றையும் தயாரிக்கின்ற பணியில் ஈடுபட்டுள்ளார். அதற்கும் என் வாழ்த்தினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நிறைவாக ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன் - "சபைக்கு வராத சாணக்கியர்கள்" என்ற கவிதை நாடகத்தை நூலாக்குவதோடு, அரங்கேற்றமும் செய்தால் "வரலாற்று நியதி" ஒன்று ஏற்படுவதற்கு - உறுதுணையாக இருக்கும். புரட்சிக்கவிஞரின் கவிதை நாடகம் சேலத்தில் 9-2-1944இல் அரங்கேறியது போல் - கவிஞர் சுடர்வண்ணனின் இந்த கவிதைநாடகமும், சிறந்த நடிகர்களை வைத்து அதே 9-2-2002இல் அரங்கேற்றம் செய்தால்நான் மகிழ்ச்சி யடைவேன். வரலாற்று சம்பவங்களை நான் மீண்டும் நடத்திப் பார்க்கும்போது, அதுவே வளர்ச்சிக்குரிய வழிகாட்டியாகவும் அமைந்துவிடும்.

இந்தக் கவிதை நாடக நூலை வாங்கிப் படிப்பவர்கள், படித்ததோடு நின்றுவிடாமல் சிறந்த கலைஞர்கள் ஒன்றுகூடி, நாடகமாக நடத்திக்காட்டி, மக்களுக்கு ஓர் சிந்தனைவிருந்தை அளிப்பதும் சிறப்பாக இருக்கும்.

*கவிஞர் நா. சுடர்வண்ணன் எழுதிய 'சபைக்கு வராத சாணக்கியர்கள்' என்னும் நூலுக்கு 2001–இல் வழங்கிய அணிந்துரை.*

## புகழ்பெற்ற நேர்காணல்

இந்தப் புகழ்பெற்ற நேர்காணலை தொகுத்தளித்துள்ள என் நீண்ட நாள் நண்பர் தமிழறிஞர் திரு. அன்புப்பழம் நீ அவர்களைப் பாராட்டுகிறேன். கீ. இராமலிங்கனாரைத் தொடர்ந்து ஆயிரத்திற்கும் மேற்பட்ட தமிழ்த் திருமணங்களை இவர்நடத்தி வைத்துள்ளார் என்பது சிறப்புக்குரியது.

இந்நேர்காணலை படிக்கும் பொழுது திருக்குறளில் அகர... த்தை அ வில் ஆரம்பித்த திருவள்ளுவரை அ என்ற எழுத்தை முதலாகக் கொண்ட அன்புப்பழம் நீ நேர்காணல் கண்டிருந்தால் நமக்கெல்லாம் நிறைய செய்திகள் கிடைத்திருக்குமே என்று எண்ணிப் பார்க்கின்றேன்.

அவ்வப்பொழுது நேரில் நண்பர்களை நாம் சந்திக்கும் பொழுது அன்றாட நிகழ்வுகளை பற்றித்தான் மேலோட்டமாக பேசிக்கொள்வோம். ஆனால் திரு. அன்புப்பழம் நீ அவர்கள் நேரில் பேசுவதையே முறைப்படுத்தி கேள்வி முதல் மூலமாக முதுபெரும் அறிஞர்களை சந்தித்து அவர்களுடைய எண்ணங்களையும், குறிக்கோள்களையும் கேட்டு இந்நாள் வரை பாதுகாத்துத் தொகுத்து இன்று நம்மிடையே நூலாக அளித்துள்ளதை எண்ணி எண்ணி வியக்கின்றேன்.

இசைக் கலைஞர்களையும், நாடகக் கலைஞர்கள் மற்றும் பல துறைகளிலுள்ளோரையும் அவர் நேர்காணல் கண்டிருக்கலாம். ஆனால் தமிழறிஞர்களையும் இலக்கிய இலக்கண நூலாசிரியர்களிடையே உசாவி வந்துள்ளதால் அத்துறையிலுள்ள திரு.கீ. இராமலிங்கனார் திரு. கி. ஆ. பெ. விசுவநாதம், முனைவர் செட்டியார் முனைவர் மு.வ. போன்ற தமிழறிஞர்களை நேர்காணல் கண்டுள்ளார்.

கட்டுரைக்காவலர் அன்புப்பழம் நீ அவர்கள் இக்கட்டுரையில் நேர்காணல் கண்டுள்ளவர்களின் தமிழ்ப்பற்றையும், தமிழரின் முன்னேற்றத்திற்காகவும், அவர்கள் சொந்த வாழ்க்கையில் அன்றாட நிகழ்வுகள் பற்றியும் எடுத்துரைப்பது நமது வருங்கால சந்ததியினருக்கு மிகவும் பயனுள்ளதாக அமைந்துள்ளது. உதாரணமாக தந்தை பெரியாரின் கொள்கை மீதுள்ள ஈடுபாட்டால் செவாலியே சிவாஜி கணேசன் அவர்கள் பெரியார் வேடந்தாங்கி நடிப்பது என் லட்சியம் என்று தெரிவித்துள்ளார்கள்.

மேலும் நண்பர் அன்புப்பழம் நீ அவர்கள் சங்க காலத்தில் இருந்திருந்தால், சேர, சோழ, பாண்டிய மன்னர்களை நேர்காணல் கண்டிருந்தால் ஓலைச்சுவடிகளை தேடிக் கொண்டிராமல் ஐயா அவர்கள் மூலமாகவே பல செய்திகள் தெரிந்து கொண்டிருக்கலாம் என்றும் எண்ணுகின்றேன்.

நண்பருக்கு தற்சமயம் வயது 80. இந்த வயதிலும் இவ்வரிய, தமிழகம் போற்றும் புகழ் பெற்ற அறிஞர்களின் நேர்காணலை தொகுத்து நூலாக அளித்தமைக்கு அவரை பாராட்டி பெருமை கொள்கிறேன்.

இவ்வயதான காலத்திலும் அவர் பேசி (தொலைபேசி) மூலமாக விடுபட்ட அறிஞர்களை நேர்காணல் செய்யலாம் என்பது எனது கருத்தாகும்.

இந்நூலை பள்ளி, கல்லூரிகளிலும் பாடமாக வைத்து அறிஞர்களின் எண்ணங்களையும், குறிக்கோள்களையும் வருங்கால இளைஞர்கள் அறியும்படி செய்தால் நலம் பயக்கும்.

வாழ்க! வளர்க! திரு அன்புப் பழம் நீ புகழ்

*அன்புப்பழம் நீ எழுதிய 'புகழ்பெற்ற நேர்காணல்' என்னும் நூலுக்கு 2001-இல் வழங்கிய அணிந்துரை.*

## பூங்குன்றம்

கவிதைகளின் தரத்தைவிட, கவிஞர்களின் எண்ணிக்கை உயர்ந்து வருகிற காலம்.

அதிகமாக எழுத வேண்டும் என்பதைவிட பயனுள்ளதாக சில எழுதினாலே சிறப்பானது என்று கருதுபவன் நான்.

எதைச் செய்தாலும் சிறப்பாகச் செய்ய வேண்டும் என்று எண்ணுகிற, எண்ணியதைச் செய்து முடிக்கிற பேராற்றல் படைத்த கவிஞர் ஆ. திருவாசகன் அவர்கள் ஓய்வில்லாமல் உழைப்பவர். எதைத் தொடங்கினாலும் அதைத் தொடர்ந்து செய்து வருபவர்.

நான் உட்பட எத்தனையோ பேர் இதழ் தொடங்கி அதைத் தொடர்ந்து வெளியிட முடியாமல் விட்டுவிட்டோம். ஆனால் தான் தொடங்கிய 'வீரசைவமுரசு' இதழினை பல்வேறு இன்னல்களுக் கிடையே தொடர்ந்து வெளியிட்டு வருபவர்.

அதைப்போன்றே தாம் தொடங்கிய அருள்சுடர் பதிப்பகத்தின் வாயிலாக ஆண்டுதோறும் தரமான தமிழ் நூற்களை வெளியிட்டும் வருகிறார்.

இதுவரை ஐந்து கவிதைத் தொகுதிகளை எழுதிய வெளியிட்டு நாற்திசையும் புகழ்பெற்று விளங்கும் கவிஞர் ஆ. திருவாசகன் அவர்கள் திருவாசகத்திற்குச் சிறப்பான உரையெழுதியும், பாவேந்தர் பாடல்களை முழுமையாகத் தொகுத்து வெளியிட்டும் தமிழ் இலக்கிய உலகில் பெரும் புகழைச் சுமந்து நிற்பவர்.

'தேனாரம்' தந்த திருவாசகன் அவர்கள் 'பூங்குன்றம்' என்ற அருமையான கவிதைப் படையலை இப்போது தமிழுக்கு வழங்கியிருக்கிறார்.

மரபுக் கவிதைச் சரங்களால் ஆன இந்தத் தொகுப்பு காலத்தை வென்று நிற்கும் கவிதை நூல்.

எளிமையும், இனிமையும் கலந்து எழுதும் திறமையைப் பெற இந்த நூலை இளங்கவிஞர்கள் படிக்க வேண்டும்.

சிறந்த நூலைப் படைத்த கவிஞரை வாழ்த்துகிறேன். பாராட்டுகிறேன்.

*கவிஞர் ஆ. திருவாசகன் எழுதிய 'பூங்குன்றம்' என்னும் நூலுக்கு 2002–இல் வழங்கிய அணிந்துரை.*



## ஏழிசை அமுதம்

கவிஞர் வல்லம் பழநி நாடு அறிந்த கவிஞர். வாழும் கவிஞர்களுக்குள் மிகச் சிறந்தவரான இவர் ஏழிசை அமுதம் என்ற இசைநூலை எழுதி இருக்கிறார். இதன் தலைப்பும் நல்லதாக உள்ளது. சீர்காழி அருணாசலக் கவிராயர் கீர்த்தனைகள் எழுதி இருக்கிறார். வள்ளலார் சில இசைப்பாடல்கள் எழுதி இருக்கிறார். பூசா கிருஷ்ணமூர்த்தி, கம்பதாசன், தஞ்சை ராமையாதாஸ் போன்றோர் இசைப்பாடல் எழுதி இருக்கிறார்கள்.

கவிதை நெஞ்சத்தில் பதியும். இசைப்பாடல் பரவும் பாடல்கள் பாடுவதற்கும் நாடு முழுவதும் பரவுவதற்கும் வல்லாம் பழநி எழுதியிருக்கிறார்.

என் உள்ளத்தைக் கவர்ந்த வரிகள்.

பக்கம் 11. இன்பத்தில் துன்பம் தூங்கதடா- என் துன்பத்தில் இன்பம் ஏங்குதடா.

12. தாயின் அன்புக்கு ஈடேது- தன்மான உணர்வுக்குத் தாழ்வேது.

14. வயிரே வாழ்வுக்கு வழிகாட்டி- வளர்ச்சி வாழ்வுக்கு பெரும்போட்டி

90. திருக்குறள் இலக்கியச் சோலையில் - தினம் தினம் பாடுவோம் வேளையில்.

171. இன்னிசை என்றும் நான்பட வேண்டும் இல்லத்தில் இன்பம் இருந்திடல் வேண்டும்.

172. பாதிப்பில் சாதிப்பு நீ காட்ட வேண்டும்.

173. வினைத்தேரி விதியேறி வந்து- எனைத்தேடி மதி வாழ்வைக் கேட்டது. புரியாத போது சந்தேகம் ஏது- புரிந்திட்டபோதும் கந்தகமேது.

47. எறும்பு ஆணையிட்டால் எருமாடு போகாதே-எலும்பைக் கடித்த நாய் இரும்பை கடிக்காதே, இப்படிப் பலப்பல. இதில் என்னை நெறுக்கின, உருக்கின! பெருக்கின! சுருக்கின! தியாகராயர் ஏழிசை மன்னர் இருந்திருந்தால் அவர் இந்தப் பாடல்களுக்கு மதிப்பெண் கொடுத்திருப்பார். இதை பாடியும் இருப்பார்.

பிச்சைஇடாத பேதை மடையர்கள்

கச்சேரிக்கே கொடுப்பார் [பிச்சை]

இது ஒர பல்லவி. இப்படி இந்தப் பாடலை படிக்கும்போது இந்தப் பல்லவி ஞாபகத்துக்கு வந்தது.

தித்திக்கும் தமிழிலே முத்துமுத்தாய் தேன்போல் எண்ணத்தைத் தந்தவர் திருவள்ளுவர் என்றபாடலையும் அமுதும் தேனும் எதற்கு என்ற என் பாடலையும் என்று சீர்காழி கோவிந்தராசன் பாடினார். சி.எஸ். ஜெயராமன், சீர்காழி கோவிந்தராஜன் இவர்கள் இருந்திருந்தால் வல்லம் பழநி எழுதிய இந்தப் பாடல்களைப் பாடி இருப்பார்கள். இந்தப் பாடல்கள் பரவுவதற்குத் திரைப்பட இயக்குனர்கள் திரைப்படம் வாயிலாகப் பரவச் செய்யலாம். இசைத்துறைச் சேர்ந்தவர்களும் இந்தப் பாடல்களை ஏற்று பரவச் செய்யலாம். திரைப்படத்திற்கும் இசைத்துறைக்கும் சிறந்த பாடல்கள் இந்தப் பாடலில் உள்ளது. திருஅருட்பாபோல் பாரதி பாடல்கள் போல், வல்லம் பழநி பாடல்களையும் இடம்பெறச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அரசியல், சமூகம், பொருளாதாரம், வணிகம், அறம், பொருள், இன்பம், வீடுபோல் அனைத்தும் இந்தப் பாடலில் உள்ளது.

நெறியுடன் இருப்போர்க்கு தெம்பு கொடுக்கும்.

நெறிதவோர்க்கு அம்பாக இருக்கும்.

*கவிஞர் வல்லம் மா.பழநி எழுதிய 'ஏழிசை அமுதம்' என்னும் நூலுக்கு 2002–இல் வழங்கிய அணிந்துரை.*

## சிந்தனை வெள்ளோட்டம்

இந்தியத் திரைப்பட வரலாற்றிலேயே முதன் முதலாக திரைப்படப்பாடல்களை, நான் கேட்டுக் கொண்டதற்கிணங்க, கல்வெட்டிலே, செதுக்கி வைத்துள்ள கவிஞரே, பூவை செங்குட்டுவன்தான்!

அன்று, தமிழ்த் திரை உலகில், தமிழ்ப்பெயரோடு, தலைசிறந்து விளங்கியவர் இளங்கோவன்! அதே போல் இன்று தமிழ்ப்பெயரோடும், தமிழ் உணர்வோடும், தலைநிமிர்ந்து நிற்பவரும் கவிஞர் பூவை செங்குட்டுவன்தான்!

அவருடைய மகன் கவிஞர் தயா எழுதியுள்ள, "சிந்தனை வெள்ளோட்டம்" என்னும், புதுக்கவிதை நூலை, எடுத்துப் பிரித்துப் படித்துப் பார்த்தேன்! அதில் இடம் பெற்றுள்ள ஒவ்வொரு கவிதையும்- கவிதைத் தலைப்பும், வியப்புக்குரியது! மலைப்புக்குரியது! சிந்தனை ஓட்டத்திலும் சிந்தாமல், சிதறாமல், வெளிப்படும் கவிதையது!

வெளிநாட்டுக் கவிஞர்கள் சிலர், தாங்கள் எழுதிய கவிதைகளுக்கு தலைப்புக்களை உருவாக்க, மாதக் கணக்கில், வருடக் கணக்கில் சிந்தித்திருக்கிறார்கள்!

ஆனால், நமது இளங்கவிஞர் தயாவோ தனது, கவிதைகளுக்கேற்ப தலைப்புகளை மிக நுட்பமாக, ஆராய்ந்து வைத்துள்ளார்.

அக, அழகு முகத்தில் தெரிகிறது! கவி, அழகு. தலைப்பில் தெரிகிறது! தலைப்பைப் பார்த்ததுமே, படிக்கத் தோன்றுகிறது! இத்தகைய தலைப்பும் கவிதைச் சிறப்புமே அவருடைய வளர்ச்சிக்கு எடுத்துக்காட்டாகும்.

"கம்பன் மகன் அம்பிகாபதி" பாவேந்தர் மகன் மன்னர்மன்னன், மகாவித்வான் மகன் சிதம்பரம், சுரதா மகன் கல்லாடன்- எனகவிஞர்களின் மகன்களும் கவிஞர்களான பட்டியல், நீண்ட பட்டியல்! அதுபோல் கவிஞர் பூவை செங்குட்டுவன் மகன் தயாவும், சிந்தனை வெள்ளோட்டமாக கவிஞராகிறார்!

"பூக்களின் மாநாடு" என்ற தலைப்பு மிகச்சிறந்த தலைப்பாகும். நாட்டில் ஒவ்வொரு சாதிக்கும் ஒவ்வொரு இனத்திற்கும், ஒவ்வொரு மதத்திற்கும் மாநாடு நடத்துவதைப் பார்த்திருக்கிறோம். ஆனால் "பூக்களுக்கு மாநாடு" என்ற தலைப்பில் பாடியுள்ள கவிதைகள் சிந்தனையைத் தூண்டக் கூடியவை.

புகழ்பெற்ற புதுக்கவிஞர்கள் பட்டியலில் பூவை. தயாவும் இடம் பெறுவார்!

நான் எழுதிய "அமுதும் தேனும் எதற்கு" என்ற பாடல் உலகப் புகழ்பெற்றதைப் போல் கவிஞர் பூவை செங்குட்டுவன் எழுதிய

"திருப்பரங்குன்றத்தில் நீ சிரித்தால்" - என்ற பாடல் புகழ்பெற்றதைப் போல் கவிஞர் தயாவும், இந்தப் புதுக்கவிதை நூல் மூலம் புகழ் பெறுவார். தந்தை பூவை. செங்குட்டுவன் பாடல்வரிகளே வழிகாட்டலாகும்.

மிகச் சிறந்த கவிஞருள் ஒருவரான பூவை. செங்குட்டுவன் வழியைப் பின்பற்றி நடந்தாலே போதும் சிறந்த கவிஞன் என்ற, புகழைத் பூவை. தயா தட்டிச் செல்லலாம்.

"தொடரும் உண்மைகள்"

"முயற்சிப்போம் காலம் வரும்"

"இலவச விளம்பரம்"

"சந்தேகம்"

"கலப்பு மணத்தை வரவேற்போம்" போன்ற தலைப்புகள் கவிஞர் தயாவின், கவிதை வளர்ச்சிக்குப் படிக்கட்டுகளாக அமையும். சிறந்து வாழ, உயர்ந்த புகழைப் பெற்று, பல விருதுகள் பெற்று வாழ வாழ்த்துகிறேன்.

*கவிஞர் பூவை. தயா எழுதிய 'சிந்தனை வெள்ளோட்டம்' என்னும் நூலுக்கு 2002இல் வழங்கிய அணிந்துரை.*

## இதயகீதம்

மண்ணில் சுரக்கிறது ஊற்று.

மலையில் சுரக்கிறது அருவி.

மனித மூளையில் சுரக்கிறது கவிதை.

ஊற்றும் அருவியும் எப்படி இயற்கையாகப் பொங்குகின்றனவோ - அப்படித்தான் கவிதை என்பதும் இயற்கையாகவே பொங்குகிறது.

எல்லா நிலத்திலும் ஊற்று பீரிடுவது இல்லை. எல்லா மலையிலும் அருவி வழிவது இல்லை. அப்படித்தான் எல்லா மனித மூளையிலும் கவிதை மலர்வது இல்லை.

எனவேதான் கவிதைகளை வடிக்கும் கவிஞர்களுக்குத் தனியான ஒரு சிறப்புமதிப்பு தரப்பட்டுள்ளது பன்னெடுங்காலமாக.

அத்தகைய இயற்கைக் கவிஞர்கள் வரிசையில் தமக்கும் ஓர் இடம் தேடும் ஆர்வத் துடிப்போடு 'இதய கீதம்' என்னும் தலைப்பில் ஒரு நூலை இயற்றியுள்ளார் கவிஞர் பட்டுக்கோட்டை குஞ்சிதபாதம்.

என் மாணவப் பருவக் காலத்திலிருந்தே நண்பர் குஞ்சிதபாதம் அவர்களையும்அவருடைய குடும்பத்தினரையும் நன்றாக அறிந்து பழகி வந்துள்ளேன்.

தஞ்சாவூர் மாவட்டத்தில் இராசமடம், உரத்த நாடு ஆகிய ஊர்களில் மராட்டிய மன்னரான இரண்டாம் சரபோஜி அன்னதானச் சத்திரங்களை நிறுவினார். உடல் ஊனமுற்றவர்களுக்கும் வழிப்போக்கர்களுக்கும் பட்டினித் தீயில் கருகிவிடக்கூடாது என்னும் இரக்க நெஞ்சத்தால் சோற்றுக் கொடை வழங்கும் நிலையங்களாகத்தான் அந்தச் சத்திரங்களை அவர் எழுப்பினார்.

ஆனால் அறிவுக்கொடை அளிக்கின்ற கல்விநிறுவனங்களாகவும் சத்திரங்கள் பலவற்றை மாற்றிய பெருமை சர்.ஏ.டி. பன்னீர் செல்வம் அவர்களுக்கு உண்டு. தேய்ந்து கிடந்த திராவிட இனம் முன்னேற வேண்டும் என்பதற்காகத் தோன்றிய நீதிக் கட்சியில் முன்னணித் தலைவராகப் புகழ் பூண்டவர் ஆவார் அவர். தஞ்சாவூர் மாவட்டக் கழகத் தலைவர் பதவியில் இருந்தபோது தான் சரபோஜி மன்னரின் சத்திரங்களில் பள்ளிக்கூடங்களும் அவற்றை ஒட்டி இலவச மாணவர் விடுதிகளும் இயங்குவதற்கு அவர் வழி வகுத்தார்.

அவருக்குப் பிறகு அவற்றின் அரிய பயன்கள் ஏழை, எளிய திராவிட மாணவர்களுக்குக் கிட்டுவதற்காகப் பரிவோடும் திறமையோடும் செயலாற்றியவர் - காங்கிரஸ் கட்சித் தலைவர்களில் ஒருவரான பட்டுக்கோட்டை வி. நாடிமுத்துப்பிள்ளை அவர்கள். அவரும் தஞ்சாவூர் மாவட்டக் கழகத் தலைவராகச் செல்வாக்குப் பெற்றவர் ஆவார்.

அவரது இரக்க நெஞ்சத்தால் தான் -நாகப்பட்டினம் மாவட்டம் சிக்கல் சிறுநகர் அருகே உள்ள பழையனூர் என்னும் சிற்றூரில் பிறந்த இந்தச் சுரதாவும் இராசாமடம், உரத்த நாடு ஆகிய ஊர்களில் உள்ள இலவச மாணவர் விடுதிகளில் தங்கிக் கொண்டு அந்தச் சத்திரத்துப் பள்ளிகளில் படித்துவெளிச்சத்துக்கு வரும் வாய்ப்பினைப் பெற்றேன்.

என்னைப் போலவே தான் இராசாமடத்தில் பிறந்த வானொலி நாடக ஆசிரியர் 'கலைமாமணி' பட்டுக்கோட்டை குமாரவேல், அவருடைய இளவல் கவிஞர் பட்டுக்கோட்டை குஞ்சிதபாதம் இருவரும் அந்தச் சத்திரங்களின் பள்ளிகளில் பயின்று தமிழ்நாடு அறிந்த எழுத்துப் படைப்பாளிகளாக நிமிர்ந்து நிற்கின்றார்கள்.

ஏறத்தாழப் பத்து ஆண்டுகளுக்கு முன்னே நண்பர் குஞ்சிதபாதம் அவர்களுடைய மணிவிழா சிறப்பாக நடைபெற்றது. அதில்கலந்து கொள்ள நான் சென்றேன். என்னுடன் தமிழ் இலக்கியத்தின் பல துறைகளிலும் முத்திரை பதித்துப் பரிசுகள் பெற்றுள்ள 'கவிமாமணி' அ. மறைமலையான் அவர்களும் விழாவில் பங்கேற்க வந்தார்.

அப்போது என் வாழ்த்துரையில் இப்படிக் குறிப்பிட்டதாக என் நினைவு:

"....வானொலி நாடகங்கள், திரைப்படக் கதைகள், சிறுகதைகள், கட்டுரைகள் - என்றெல்லாம் உரைநடையில் சாதனைகள் படைத்துள்ள நண்பர் குஞ்சிதபாதம், கவிதைகள் எழுதும் முயற்சியில் ஈடுபட்டாலும் அதிலும் அவர் வெற்றிபெறக் கூடியவராகவே விளங்குவார்."

அன்றைக்கு நான் கூறிய சொற்களுக்கு நல்ல ஒரு சான்றாகவே இன்றைக்கு இவரது 'இதயகீதம்' கவிதை நூல் வெளிவருவது - எனக்குப் பெருமகிழ்ச்சி அளிக்கிறது.

'ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்' என்னும் பழமொழிக்கு ஏற்ப, நூலின் இடம் கருதி கவிஞரின் படைப்பாற்றலுக்கு எடுத்துக்காட்டாகச் சில வரிகளை மட்டுமே தொட்டுக் காட்ட விரும்புகிறேன்.

"கண் பார்த்து வரைவதெல்லாம்
கருத்தின் ஓவியம் - கல்
மண் கொண்டு வடிப்ப தெல்லாம்
சிற்பக் காவியம்"

- 'சிற்பக் கலை' என்னும் பாடலில் இடம் பெற்றுள்ள இந்த வரிகள், நண்பர் குஞ்சிதபாதம் அவர்களால் எதுகை - மோனை எழில் நகைகளோடு ஓசை அளவின் ஒழுங்கு மீறாத மரபுப் பாடல் மகளிர் சிலைகளையும் கவிதைகளாக வடிக்க முடியும் என்பதை அடையாளம் காட்டுகின்றன.

'இதய கீதம்' நூலைத் தந்துள்ள கவிஞர் பட்டுக்கோட்டை குஞ்சிதபாதம் ஏழை, எளிய மக்களுக்காகவும் எழுச்சிப் பாடல்கள் தீட்டிப் புகழ்மலையில் ஏறி நிற்க உளங்கனிந்து வாழ்த்துகிறேன்.

*கவிஞர் பட்டுக்கோட்டை குஞ்சிதபாதம் எழுதிய 'இதய கீதம்' என்னும் நூலுக்கு 2002-இல் வழங்கிய அணிந்துரை.*

## கல்வெட்டுக்கள்

கம்பதாசன் காலத்தில் வசனக் கவிதையாக இருந்தது பிற்காலத்தில் புதுக்கவிதை என்று பெயர் பெற்றது. என்னுடைய நண்பர் சாலை இளந்திரையன் 'உரைவீச்சு' என்ற சொல்லைக் கையாண்டார். நானும் அந்த முறையில் இந்த 'உரைவீச்சுக்' கவிதைகளைப் படித்தேன். நீலா ஆனந்த் தன் சொல்லாட்சியில் புதிய சொற்களை மிக அருமையாக தனது சிந்தனைகளில் வெளிப்படுத்தியுள்ளார்.

'முத்தமிழ் முருகா' என்ற தொடக்கமே மிகச் சிறப்பாக அமைந்துள்ளது. இந்த நூலைப் படித்த அனைவருமே இவரைப் பாராட்டுவார்கள். சமுதாயத்திற்கு தேவையான உரைவீச்சுக் கவிதைகளை வழங்கியிருக்கும் இவர் புதிய தலைமுறையின் புதிய அறிவாளி. சாதியைப் பற்றி

**'பள்ளிக் குடத்திலுள பால் மனதில்**

**தெளிவாய் கலக்கிறது சாதி விஷம்!**

என்ற வரிகளில் சாதி மழலைகளின் மனதில் கலந்துவிட்ட அபாயத்தை உணர்த்துகிறார். இதைப் போன்றே பல்வேறு சமுதாயப் பிரச்சினைகளையும், தனது கவிதைகளில் கருப்பொருளாக்கியுள்ளார். 'புதிய முடிவு' என்ற கவிதையில் பெண்மையின் தன்மைக்குள் புகுந்து புதிய முடிவுகளை கண்டிருக்கும் இவர் வித்தியாசமான சீர்திருத்தவாதியாகத் திகழ்கிறார். வானமாய் விரிந்துள்ள வர்ணனைகள் இக்கவிதைகளுக்கு மெருகேற்றுகின்றன. இவர் இந்த நூற்றாண்டைத் தொட்டுக் கொண்டே தொடர்ந்த புகழைப் பெறுவார் என்று உறுதியாக கூறுகிறேன்.

*கவிஞர். க. நீலா ஆனந்த் எழுதிய 'கல்வெட்டுக்கள்' என்னும் நூலுக்கு 2002–இல் வழங்கிய அணிந்துரை.*

## வான் மழை

தமிழிலக்கிய வரலாற்றில் இசுலாமியருக்கும் பெரும் பங்குண்டு. வாழையடி வாழையாக அந்த வரலாறு நின்று பரவி நதிபோல் நீளுகிறது. தமிழர்களின் வாழ்வியலில் பல அரபு சொற்கள் ஆணிவேர்களாய் உள்ளன. இசுலாமியர்களின் கலை, பண்பாடு, அரசியல், சமூக இயல் இவைகளும் தமிழைச் சுற்றியே அமைந்துள்ளன.

தான் வணங்கிய முருகனை அருணகிரிநாதர்,

**"சூர்க் கொன்ற ராவுத்தனே**
**மயிலேறும் ராவுத்தனே"**

எனக் குதிரை ராவுத்தனாகவே கற்பனை செய்து பாடியுள்ளார். இவ்வாறு பல வழிகளில் தமிழோடும், தமிழரோடும் "சுனையில் கலந்து குளிர்ச்சியாய்" உள்ள இசுலாமிய பெருமக்கள் போற்றுதலுக்கும் பாராட்டுதலுக்கும் உரியவர்கள்.

16அந்தாதி நூற்களும், 6 அம்மானை நூற்களும், 11 கலம்பக நூற்களும், 20 கும்மி நூற்களும், 15 கோவை நூற்களும், 13 சதக நூற்களும், 30 சிந்து நூற்களும், 67 ஞானப்பாடல் நூற்களும், 34 கீர்த்தன நூற்களும், 11 திருப்புகழ் நூற்களும், 9 பதம் நூற்களும், 1 பள்ளு நூலும், 31 பிள்ளைத் தமிழ் நூற்களும், 13 புராண நூற்களும், 22 பதிக நூற்களும், மேலும் திரட்டு, மஞ்சரி, படைப்போர், நாமா, நாயகம், மாலைகள், வண்ணம், அலங்காரம், தாலாட்டு, ஏசல், வாழ்த்து போன்ற நூற்றுக்கணக்கான நூற்களும் இசுலாமிய பெருமக்களால் எழுதப்பட்டவை என்பதை எண்ணும்போது மகிழ்வு ஏற்படுகிறது.

இந்த வரலாற்றை தொடர்ந்து, நண்பர் 'கவிஞர் அ. முஹம்மது ஜமால்' தமது 'வான்மழை'யைப் பெய்து உள்ளார். நூல்

பெயராலேயே நம்மைத் தமிழால் குளிப்பாட்டுகிறார். நூலைப்படித்தேன். புதுக்கவிதைகள் என்னும் மதுக்கவிதைகள்.

வரிக்கு வரி வானம் இடி இடித்து கருத்து மழை பெய்கிறது! வார்த்தைக்கு வார்த்தை பொருள் விளை பூமி!

**ஓ, இளைஞர்களே!**
**கொஞ்சம் கேளுங்கள்**
**நீங்கள் சிந்திக்க**
**கற்றுக் கொள்ளுங்கள்!**

என இவர் இளைஞர்களுக்கு கொம்பு சீவி விடுகிறார்.

'திரைப்படம் என்பது அங்கீகரிக்கப்பட்ட விபசாரம்' என வேதனை வரிகள் நெய்து விடியலைத் தேடுகிறார்!

'எய்ட்ஸ்' நோயைப் பற்றியும் எச்சரிக்கையோடு எழுதி சமுதாயத் தொண்டு புரிகிறார்.

**'கண்ணீரால் புன்னகை சிந்துகிறாள்;**
**நங்கூரம் இல்லாத கப்பல்**
**நடுக்கடலில் ஆடுவதைப் போல'**

என உவமைக் கொட்டி விதவைக் கோலத்தை சித்தரிக்கும் இவர் விரல்கட்கு தங்க மோதிரம் போடலாம்.

**'உழைக்க உடம்பிருக்கு**
**உடம்பிலே தெம்பிருக்கு**
**வேலை கெடைக்கலியே**
**வேதனை தீரலியே'**

என ஏழை படும் துயரினைச் சொல்லி நம்மை கண்ணீரில் ஆழ்த்துகிறார்.

உலகிலேயே அரசியல்வாதியாய் இல்லாத ஒரு விஞ்ஞானியை நாட்டின் குடியரசுத் தலைவராக அமர்த்திய பெருமை நமது இந்தியாவைச் சாரும். நமது குடியரசுத் தலைவர் பாரத ரத்னா டாக்டர் அப்துல் கலாம் அவர்களைப் பற்றிய ஒரு அருமையான கவிதையைத் தந்துள்ளார்.

'காதலில் வென்றால்

சொர்க்கம் பூமியில் தெரியும்!'

- என்கிறார் கவிஞர் சரிதானே!

'கூண்டுக்கிளிகளல்ல பெண்கள்'

எனக்கூறி பாரதியை, பாவேந்தரை, நினைவுபடுத்துகிறார். கோவை குண்டு வெடிப்பும் 'கவிதையாகி' இந்தியாவைக் கனவில் காண்கிறார்.

'கற்பூரம் எிந்து கரைவது போல

கனவாக மறைகிறது - எது

குழந்தைத் தொழிலாளியின் எதிர்காலமே'

சுமையான வரிகள்! கண்களில் நீர் கசிய வைக்கிறது. சமுதாயத்தின் பல்வேறு நிகழ்வுகளைப் படம்பிடிக்கும் இவரின் கவிதைகள்! சமுதாய மறுமலர்ச்சிக்குத் தூவப்பட்ட விதைகள். இவரின் கைவண்ணத்தில் செந்தமிழ்த் தாய் சீர்வரிசைப் பெறுகிறாள்! பயனுள்ள நூல்! வாங்கிப் பயன்பெறுவீர்!

வாழ்த்துக்கள்!

*கவிஞர் அ. முகம்மது ஜமால் எழுதிய 'வான் மழை' என்னும் நூலுக்கு 2002இல் வழங்கிய அணிந்துரை.*



## சிந்திப்பாய் என்தோழா

கவிஞர் அண்ணா கணேசன் எழுதியுள்ள "சிந்திப்பாய் என் தோழா!" என்ற கவிதை நூலைப் படித்தேன். இவர் கவிதைகளின் தலைப்புகளைப் படித்தாலே சிந்தனையைத் தூண்டும்படியாக உள்ளது! ஆசை - சாதாரண ஆசையல்ல. நம் நாடு வல்லரசாக வேண்டுமென்னும் ஆசை! இதைப்போன்ற பல தலைப்புகள் உள்ளன.

நான் மரபுக் கவிதைக் கால கவிஞன். இவர் புதுக்கவிதைக்கால கவிஞர். புதுக்கவிதையில் புதுமையைப் படைத்துள்ளார். படித்தவுடன் மனதில் பதியும்படியாக உள்ளது.

"தட்சணைக்கோர் முற்றுப்புள்ளி
தனியுடைமை ஒழிய வேண்டும்
கொடுக்கவும் யாதும் இருக்காது
கொள்ளவு மங்கே இடமேது!?
என்ற நிலையொன்று
இந்நாட்டில் வரும்போது...." [பக்கம் 100]

என்று வரதட்சணைக் கொடுமையை ஒழிக்க முற்றான ஒரு கருத்தை மிக எளிமையாக சொல்லியுள்ளார். பெரியாரின் பேச்சைப்போல் இவரின் புதுக்கவிதையும் எளிமையில் மக்களைச் சென்றடையும்படி உள்ளது. பெரியாரையும் மறக்க முடியாது; இந்தக் கவிஞர் அண்ணா கணேசனையும் மறக்க முடியாது.

"தூங்குகின்ற தமிழனும் விழித்தெழுந்து
வேங்கையென பாய்ந்திட ஒருவேளை வரும்!" [பக்கம் 9]
"திராவிட மதத்தைத் தமிழர் தழுவினால்
திருக்குறள் தானே புனித நூலாகும்."

"திராவிடனே விழிப்புணர்ச்சி கொள்ளடா!- இங்கு
தீராத கொடுமையினை வெல்லடா
இந்த மாதிரி மக்களாட்சி நடக்குது பாரு! - இன்னும்
எத்தனை நாள் இப்படியே ஏய்க்கப் போகிறான்!" [பக்கம்11]
"அணையாச் சோதி ஆகிவிட்ட சாதிச்
சண்டைகள், மதக் கலவரங்கள்
இத்தனையும் உள்ளடக்கி இந்தியா
ஏற்றம் காண்பது எந்நாளோ?" [பக்கம் 15]
"எங்கள் தோழர்களின் இரத்தமும் வியர்வையும்
தாவர எண்ணெயாய் தனிப்படல மிட்டிருக்கும்!" [பக்கம் 20]
"உழைத்தது போதும் கொதித்தெழுங்கள்! - வாலைக்
குழைப்பவன் தன்னைத் திருத்திடுங்கள்..."
"கடலில் மூழ்கி முத்தெடுத்தோம் - கஞ்சிக்
கலயம் நிறைய என்செய்தோம்?
சன்னல் வைத்து சாலை இணைத்தோம் - நம்
ஓலைக் குடிசைக் கென்செய்தோம்?
அடித்துக் களைந்து அளந்து விட்டோம் - நம்
சோற்றுக் கென்று என்செய்தோம்?
............
உழைப்பது ஒன்றே என்றின்றி
உடமைக்கு நாமும் போராடுவோம்!"
"தடுப்பதென்றே எவரேனும் வந்துவிட்டால்
வெட்டரிவாள் தூக்குதற்கும் தயங்காக் கைகள்
எங்கள் கைகள்!" [பக்கம்29]
"உழைக்காத வர்க்கம் தன்னைக் காக்கும் தெய்வம் - நாளும்
உழைக்கின்ற வர்க்கத்தை வதைப்பதேனோ"[பக்கம் 31]
"பார்முழுதும் உன்னுழைப்பால் விழித்துக் கொண்டார்
பாட்டாளி நீ மட்டும் விழிப்ப தெந்நாள்?" [பக்கம் 35]
"நிதி இல்லார் வாழ்வினிலே நீதி சாவுது!" [பக்கம் 39]
"பணம் கொடுத்துப் பட்டம் வாங்கினால் அறிவு வராது"[பக்கம் 44]

"கடமையை மறந்து காதலில் லயித்தோர்
அமரகாவிய மானார்களே யன்றி
வாழ்க்கையில் வெற்றி பெற்றார்களில்லை" [பக்கம் 46]
"சாதிக்கொரு நீதி கூறும் சமமில்லா சட்டங்கள் உள்ளவரை,
சாதிச் சங்கங்கள் தலையெடுக்கத்தான் செய்யும்!" [பக்கம் 51]
"சொத்துரிமை வேர்களுக்குச் சுடுதண்ணீர் வார்த்திடுவீர்
ஒட்டுமொத்தம் ஒழியுமிந்த உலகிலுள்ள பிணியனைத்தும்!" [பக்கம்62]
"விதைதானே பரம்பரையைக் காட்டும் - அன்றி
விளை நிலமும் காட்டுவ உண்டோ?"
"கோமாளி வேஷமிட்டு கூத்தாடியவன்கூட
நாடாள நேரும் - நாம் செய்யும் தவறால்" [பக்கம் 81]

இவையெல்லாம் கவிஞரின் வரிகள்

இந்த நூலை ஆங்கிலம் போன்ற பிற மொழிகளில் மொழி பெயர்த்தால் அண்ணா கணேசன் அவர்கட்கு பொறாமை இல்லாத புகழ் கிடைக்கும். 82வயதுடைய நான் இவரை பாராட்ட வேண்டுமென்பதற்காகச் சொல்லவில்லை. உண்மையிலேயே உணர்ந்து, நூலின் அரிய கருத்துக்களை படித்தறிந்து பாராட்டுகின்றேன். இவரின் போக்கையும் சிந்திக்கின்ற முறையையும் பழைய தலைமுறை படித்துப்பார்க்கட்டும். புதிய தலைமுறை படித்து பின்பற்றட்டும். நான் அறிந்து, தெரிந்து பலரைப் பாராட்டியதால்தான் அவர்கள் இன்று மேன்மையடைந்துள்ளனர். 'அண்ணா' என்கிறபோது பேரறிஞர் அண்ணாதான் நினைவுக்கு வருகிறார். அதேபோல் 'கணேசன்' என்றால் நடிகர் திலகம் சிவாஜி கணேசன் தான் நினைப்புக்கு வருகிறார். இவர் பெயரில் இரண்டும் இருப்பதால் இரண்டுபேருடைய புகழையும் அடைவாரென நம்புகிறேன். உரைவீச்சு உலகில் உயர்ந்த புகழடைவார். விடாமல் எழுதிக் கொண்டிருந்தால் திடீரெனப் புதிய கருத்து புலப்படும். ஆவணித் திங்கள் 15ஆம் நாள் பிறந்த இவர் ஒவ்வொரு பிறந்தநாளுக்கும் ஒரு நூல் வெளியிட வேண்டும். வெளிநாட்டு மக்கள் இதைப்படித்து வியப்படைவார்கள்.

பதில் சொல்லட்டும் நோபல் குழு - கவிதை மிக அருமையான கருத்தைக் கொண்டுள்ளது. கவிஞரின் சிந்தனையாற்றலுக்கு ஒரு சான்று. நோபல் குழுவிற்கு ஒரு சவால்!

உன் பெயர்தான் ஆணோ? - கவிதையில் ஆண்மகனை சுமைதாங்கிக் கல்லாகச் சித்தரித்துள்ளார். அத்தனையும் உண்மை.

வேண்டாம் - என்ற கவிதையில் சின்ன வீட்டின் சிறுமை, தண்ணி போடும் கொடுமை, ஒழுக்கங்கெட்ட நடத்தை அதனால் வரும் விலங்கு - எனச் செய்யக்கூடாத செயல்களைப் பட்டியலிட்டிருக் கிறார் கவிஞர்.

உலக அமைதிக்காக அவர் சிந்தனையைப் பாருங்கள்:

"பட்டாளம் கொண்ட நாட்டைப் பழித்துப் பேசுவோ
பகைமைக் குணம் ஒழியப் புதுக் கழகம் காணுவோம்!
உலக நாடு அனைத்து மிணைந்து உறுதி கொள்ளுவோம்
கலக மின்றி கலந்து வாழும் மார்க்கம் காணுவோம்!"
"போர்க் குணத்தை விட்டிடுங்கள் தோழர்களே!
புதிதாக உலகமக்கள் ஒன்று சேருங்கள்.
போருக்கும் காப்பிற்கும் செலவு செய்யாதீர்
புத்துலக வளர்ச்சிக்கே அனைத்தும் செய்வீர்!
எல்லைக்கோட்டை எடுத்து உலகை இணைத்துப் பாருங்கள்!
எங்குமொரே மனிதகுல எழுச்சி காணுங்கள்!
மனித நேயம் கொண்டுலகை இணைத்துப் பாருங்கள்!
மாற்றான் என்ற சொல்லுக்கே இடமிருக்காது!"

இதைவிட உலக அமைதிக்கு, உலக மயமாக்கலுக்கு வேறு என்ன சொல்லிவிடப் போகிறார்கள்? இந்நூலின் கடைசிக் கவிதையாகிய'கவி ஒன்றே!' - கல்வெட்டில் பொறிக்கப்பட வேண்டியது. ஏனென்றால். இந்நிலவுலகில் நிலையானது நிலையாமை ஒன்றே. அதே போல் காலத்தைக் கடந்து நிலைகொள்வதும் கவிதை ஒன்றே!

வாழ்க! வெல்க!!

*கவிஞர் அண்ணா கணேசன் எழுதிய 'சிந்திப்பாய் என் தோழா' என்னும் நூலுக்கு 2002–இல் வழங்கிய அணிந்துரை.*

## இப்படிக்கு நீதான்!

"இப்படிக்கு" என்ற தலைப்பில் கி.பி.1954-ஆம் ஆண்டு கலைஞர் நடத்தியப் பத்திரிகையில், ஒரு கவிதை எழுதி இருக்கிறேன். இப்பொழுது கவிஞர் வேல்முருகன் எழுதியிருக்கும். "இப்படிக்கு நீதான்" என்ற தலைப்பில் இந்த அருமையான கவிதைகளைப் படித்துப் பார்க்கும்பொழுது நான் அப்பொழுது எழுதிய கவிதை எனக்கு இப்பொழுது நினைவுக்கு வருகிறது.

சின்னச் சின்ன ஆசைகளைவிட, இந்த கவிஞன் எழுதி இருக்கும் "ஆசையான ஆசைகள்" என்ற கவிதை மிகவும் அற்புதமாக உள்ளது.

**சிகரத்தின் சிரத்தினில் தமிழ்த்தாய்ச்**
**சிலையினை அமைத்திட வேண்டும்**
**சிலுவையைச் சுமத்திட்ட போதும் - தமிழைச்**
**சிறப்பித்தே வலம் வரவேண்டும்.**

என்ற தமிழ்ப் பற்றைக் கண்டு பரவசம் அடைகின்றேன்.

அதுவும் சிகரத்தின் சிரத்தினில் தமிழ்த் தாய்க்குச் சிலையா!

வைத்தால் எப்படி இருக்கும்? என்பதைச் சிந்திக்கும் பொழுது இதயமே தித்திக்கிறது.

இக்கவிஞர் முன்னாள் இலயோலா கல்லூரி மாணவர் என்றதும் இதே கல்லூரியில் பயின்ற முன்னாள் குடியரசுத் தலைவர் திரு. ஆர். வெங்கட்ராமன் நினைவுக்கு வருகிறது. அவர் இலயோலா கல்லூரிக்குப் பெருமை சேர்த்ததுபோல் கவிஞர் வேல் முருகனும் இக்கல்லூரிக்குப் பெருமை சேர்த்திருக்கிறார் என்பதை நினைக்கும்போது நான் மிகவும் பெருமை அடைகின்றேன்.

நானும் இராஜமாட மாணவன்தான் இன்னும் நான் மட்டும் அல்ல; பேராசிரியர். திரு. இலக்குவனார் அவர்களும், எஸ். சோமசுந்தரம் அவர்களும், மற்றும் வானொலி நாடகத்தில் ஏகப்பட்ட நாடகங்களை எழுதி சாதனை படைத்த பட்டுக்கோட்டை குமாரவேல் அவர்களும் அந்தப் பள்ளியில் பயின்றவர்கள்தான்.

அந்தப் பள்ளியில் படித்த அவர்கள் அனைவரும் புகழ்பெற்று விளங்குகிறார்கள். அங்குப் படித்த நானும் புகழோடுதான் விளங்குகிறேன். அதேபோல் இலயோலாக் கல்லூரியில் படித்த தம்பி வேல்முருகனும் பேரோடும், புகழோடும் விளங்குவார் என்பது அனைவரும் அறியப்போகும் உண்மை. அதிக பக்கங்களைக் கொண்ட கட்டுரையால் சாதிக்க முடியாத ஒன்றை ஒரு சிறுகவிதைச் சாதித்துவிடும் என்பது திண்ணம். சான்றாக,

"பெருவிரல் கொண்டு பூமியை அழுத்து
பிரியும் தெரியும் பாதாளம் அடுத்து"
"தளர்ந்தால் மனத்தில் கலந்திடும் அழுக்கு
துணிந்தால் வெற்றிதான் ஆயிரம் இருக்கு"

இன்றைய இளைஞர்களைத் தட்டி எழுப்பும் இனிதான புரட்சிகர வரி இது.

குழந்தையைப் பற்றி பாடும்பொழுது-
இளங்குழந்தை இமைய[யி]சைக்கும்
இதத்தைப் பார்ததால் - பால்
இளநிலவும் அதன் விழியில் உறக்கம் கேட்கும் - அது
விழுந்து விழுந்து எழுந்து நடக்கும்
விதத்தைப் பார்த்தால் - பல்
விழுந்து விட்டக் கிழவனுக்கும் வீரம் பூக்கும்!

இங்கே துவண்டு கிடக்கும் மனிதனைத் தட்டி எழுப்ப இவர் வரிகள் ஒரு தூண்டுகோலாகி அவர்களைத் தூக்கி நிறுத்துகின்றன.

"பாரதம் முடிந்து விட்டது
எங்கள் பாரதத்தில் இன்னும்
பாரதம் மட்டும் முடியவே இல்லை"

இன்றைய பாரதத்தில் அமைதியின்மையை, அவல நிலையை

படம் பிடித்துக் காட்டி இருக்கிறார் கவிஞர். அதுமட்டுமல்ல உள்ளே "நாளைய தலைமுறை"யை நன்றாக சாடியிருக்கிறார் இதை ஒவ்வொரு இளைஞனும் யோசிக்க வேண்டிய ஒன்று.

தன் ஊரைப்பற்றி, "எட்டாவது அதிசயம்" என்ற பாடலில் சூரியனுக்கே தாகம் வந்தால் எங்க ஊர் கிணறே தண்ணீர் தரும்

அதிசயத்தில் எட்டாவது அதுதாங்க...நல்லூரு!...

என ஊரில் வளத்தைப் வளப்படுத்த பெருமையாக பாடியிருப்பது எவருமே சொல்லாத ஒரு புதுமையாக இருக்கிறது. இது இவரதுப் புதுமையான சிந்தனையும்கூட

வாழ்க்கை என்னும் தேர்வினிலே
வந்த கேள்விகள் என்னென்னவோ – ஆனால்
எனக்குத் தெரிந்த பதில் எல்லாம்
என்னவவே அது உன் பெயர்தான்!...

இந்த மென்மையானப் பாடலை வாசிக்கும்பொழுது காதல் மட்டுமல்ல உதடுகளும் மென்மையடைந்து விடுகிறது. இதில் உண்மை என்னவென்றால் காதல் தித்திக்கப் பாடுவதில் இவர் மிகவும் திறமையானவர் என்பது புரிகிறது. மேலும் கடவுள் வாழ்த்து, எப்பொழுது அந்தபுரத்தில் பஞ்சத்தில் எங்கள் பாட்டாளிகள், இந்திய ஒற்றுமை, இது என்ன? கல்லூரியா? இல்லை?... என்று பல தலைப்பில் மனித நேயத்தோடு புதுக்கவிதையிலும், மரபு நடையிலும் தீட்டியுள்ளக் கவிதைகள் புதுமையும், புரட்சியும், மென்மையும் மேன்மையும் கலந்து நம்மை மெய்சிலிர்க்க வைக்கின்றது.

மேலும் இறுதியாக ஒன்றை சொல்ல விரும்புகிறேன். பல முன்னேற்றங்களை அடைந்துள்ள முதல் வரிசைக் கவிஞர்கள் அனைவருக்குமே நான் வாழ்த்துக்கள் வழங்கி இருக்கின்றேன். அவர்கள் அனைவருமே இன்று பேரோடும் புகழோடும் விளங்குகிறார்கள். அதேபோல், இந்த 21-ம் நூற்றாண்டில் முதல் கவிதை வரிசைகளில் தம்பி கவிஞர் இரா. வேல்முருகனும் ஒருவராக திகழ்வார். அவர்களைப் போல் பேரோடும், புகழோடும் விளங்குவார். இந்த உண்மை, உளமார வாழ்த்துகிறேன்.

*கவிஞர் இரா. வேல்முருகன் எழுதிய 'இப்படிக்கு நீதான்' என்னும் நூலுக்கு 2002–இல் வழங்கிய அணிந்துரை.*

## முரசொலி

பள்ளி மாணவராக உள்ளபோதே எனக்கு கலைஞர் பழக்கம்.

அரங்கண்ணல், நான், வயலூர் சண்முகம், மாவன்கோ ஆகியோருடன் கலைஞரும் இளம்பிராயத்தில் நண்பராக இருந்தார்.

*10-8-1942*இல் முதல் அறிக்கையாக "முரசொலி" வெளியிடும் போதிருந்தே கலைஞரை எனக்குத் தெரியும்.

"முரசொலி"யில் இடம்பெற்றுள்ள "இன்றைய செய்தி நாளைய வரலாறு" என்பது வியப்பான பொன்மொழி.

கோவலன் கொலையுண்டான் என்பது செய்தி. சிலப்பதிகாரமாக படைக்கப்பட்டபிறகு அது வரலாறு. முதலில் செய்தி. பிறகு வரலாறு ஆகும் என்பது யாருக்கும் தோன்றாததொன்று. அதனால்தான் வரலாற்றுக்குரியவராக அன்றே திகழ்ந்தார் கலைஞர்.

"முரசொலி" ஆரம்பிக்கப்பட்டபோது அது செய்தி. கலைஞரும் அன்று பலரால் பேசப்பட்டார் - அதுவும் செய்தி. இன்று கலைஞரும், முரசொலியும் வரலாறு ஆகிவிட்டனர். "முரசொலி" வரவிருக்கிறது எனும் விளம்பர அறிக்கையை கடைகளில் தொங்கவிட்டவர்களில் நானும் ஒருவன்.

கலைஞர் அனைத்திலும் புதுமையாகவே இருந்தார். தலைவகிடு, ஜிப்பா அணிவது, மேலாடை துண்டு போடுவது, கரகரத்த குரல்வளத்தில் பேசுவது, எழுதும் பாணி எனப் பலவும் அதில் அடங்கும். கலைஞரின் தந்தை கலைஞரைவிடப் பேரழகு வாய்ந்தவர். மகா கூர்த்த மதியுள்ள முத்துவேலர். அந்த மதிதான் அப்படியே கலைஞரிடம் வளர்ந்துள்ளது; வாரிசு ரத்தம் போகுமா?

தன்னைச் சந்திக்கும் அனைவரிடமும் முகவரி வாங்குவது கலைஞருக்கு வழக்கம். அதனால் உற்றார் உறவினர் இன்றி கூடுதலாக பல்லாயிரம் பேரைதெரிய வாய்ப்பானது. அவருக்கு நினைவாற்றல் அதிகம்.

23வாரம் தொடர்ந்து முரசொலியில் கவிதை எழுத எனக்கு வாய்ப்பு தந்தார். அது எனக்கு பெரிய விளம்பரம். 23 வாரம் என்பது பெரிய சங்கதி. அப்படித் தொடர்ந்து எழுதிட யாருக்கும் வாய்ப்புத்தரமாட்டார்கள். கலைஞர் எனக்குத் தந்தார். இந்த அளவு என் புகழுக்கு கலைஞரே காரணம்.

ஒருவர் கடிதம் எழுதினால் எழுதும் பாணியைப் பார்த்தே அவர் திறனை எடைபோட்டு விடுவார். அவரை நேரில் வரவழைத்து பெரிய எழுத்தாளன் ஆக்கிவிடுவார்.

சொர்ணம், அடியார், ஏ.கே.வில்வம் போன்றோர் இதில் அடங்குவர்.

"முரசொலி" என்பது எழுத்தாளரை உருவாக்கும் பட்டரை. 60 ஆண்டுக்கால வரலாற்றுக்குரிய பத்திரிகைக்கு ஒருவரே தொடர்ந்து ஆசிரியராக இருந்து பணியாற்றுவது அபூர்வம்.

கோசல்ராம் கொஞ்சகாலம்

'தினச்செய்தி' பத்திரிகைக்கு கே. செல்வம் என்ற பெயரில் ஆசிரியராக இருந்தார். 'குடியரசு' பத்திரிகைக்கு பெரியார் ஆசிரியராக இருந்தார். 'ஜனசக்தி' பத்திரிகைக்கு ஜீவானந்தம் ஆசிரியராக இருந்தார். "சுயராஜ்யா" பத்திரிகைக்கு ராஜாஜி ஆசிரியராக இருந்தார். 'திராவிடநாடு' பத்திரிகைக்கு கலைஞரை ஆளாக்கிய அண்ணா ஆசிரியராக இருந்தார். "சமநீதி" பத்திரிகைக்கு எம்.ஜி.ஆர். ஆசிரியராக இருந்தார். நான் குறிப்பிட்டுக் காட்டிய பட்டியலில் சில பத்திரிகைகள் நின்றே போனது. பல இதழ்கள் பெயர்மாற்றம் கொண்டன. சில இதழ்கள் வந்து நின்றன. ஆனால், உலகில் எவரும் பெறாத நிலையில் மாணவப் பருவத்திலிருந்து ஒரு வரலாற்று பத்திரிகைக்கு அதன் மணிவிழா காலம்வரை தொடர்ந்து ஆசிரியராகப் பணியாற்றியவர் கலைஞர் ஒருவரே. இதுவே கலைஞர் ஆற்றலுக்கு பெரிய சான்று.

அண்ணாகூட திராவிடநாடு, காஞ்சி என பெயர் மாற்றம் செய்து நடத்தினார்.

"முரசொலி" சேவை மகத்தானது. 1954இல் பாரதிதாசனுக்கு சிலை வைப்போம் என்று நான் எழுதிய கவிதையை போட்டார். பணம் இல்லாமல் பத்திரிகை வறுமையில் நடந்த போதும் பாவேந்தர் படத்தை பிளாக் எடுத்துபோட்டு அதை மிகவும் அழகாக வெளியிட்டார். அந்தக் காலத்தில் காசு செலவாகும் என்று பிளாக் செய்து போடமாட்டார்கள். கலைஞர்தான் - பத்திரிகைகள் கருத்துக்களை தாங்கி வெளிவருவது மட்டுமல்ல- அலங்காரத்தோடு மக்களைக் கவரும் வகையில் வரவேண்டும் என்பதற்கு முக்கியத்துவம் கொடுப்பார். அந்தக் காலத்தில் குடியரசு, திராவிட நாடு, மன்றம் போன்ற பத்திரிகைகளில் அவ்வாறு பிளாக் செய்து போடமாட்டார்கள்.

தொடர்ந்து கடிதங்கள் எழுதுவது, கதை வசனம் எழுதுவது, நாடகங்கள் எழுதுவது, கவிதைகள் எழுதுவது, புத்தகங்கள் எழுதுவது என கூட்டுதிறன் பெற்றிருப்பவர் கலைஞர் ஒருவர்தான்.

கலைஞருக்கு மண்பற்று அதிகம். நன்றி அதிகம். "அழகிரி" என்று தன் மகனுக்கு பெயர் வைத்ததே அதன் வெளிப்பாடுதான்.

முரசொலி வளர்த்த கவிஞர்கள் - நாஞ்சில் மனோகரன், கருணானந்தம், நான் (சுரதா) இன்னும் ஏராளம் உண்டு.

அவர் எழுதிய தலையங்கத்தை நீட்டினால் பல கி.மீ. தொலைவு நீளும். கலைஞர் கையாளும் உடன்பிறப்பே எனும் சொல் அரிய சொல் ஆகும். படிக்கிறவனை தன்னோடு ஒன்றிப் போகவைக்கச் செய்யும் மந்திரச் சொல்.

அவர் பிள்ளைகளைக்கூட கண்ணும் கருத்துமாக பார்த்தாரோ இல்லையோ மணமாவதற்கு முன்பிருந்தே தன் மூத்த பிள்ளையாய் முரசொலியை காத்து அவரே அப்பிள்ளைக்கு மணிவிழா எடுப்பது பெரும்பேறாகும்.

1960-இல் நாளேடாக மாறிய முரசொலிக்கு இன்று மணிவிழா. நான் வளர்ந்ததற்கு முதற்காரணம் கலைஞரே. முரசொலி அறிக்கையை தொங்கவிட்ட எனக்கு அந்த முரசொலி அறக்கட்டளை மூலம் 1998-இல் கலைஞர் விருது வழங்கியது மிகப்பெரும் பேறாகும்.

அரசியல் தலைவர்களில் தன் வரலாறு எழுதியவர் கலைஞர் ஒருவரே. ஜீவானந்தம், காமராசர், பக்தவச்சலம் ஏன்? அவரின் தலைவர் அண்ணா கூட எழுதவில்லை. உலக செல்வாக்கு உள்ளவர் என்பதற்கு அடையாளமாக உலக உருண்டை என்னால் அவருக்கு வழங்கப்பட்டது. அவரின் கொள்கை வெளிப்பட வெற்றியடைய முரசொலியே முக்கியக் காரணம்.

*முரசொலி மணிவிழா ஆண்டையெட்டி "முரசொலி மணிவிழா மலருக்கு 2002–இல் வழங்கிய வாழ்த்துரை"*



## 'கதம்ப மலர்கள்'

பன்மலர் தொடுத்த பூச்சரத்தைக் கதம்பம் என்கிறோம். கதம்ப மலர்கள் என்னும் இந்நூல் கருவிலும் உருவிலும் மாறுபட்ட பல பாடல்களின் தொகுதி ஆகும். காவியங்கள் போல் ஒரு பொருளிலன்றி *11* தலைப்புகளில் பாடல்கள் அமைந்துள. வடிவத்திலும் ஓரினப் பாக்களாக இல்லாமல் ஆசிரியப்பா, விருத்தம், வெண்பா, கட்டளைக் கலித்துறை என்ற பலவகைப் பாடல்கள் உள. எனவே கதம்ப மலர்கள் என்ற பெயர் மிகவும் பொருத்தமானது.

இந்நூலை ஆக்கிய கவிஞர் திருமகளூர் கு. நடராசன் சிறுவயதிலேயே முறையாக யாப்பிலக்கணங் கற்றுப் பாடல்கள் எழுதத் தொடங்கியவர். நண்பர்கள், உறவினர்களுக்குச் செய்திகள் தாங்கிய பல மடல்கள் எழுதி இருக்கிறார். உரைநடை வழக்கில்லாப் பழங்காலத்தில் மடல்கள் செய்யுள் நடையில் எழுதப்பட்டன. ஆனால் இப்போதெல்லாம் கவிதை மடல் எழுதுவோர் மிகக் குறைவு. அவர்களும் இங்கொன்றும் அங்கொன்றுமாக ஏதோ சில மடல்கள் எழுதி இருக்கலாமே தவிர இந்நூலாசிரியரைப் போல அதிக எண்ணிக்கையில் எழுதி இரார். கவிதை மடல்கள் எழுதி வெளியிட்டுள்ள திருமகளூர் நடராசன் அவர்களை முன்னோடியாகக் கொண்டு மற்றைய கவிஞர்களும் கவிதை மடல் எழுதவேண்டும்.

கவிஞர், ஐரோப்பியநாடுகளில், ஜப்பானில், அமெரிக்காவில் எல்லாம் பயணம் செய்திருக்கிறார். அங்குகண்ட காட்சிகளையும் கேட்ட செய்திகளையும் பாக்களாக வடித்திருக்கிறார். இந்த வகையிலும் இவர் ஒரு முன்னோடியாகத் திகழ்கிறார். நான் அறிந்த வரையில் தமிழ்க்கவிஞர் யாரும் வெளிநாடு சென்று வந்தபின் அங்கு கண்டவற்றை பற்றிக் கவிதை புனைந்து வெளியிட்டதாகத் தெரியவில்லை.

அவர் ஜப்பானில் பல அரிய காட்சிகளைக் கண்டிருக்கிறார். பெரியவர்களைக் கண்டால், நாம் கைகூப்பி வணங்குகிறோம். சிலர் கால்தொட்டு வணங்குவதுண்டு. ஜப்பானில் உடலின் மேல் பாதியை இடைவரை வளைத்து வணக்கம் தெரிவிப்பார்கள் இதை கவிஞர் கூறுவதை காணுங்கள்.

- "கண்ணுற்ற பெரியோரைக் கனிவாக வாழ்த்துவதற்கு விண்ணுற்ற மாடங்கள் விரிகடல்சூழ ஜப்பானில் மண்படியக் கண்பாய்ச்சி இடைவரையில் உடல் வளைக்கும் பண்டையநற் பழக்கத்தைப் பாலித்தல் சொல்வேனோ?" அந்நாட்டிலே பொறிகள் பல செய்கிறார்கள். அவற்றுள் "ரோபோக்கள்" என்னும் மனித இயந்திரங்கள் பலவகைப் பணிகளைச் செய்கின்றன." கால்நகர்த்திக் கையுயர்த்தி விரலிடுக்கி ஆலைகளில் கோல் வளைத்து ஆப்பிட்டுக் கொள்ளை பணி ஆயிரத்தின் மேல்செய்யும் 'ரோபோக்கள்' பற்றிப் பாடுகிறார். அந்த நாட்டில் 'புல்லட்' என்னும் இரயில் தண்டவாளத்தில் படாமலேயே "மிதந்து" செல்லும் அப்பயணம் எத்தனை சுகமானது?

"கல்நூறு கால்மணியில் கால்நிலத்துப் பாவாது
'புல்லட்' [இ]ரயில் மிதந்து போன சுகம்..."

என்று பாடுவார். இவர் தம் தாயின் மறைவு குறித்து இரங்கற்பா பாடிய பட்டினத்து அடிகள் நம் நினைவுக்கு வருகிறார். திருமணம் என்பது வாழ்வில் ஒரு திருநாள். ஒருவர் கல்வி முடித்துப் பட்டம் பெற்று பணிக்குச் செல்வதும் வாழ்வில் இன்பமளிக்கும் நிகழ்ச்சி. பெற்றதாய் தம் மக்கள் இப்பெற்றினைப் பெறும்போது எத்தனை மகிழ்ச்சி அடைவாள்! அந்தப் பேறு தமக்கு கிடைக்கவில்லையே என்று மனமுருகிப் பாடுவது உள்ளத்தை உருக்குவதாக அமைந்துள்ளது. வேளாண் கல்லூரியில் பயின்ற மாணவியர் ஊர்தியில் செல்லும்போது வழிமறித்துக் கொளுத்தப்பட்ட கொடுமை சில ஆண்டுகட்குமுன் நடந்தது. அதனை எண்ணி இரங்கற்பா ஒன்று புனைந்துள்ளார். "நறுமணம் வீசப்போம் நாண்மலர் மொக்குகளை விறகாய் ஒடித்தேதான் வெந்தியில் இட்டனரே" என்ற வருத்தம் பரவுகிறது. "வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடிய வள்ளலார் வாழ்ந்த இந்நாட்டில்" இன்னமும் "உயிரிடை நேயம் உண்டுகொல்" என்று கேட்கிறார்.

சமுதாயத்தில் அடித்தளத்திலுள்ளோர் வாழ்வுயரவும் பாடுகிறார். குடிசைவாழ் மக்கள் ஆண்டுதோறும் மழைக்காலத்தில்

வெள்ளத்தாலும் கோடையில் தீயினாலும் வீடிழந்து தவிக்கும் அவல நிலை நீங்க "கொடுந்தீதான் பரவாத கூரை, வெள்ளம் கொள்ளாத மேட்டு நிலத்து அமைத்துத்" தருமாறு வேண்டுகிறார். பெண்ணுரிமை வேண்டும் பாடல்கள் "மன்றத்தே பொதுவாழ்வில் அரசில் கல்வி மாண்புகளில் அவர்க்கேதும் இன்றோ?" என்று நம் மனச் சான்றையே கேட்பதாக அமைந்துள. கவியரங்கம், பட்டிமன்றம் போன்ற நிகழ்ச்சிகளில் நம் கவிஞர் கலந்து கொண்டதுண்டு. ஒரு கவியரங்கத் தலைமை உரையில் தலைவர் முன்னுரை மட்டுமின்றி கவிஞர்களைப் பாட அழைப்பது. பாடி முடித்தவர்களுக்குச் சிறு குறிப்புகள் கூறி வாழ்த்துதல் போன்றவையும் செய்யுளிலேயே அமைத்திருக்கிறார் என்பது குறிப்பிடத் தக்கது.

பாரதியாரிடம் மிகுந்த ஈடுபாடு கொண்டு
"**புல்லையும் வீரமேற்றிப் பொருகணை ஆக்கிக்**
**காட்டும் வல்லவன் கவிஞர் ஏறு**"
"**உரந்தரு கவிதை வள்ளல்**"
"**கறைகள் மனத்துக் கால்கொள்ளாக் கவிஞர் கோமான்**"
என்றெல்லாம் புகழாரம் சூட்டுகிறார்.

ஒரு கவிஞனால் அவன் பிறந்த ஊர் சிறப்புப் பெற வேண்டும். நம் கவிஞர் பிறந்த ஊர் திருமகளூர் அது வலங்கைமான் வட்டத்தைச் சேர்ந்தது. வலங்கைமான். ஆங்கிலப் பேச்சாற்றலில் ஒப்பாரும் மிக்காரும் இல்லாத "ரைட் ஆனரபிள்" சீனிவாச சாஸ்திரி பிறந்த ஊர். புகழ்பெற்ற ஓவியர் இரசாக்கின் ஊரும் அதுதான். வலங்கைமான் இவர்களால் புகழ்பெற்றது.

நான் பிறந்த பழையனூருக்கு என்னால் இயன்ற பெருமை சேர்த்திருக்கிறேன். கவிஞர்கள் எல்லோரும் தம்பெயரோடு ஊரையுஞ் சேர்த்துப் புழக்கத்தில் கொண்டு வரவேண்டும். 73 வயதினரான திருமகளூர் நடராசன் ஒரு பொறியாளர் இது அவருடைய முதல் நூல் ஆனாலும் இங்குள்ள பாடல்களிற் பல பழையன. அவருடைய இம்முதல் முயற்சி சிறப்புற அமைந்துள்ளது. வாழ்க திருமகளூர் நடராசன்! வளர்க அவர் கவிதை ஆக்கம்!

*கவிஞர் திரு.கு. நடராசன் எழுதிய 'கதம்ப மலர்கள்' என்னும் நூலுக்கு 2002-இல் வழங்கிய அணிந்துரை.*

## சிறை முத்துக்கள்

சிறைமுத்துக்கள் என்ற நூலை சிறையிலிருந்தே எழுதியிருக் கிறார் வே. ராதாகிருஷ்ணன்.

இதுவரை அறையிலிருந்து அதிகமானபேர் நூல்கள் எழுதியிருக்கிறார்கள்.

ஆனால் சிறையிலிருந்து எழுதியவர் சிலரே"

ஒட்டக்கூத்தர் எழுதிய காலத்தில் வாழ்ந்த "புலவர். புகழேந்தி" சிறையிலிருந்து கவிதைகள் எழுதியிருக்கிறார். அதுபோல் இவரும் சிறையிலிருந்து கொண்டே உணர்வுடன் கவிதைகள் வடித்திருக்கிறார். அவரைப் போலவே இவரும் பேரும் புகழோடு புகழேந்தி வருவார் என்பதில் ஐயமில்லை.

இவர் கவிதைகளை வடித்த நாட்களையும் குறிப்பிட்டுள்ளார்.

சென்ற நூற்றாண்டில் வாழ்ந்த திரு. பாம்பன் சுவாமிகள் கவிதைகள் எழுதும் போதும் எந்த நாளில் எழுதியது என குறிப்பிடுவார்.

எதிர்காலத்தில் இந்தியத்தாயின் மூத்த புதல்வனாக திரு.வே. ராதாகிருஷ்ணன் அவர்கள் வருவார் என்பதில்...

சந்தேகமே இல்லை.

*வே. ராதாகிருஷ்ணன் எழுதிய 'சிறை முத்துக்கள்' என்னும் நூலுக்கு 2003–இல் வழங்கிய அணிந்துரை.*

## இன்னும் ஏன் உறக்கம்?

முல்லை என்றாலே முகர்வதற்கு முன்பே மணம் வீசுவது ஆனால் இந்த முல்லையோ மொட்டாக இருக்கும்போதே மணத்தை அடக்கிக் கொண்டிருந்தது. இன்று விரிந்து மணம் வீசத் தொடங்கிவிட்டது. கவிஞர் முல்லை முருகேசன் அவர்களைப் பார்க்கும் போதெல்லாம் கவிதை நூல் எழுதிவிட்டாயா? என்று கேட்பேன். அவரும் எழுதுகிறேன் அய்யா என்று சொல்லி போய்விடுவார். இப்போது அவர் எழுதிய 'இன்னும் ஏன் உறக்கம்' என்ற கவிதை நூல் என் பார்வைக்கு வந்தது. படித்தேன்... மகிழ்ந்தேன்... இன்றைய தமிழ்ச்சமுதாயத்தின் இழித்தன்மைகளை, ஏற்றங்களை எல்லாம் மிகத் தெளிவாக விளக்கி கவிதை நயம் சொட்ட எழுதியுள்ளார்.

**தாய்மொழியில்பற்று கொண்டோம் அடிமை காலத்தில்**
**ஆங்கிலேயன் ஆங்கிலத்தில் அடிமையானோம்**
**ஆங்கிலேயன் ஆண்டபோது அம்மா இருந்தாள் – இன்று**
**நம்மவர்கள் ஆள்கையிலே மம்மியாய் ஆனாள்**

இப்படிப் பல செய்திகள் பெரிய மகிழ்ச்சி என்னவென்றால், இளையக் கவிஞர்களை ஊக்குவித்து கவிதை, கட்டுரை எழுத தூண்டுகோலாகவும், அதை அச்சிட்டு வெளியிட்டு அந்த ஆசிரியர்களுக்கு பெருமைத் தேடித்தரும் ஒரே ஆசான் கவிப்பேரரசு அருமையார் அவர்கள்தான். வேறு எவரும் வேறு எந்த அமைப்பும் இப்படி ஒரு சிறந்த செயலை செய்ததில்லை. அவர்களுக்கு மனமும் இல்லை. ஆனால் கவிப்பேரரசு அருமையாரால்தான் இப்படிப்பட்ட நல்ல செயலைச் செய்ய முடியும். அதனால்தான் அவர் கவிப்பேரரசு. முல்லை முருகேசன் அவர்கள் இன்னும் பல நூல்கள் எழுதி தமிழ்ச்சமுதாயத்திற்கு ஏற்றம் தரவேண்டும். தாய்மண் இலக்கியக் கழகத்தின் இலக்கியப் பூங்காவிலே பூத்த இந்த முல்லை மலரின் மணம் உலகெங்கும் வீச வேண்டும் என வாழ்த்துகிறேன்.

*முல்லை முருகேசன் எழுதிய "இன்னும் ஏன் உறக்கம்" என்னும் நூலுக்கு 2003ல் வழங்கிய அணிந்துரை*

## விதவைப் பூக்கள்

இந்த தலைப்பிற்கே பரிசு தரலாம் போலிருக்கிறது. சிந்தனையை அப்படியே அள்ளிக் கொள்கிறது இந்த விதவைப் பூக்கள்.

சமுதாயத்தின் ஆழ்கிணறுவரை சென்று தண்ணீரைக் கொண்டு வராமல் கண்ணீரைக் கொண்டு வருகிறது. விதைவைகள் பூ வைத்துக் கொள்ளலாம் என்று முதன் முதலில் இராமலிங்க அடிகளே கூறினார். அவரை நினைவுபடுத்துகிறார்கள் இந்த இளம் கவிஞர்கள். மீசை முளைக்காத வயதில் காதல் முளைக்கும். ஆனால் இந்த இளம் கவிஞர்களுக்கு அற்புதமான தமிழ்ப் புதுக்கவிதைகள் அல்லவா முளைத்திருக்கிறது.

த. பாண்டியன் என்ற இளம் கவிஞர் எழுதிய கருப்பை வெறுக்கும் சில கண்களே என்ற தலைப்பில் அமைந்த

**கற்பை நேசிக்கும்**
**கண்ணகிகளே**
**கொஞ்சம் கருப்பையும்**
**நேசியுங்கள்**

என்ற வரிகள் கருப்புக்காக கொஞ்சம் வித்தியாசமாக போராடியிருக்கிறது. இதே போல இன்னொரு கவிதையில் த. பாண்டியன் (இறந்த உயிர்கள்) என்ற தலைப்பில் ஏழைகளின் கண்ணீரைப் பாடமுனையும்போது, அவளின் துயரை இவ்வாறு வர்ணிக்கிறது.

**சுடுகாடு அருகில்**
**சூவைபோடும் வேலைதான்**
**சுலபமாக கிடைத்தது**
**அங்கே**

உயிரற்ற பிணங்கள்

எரிந்து கொண்டிருக்கின்றது

இங்கே உயிருள்ள பிணங்கள்

எரிந்து கொண்டிருக்கிறது

என்று சோகமாக சோகிக்கிறது.

இதேபோல ம. நட்சத்திரன் என்ற இளங்கவிஞரின் நீ பிறந்த தேசம் தீ பிறந்த தேசமாய் என்ற தலைப்பில் அமைந்த காந்தியின் கனவுகளை நினைவுபடுத்துவதாய்,

உன் நெஞ்சினிலோ பல குண்டுகள்

நீ பிறந்த தேசமோ பல துண்டுகள்

என்ற இந்த வரிகள் தேசத்தை ஆழமாகத் தோண்டி பார்த்திருக்கிறது இதைப்போல் இன்னொரு கவிதை, இந்த நூலுக்கு தலைப்பாய் அமைந்த விதவைப் பூக்களில்

நாங்கள் வாங்கி வந்த வரங்கள் என்ன

வெறும் இரங்கல்தானா? – என்றும்

இந்தப் பூக்கள் சமுதாயத்தில்

ஒதுக்கப்பட்ட கன்னி...

விதவைப் பூக்கள் – என்றும்

மனம் நோகப் பாடுகிறது ம. நட்சத்திரனின் கவிதை.

இவ்வாறு இவர்கள் எழுதியுள்ள பல கவிதைத் தலைப்புகளைப் படிக்கின்ற போது ஆழமான பல கருத்துக்களை உணர முடிகிறது. கண்டிப்பாக இந்த நூலை அனைவரும் படிக்க வேண்டும். இன்று குடியரசுத்தலைவர் பதவிக்கு திரு. டாக்டர் அப்துல்கலாம் மனு செய்திருக்கிறார். அதுபோல இந்த இளம் கவிஞர்கள் என்னிடம் வாழ்த்து வாங்கியிருக்கிறார்கள். அவரும் வெற்றி பெறுவார். இவர்களும் வெற்றி பெறுவார்கள் என்று இருபது வயதையும் தாண்டாத இந்த இளம் கவிஞர்களை 82வயதான நான் வாழ்த்துவதை பெருமையாகக் கருதுகிறேன்.

*ம.நட்சத்திரன் எழுதிய 'விதவைப் பூக்கள்' என்னும் நூலுக்கு 2003–இல் வழங்கிய அணிந்துரை.*

## பாதை வகுத்திடு

"பாதை வகுத்திடு" என்ற இம்முதல் கவிதை நூலை எழுதிய தக்கோலம் கங்கை மணாளன் அவர்கள் தன் பெயரோடு ஊர்ப்பெயரையும் சேர்த்து வைத்துக் கொண்டது ஊர்பற்றை நன்கு வெளிப்படுத்துகிறது. வானொலியில் ஒலிபரப்பப்பட்ட மெல்லிசைப் பாடல்களையும், இதழ்களில் வெளிவந்த கவிதைகளையும் தொகுத்து வெளியிட்டதின் வாயிலாக இதழ்களையும், வானொலியையும் சிறப்பித்து நினைவு கூர்கின்றார். பாராட்டுக்குரியது.

'அறங்காக்க அவதரிப்பாய் ஆண்டவனே' என்ற தலைப்பில் உள்ள கவிதையில்

"சிறப்பெல்லாம் கீழ்நோக்கிச்
சாய்வதாலும்
சிறுமையெல்லாம் மேல்நோக்கிச்
செல்வதாலும்"

என்று கூறி, இன்றைய நிலையை படம் பிடித்து காட்டுகின்றார்.

"இல்லாமை இல்லாமல்
இங்கு தினம் எல்லோரும்
இன்பங்கள் பெற வேண்டும்"

என்று காமாட்சியம்மையைப் பார்த்துக் கேட்கின்றார்.

1960ல் வெளிவந்த 'தங்கரத்தினம்' படத்தில்

"ஜாதி ஒழியாதோ - இந்த
சஞ்சலம் தீராதோ
நீதி தழைக்காதோ - நாட்டில்
நேர்மை நிலைக்காதோ"

என்று இலட்சிய நடிகர் எஸ்.எஸ். ராஜேந்திரன் எழுதிய பாடலுக்கு விடைகூறுவது போல்

"சாதிமத பேதமே
சமத்துவத்தால் விலகுமே
நீதிவழியில் நீதியே
நின்று நிலைத்து நிலவுமே"

என்று இவர் கூறுகின்றார்.

'ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு' என்ற பாடலில்

"தொட்டுவிட்டால்
தீட்டு என்ற
பேயை ஓட்டுவோம் - நம்
[இ]ரத்தம் ஒன்று
என்று உணர்ந்து
வாழ்ந்து காட்டுவோம்"

என்று தீண்டாமையை கவிஞர் சாடுகின்றார்.

"மதத்தில் மதமாய் இருக்காதே - மன
மயக்கத்தில் தவறுகள் புரியாதே"

என்று மத - வெறியர்களை - வெறியால் புரியும் தவறுகளை தக்கபடி சுட்டிக் காட்டுகின்றார்.

ஒற்றுமை கீதத்தில் ஒற்றுமையின் உயர்வினை வலியுறுத்து கின்றார். உதாரணமாக

"சாதிகள் பெயரிலை மறந்திடுங்கள் - நாம்
சரிசமம் என்பதை நினைத்திடுங்கள்"

என்று ஒற்றுமைக்கு அடிப்படையான சமத்துவத்தை நிலை நிறுத்துகின்றார். 'செந்தமிழ் தாயே வணக்கம்' என்ற கவிதையில் தமிழ்த்தாய்க்கு இலக்கிய நூல்களை அணிகலன்களாக இனிதுற சூட்டி மகிழ்கின்றார். காலத்தை உணர்ந்து கடமையைச் செய்தால் நன்மை பெறலாம் என 'காலத்தை உணர்ந்திடுங்கள்' என்ற கவிதையில் நயம்பட எடுத்துரைக்கின்றார்.

"மனித நேயப் பண்பாடு - இதை
மனதில் பதிக்கனும் நம்மோடு"

என்று மனிதநேயப் பண்பாட்டை வலியுறுத்துகின்றார்.

"நல்ல தொழில்களை நாளும் வளர்த்திட
நலமாய்ச் செயல்படுவோம் - உயர்
கல்வித் துறைகளில் கவனம் செலுத்தியே
கருத்தாய் வளர்த்திடுவோம்"

என்று கூறுவதிலிருந்து நல்ல தொழில்களோடு நற்கல்வியிலும் தனது கருத்தைக் கொண்டுள்ளார்.

கூடலூர் வீரபத்திர படையாச்சி என்பவர் 1903-இல்

"வேண்டாமய்யா குடி வேண்டாமய்யா - கள்ளு
வேண்டாமய்யா குடிக்க வேண்டாமய்யா"

என்று மதுப்பழக்கம் வேண்டாமென்று நெறிபடுத்துகின்றார். 2003-இல் இவர் குடிகெடுக்கும் குடிப்பழக்கத்தைச் சாடுகின்றார். மேலும் 'மதுவினை நாடாதே' என்ற கவிதையில்.

"மதுவினை நாடாதே - நல்ல
மதியினை இழக்காதே
விதியென புலம்பாதே- வீணே
விலங்கெனத் திரியாதே"

என்று 'குட்டுக் கவிதைகளால்' ஓங்கிக் குட்டுகின்றார்.

'பாடசாலைப் பிள்ளைகள்', 'விலைவாசி', 'தேவை' போன்ற தலைப்பில் உள்ள கவிதைகள் பட்டு வண்ண முகத்தின் நெற்றிப் பொட்டாய், 'பொட்டுக் கவிதைகளாக' இந்நூலில் மிளிர்கின்றன.

கணினி இன்றைய உலகின் கண்ணாய் திகழ்வதை 'கணினி..கண்நீ' என்று கனிவாய் தெளிவுப் படுத்துகின்றார்.

வன்முறை நன்முறை வழங்காது என்று 'அண்ணல் வழி' என்ற கவிதையில் அழகாய் அறிவுறுத்துகின்றார்.

"காந்திய வழியில்
சென்றிடு மனமே - மனச்

சாந்தியை எளிதாய்ப்
பெற்றிடு தினமே"

என்கின்றார். காந்திய வழியைப் பின்பற்றிச் சென்றால் மனச்சாந்தியை - நிம்மதியைப் பெறலாம் என்று கூறுகின்றார்.

"பார் அதிரப் பாடியவன் பாரதி – நம்
பாரதத்தில் பாட்டிடைசையின் சாரதி"

என பாரதியின் பல்வேறு பரிமாணங்களைப் பாடலில் படைத்துள்ளார்.

'வாடிய பயிரைக் கண்டபோது வாடிய வள்ளல்' என்ற கவிதையில் வள்ளலாரைப் பற்றிச் சொல்லும் போது

"சத்திய தருமச்சாலை
தத்துவத்தைப் பொழிந்தார்
சமரச சன்மார்க்க
சமுத்துவத்தை அளித்தார்"

என்று கவிஞர் நிறைவாய் நினைவில் நிலை நிறுத்துகின்றார்.

விலைவாசி உயர்வை 'விலைவாசி பறவை'யின் மூலம் காட்டுகின்றார். 'வரதட்சணை நெருப்பு' என்ற கவிதையில் வானம்பாடி வனிதையர்களின் வருத்தத்தைப் போக்க வருண இளைஞர்களை வாருங்கள் என்று அழைக்கின்றார். 'மாதும் மாதமும்' என்ற கவிதையில் மாதங்களோடு மாதினை பொருத்தி சொல்லும் உத்தி சுவையாய் உள்ளது.

"என்னுயிர் கண்ணம்மா எனக்குநீ கண் அம்மா
கண்ணுள் கண்டாலும் கருத்தினில் மிளிர்கின்றாய்"

என்ற இக்கவிதையில் காதல் அன்பினை கனிவாய் நெகிழ வைக்கின்றார்.

'கழனியிலே', 'வளமாத்தான் வௌஞ்சிருக்கு' என்ற கவிதைகளின் மூலம் வயல் வெளிக்கே அழைத்துச் செல்கின்றார். நாட்டுப்புற அமைப்பில் பாடலை நன்கு அமைத்துள்ளார். ஏர் உழவனை சிறப்பித்துள்ளார்.

எல்லார்க்கும் எல்லாமும் எய்திடும் வண்ணமாய் புத்தாண்டு பிறக்க வேண்டும் என்று கூறும் 'வழி பிறக்க நீ பிறந்து வா' என்ற

கவிதையில் புத்தாண்டை கவிஞர் வரவேற்கின்றார்.

"அலையாடும் கடலோரம் சிலையாடும் - அதில்
கலையாடும பல்லவரின புகழ்பாடும்"

என்று விளையாடும் சொல்லால் மாமல்லையின் எழிற்காட்சியினை மனத்திரையில் பதிப்பிக்கின்றார்.

'அருமைநிறை தெய்வந்தான் அன்னை' என்று 'அன்னையம்மா' என்ற கவிதையில் அன்னையின் பாசத்தை வெளிப்படுத்துகின்றார். 'மனம்போன போக்கெல்லாம் போக வேண்டாம்' என்ற ஔவையார் பாடலின் மறுபக்கமாக 'அலையும் மனமே அடங்கு' என்ற கவிதை உள்ளது.

சென்னை மாநிலக் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியராக இருந்த தொழுவூர் வேலாயுத முதலியார் அவர்களின் ஊக்கத்தால்தான் வடலூர் வள்ளலாரின் நான்கு திருமுறைகளும் வெளிவந்தன. அதுபோல திரு. குமார் அவர்களின் ஊக்கத்தால் இக்கவிதை நூல் வெளிவந்துள்ளது.

பெரியாரின் தூண்டுதலின்பேரில்தான் பாவேந்தர் பாரதிதாசன் சமுதாய சீர்திருத்தப் பாடல்களைப் பாடினார். சமுதாய சீர்திருத்தம் கொண்ட பல பாடல்களை இக்கவிஞரும் இந்நூலில் படைத்துள்ளார்.

"பாதை வகுத்திடு" சிந்தனைக்குரிய பொருத்தமான தலைப்பு. சரியானபடி பாதை வகுத்தால்தான் பயணம் சிறப்பாக அமையும். இத்தலைப்பில் உள்ள அனைத்து வரிகளும் கல்வெட்டால் பொறிக்கப்படவேண்டியவை என்றே குறிப்பிட வேண்டும். "பாதை வகுத்திடு" என்று சொல்பவர் பாட்டை உருவாக்கியிருக்கின்றார். இந்நூலில் உள்ள அனைத்து தலைப்புகளையும் சிறப்பாக அமைத்துள்ளார்.

பாரதியார் பாரதிதாசனைக் கண்டு கொண்டார். பாவேந்தர் பாரதிதாசன் என்னைக் கண்டு கொண்டார். நான் தக்கோலம் கங்கை மணாளனாகிய இவரைக் கண்டு கொண்டேன். நான் பாராட்டப்படும் கவிஞர்கள் மேன்மேலும் சிறப்புப் பெற்றுள்ளார்கள். இக்கவிஞரும் சிறப்புப் பெறுவார் என்பது உறுதி.

*கவிஞர் தக்கோலம் கங்கை மணாளன் எழுதிய 'பாதை வகுத்திடு' என்னும் நூலுக்கு 2003-இல் வழங்கிய அணிந்துரை.*

## மனதில் பூத்த மலர்கள்

1939ல் 'கம்பர்' திரைப்படம் வெளிவந்தது. அதற்கு பாடல் எழுதிய சுந்தரவாத்தியார் பெண் தெய்வமான கல்விக்கடவுள் சரஸ்வதியை போற்றிப் பாடியுள்ளார். அதில் 'சரஸ்வதி'யின் கையில் புத்தக ஏடுகள் இருக்கின்றன சரஸ்வதியே அது நீ படிப்பதற்கே தான்' என்று பாடல் எழுதியிருந்தார். ஆனால் இப்போது பெண்கள் முன்னேற்றத்தில் கல்வி கற்றோர் அதிகம் என்பதற்கு இந்த பெண் கவிஞர் பாடிய சரஸ்வதி துதி ஒரு சான்றாக விளங்குகிறது. இதில், கவிஞர்

"காலத்தால் அழியாக் கல்வியைத் தந்து
மதிப்புடன் வாழ வைத்தவளே!"

என்று பாடியுள்ளார்.

பாடல் ஆசிரியர் சுந்தர வாத்தியார் காலத்தில் முடியாத ஒன்று கவிஞன் சண்முகவள்ளி காலத்தில் நிறைவேறியுள்ளது கால மாற்றத்தைக் காட்டுகிறது. மேலும் 'படி' என்ற கவிதையில் கவிஞர். பாவேந்தர் பாரதிதாசன் பாடிய 'படி' என்ற கவிதையைப்போல் அடியொற்றிப் பாடியிருப்பது பாவேந்தரின் வழித்தோன்றலாய் இக்கவிஞர் விளங்குவார் என்பதும் திண்ணமாகிறது. 'வேண்டும்' என்ற கவிதையில் சமுதாயத்தின் அளவுகோலை தெளிவுபடுத்தியிருக்கிறார். இக்கால கட்டத்தில் பெண் கவிஞர்களான செளந்தரா கைலாசம், நிர்மலா சுரேஷ், பொன்மணி வைரமுத்து போன்ற பல கவிஞர்களின் வரிசையில் கவிஞர் சணமுக வள்ளியும் பீடு நடை போட்டு இலக்கியம் படைக்க என் வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றேன்.

'நூல்' என்றால் பெரிய நூல் மட்டும்தான் என்பதல்ல. இது போன்ற சிறிய கவிதை நூல்களும் தமிழ் இலக்கியத்தில் முக்கியத்துவம் பெறுகிறது. தந்தைபெரியார் அவர்கள் சிறிய சிறிய

நூல்களை எழுதினார். அது பேருந்தில் போகும்போதுகூட படித்து முடித்து சுவைத்துவிடலாம் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இக்கவிஞர் பாடிய 'சட்டம்' என்ற கவிதை ஒரு அருமையான கவிதையாக விளங்குகிறது.

ஒவ்வோர் ஆண்டும் இக்கவிஞர் தன் பிறந்த நாளில் ஒரு கவிதை நூலை ஆயத்தம் செய்து வெளியிட வேண்டும். அதற்கு என்னுடைய வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் தான் பணியாற்றும் பள்ளியைப் பற்றியும கவிதையில் கவிஞரின் மேன்மையை எடுத்துக் காட்டுகிறது. அவரின் வளர்ச்சி ஆல்போல் தழைத்து மேலும் சிறக்க என் நெஞ்சார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். கவிஞர் சண்முகவள்ளி எழுதிய கவிதையில் 'மிருகங்கள்' என்ற தலைப்புக்கவி மானிடருக்கும் ஒரு சாட்டை அடியாக விழுகின்றது.

"ஆறறிவு படைத்த மானிடர்களே உங்கவில் சிலர்
நினைத்தவர்களை நினைக்கும் நேரமெல்லாம்
நேரங்காலமின்றி வேட்டையாடுகிறீர்களே"

என்று சமுதாயத்திற்கு ஒரு விழிப்புணர்வு தருகின்றார்.

மேலும்,

"அமைதி" என்ற கவிதையில்

"எந்த வேலை செய்தாலும் சிறந்திட வேணும்
எங்கு நாம் வாழ்ந்தாலும் அமைதியைப் பெறனும்"

என்ற வரிகள் கவிஞரின் வாழ்வின் நெறியை நமக்கு எடுத்துக்காட்டுகிறது. வாழ்க இவரது கவித்தொண்டு. வளர்க வையகம் சிறக்க.

*கவிஞர் இரா. சண்முகவள்ளி எழுதிய 'மனதில் பூத்த மலர்கள்' என்னும் நூலுக்கு 2003–இல் வழங்கிய அணிந்துரை.*

## தொல்காப்பியப் பூங்கா

எல்லாத் திறமையும் பெற்ற ஒரே தலைவர்- கலைஞர்தான் - இலக்கியத்தில் திறமை பெற்றவர், இப்போது இலக்கணத்தைத் தொட்டிருக்கிறார், எல்லா மக்களுக்கும் பரவ வேண்டும் என்பதற்காக! இலக்கணம் புலவர்கள் மட்டுமே பயிலும் ஒன்று. அது அடித்தட்டு மக்கள் வரை பரவ வேண்டும் என்று இதைச் செய்திருக்கிறார். கலைஞர் நினைத்த முறையே புதுமையானது.

உலகத்திலேயே ஒப்பிடும்போது இவர் மிகப் பெரியவர். இவ்வளவு நினைவாற்றல் உள்ளவர்கள் எனக்கு தெரிந்த அளவில் யாரும் இல்லை. தொல்காப்பியத்தின் ஒரு பகுதியை எடுத்து நூறு பாடல்கள் மூலம் விளக்கியிருக்கிறார். 'தொல்காப்பியப் பூங்கா' என்று தலைப்பிட்டது பெரிய வெற்றியாகும். தொல்காப்பிய இலக்கணம், தொல்காப்பியச் சிந்தனை என்று பெயர் வைத்தால் எல்லோரும் ஓடிப்போய் விடுவார்கள். தொல்காப்பியப் 'பூங்கா எனும்போது - வாருங்கள் பூங்காவில் உட்காருவோம் என்று எல்லோரும் வருவார்கள்.

நாலடியாரில் ஒரு பாடலில் 'மலராய்ந்து பூத்தொடுப்பர்' என்ற ஒரு வரி உண்டு. மலர்கள் நிறைய இருந்தால்கூட அதில் ஆராய்ந்து தலையில் வைத்துக் கொள்வார்கள் என்று அந்த வரி விளக்குகிறது. இந்த தொல்காப்பியப் பூங்கா படிக்கும்பொழுது அந்த நாலடியார் பாடல் வரிதான் என் நினைவுக்கு வந்தது.

கலைஞர் ஒன்று செய்ய வேண்டும் - 'தொல்காப்பியப் பூங்கா சுற்றுப் பயணம்' என்ற ஒன்றின் மூலம் இதைப் பரப்ப வேண்டும். தமிழ்நாடு முழுதும் பரப்ப வேண்டும். தொல்காப்பியப் பூங்கா நூல் மிகவும் அருமையாக வந்திருக்கிறது.

ஒவ்வொரு படமும் அருமையாக உள்ளது. இவ்வளவு படம் உள்ள நூலை நான் இதுவரை பார்த்தது இல்லை.

கலைஞர் அவர்கள் கூர்த்த மதி வாய்ந்தவர். கலைஞருக்கு கின்னசில் இடம் கொடுக்க வேண்டும். சிறுகதை-புதினம்-கவிதைகள் எழுதி இருக்கிறார். நாடக நடிகராக இருந்திருக்கிறார். திரைப்படத்துறையில் பராசக்தி - மனோகரா போன்ற படங்களின் மூலம் ஒரு புரட்சியை ஏற்படுத்தி உள்ளார் - பேச்சுத் திறமை என்று எல்லாவற்றிலுமே திறமை வாய்ந்தவர். இலக்கியத்துக்கு முதலிடம் - அரசியல் இரண்டாவது என்று கலைஞர் சொல்லியிருக்கிறார். இது வரவேற்கக்கூடியது. ஏனென்றால் முன்புபோல இப்போது அரசியலில் நாகரிகம் இல்லை. இவ்வளவு கடினமான நூலை முப்பதே நாட்களில் எழுதி இருப்பது என்பது நினைக்க முடியாத ஒன்று. நினைவாற்றல் மிக்கவர் - மிகவும் வேகமாக எழுதக்கூடியவர் கலைஞர். முகப்பு அட்டையில் உள்ள தொல்காப்பியர்படத்தைக்கூட அச்சடித்து எல்லோருக்கும் வழங்கலாம்.

அரசியல் தலைவர்களிலே கலைஞர்தான் 1942-ஆம் ஆண்டு ஆரம்பித்த முரசொலியை இன்னும் விவேகமாக நடத்திக் கொண்டிருக்கிறார். முரசொலியில் தொடர்ந்து 54 வாரங்கள் என்னை கவிதை எழுதச்சொல்லி ஊக்கம் தந்தார். இதழியல் வரலாற்றிலே இதுவரை இதுபோன்று யாரும் எழுதச் சொன்னது இல்லை. அந்த அளவுக்கு எனக்கு ஊக்கம் கொடுத்தவர் கலைஞர் அவர்கள். மேலும் அவர் வசனம் எழுதும் திரைப்படங்களில் என்னைப் பாட்டெழுதச் சொல்லியிருக்கிறார்.

இந்த தொல்காப்பியப் பூங்கா நூலை எனக்குக் கொடுத்தனுப்பி அந்த நூலில் "அன்புக்குரிய நண்பர், அருந்தமிழ்த் தேனருவி, உள்ளம்கவர் உவமைக்கவிஞர் சுரதா அவர்களுக்கு இளமைக் கால நட்பு நினைவுடன் என்றும் மறவாத மு. கருணாநிதி" என்று குறிப்பிட்டு கலைஞர் தனது கையெழுத்திட்டுள்ளார்.

அகில இந்திய அளவில் செல்வாக்குள்ள கலைஞர் எனக்கு இதன்மூலம் கௌரவம் கொடுத்துள்ளார். கலைஞர் எவ்வளவோ நூல்கள் எழுதியிருக்கிறார். அத்துணை நூல்களுக்கும் இந்த 'தொல்காப்பியப் பூங்கா' சிகரமாக இருக்கும். தொல்காப்பியம் இலக்கண நூல்களுக்குச் சிகரம். தொல்காப்பியப் பூங்கா என்ற தலைப்பு வைத்ததால் - தொல்காப்பியத்தையும் - இதையும் ஒப்பிட்டுப் பார்ப்பார்கள். எப்படி எளிமைப்படுத்தியிருக்கிறார் என்று பார்ப்பார்கள்.

தொல்காப்பியப் பூங்கா - தொல்காப்பியத்தை நினைவூட்டுகிற பூங்கா, தொல்காப்பியம் என்று சொன்னால் அது வெறும் இலக்கணம் என்று ஒதுங்கி விடுவார்கள். தொல்காப்பியப் பூங்கா என்றால் ஏர் ஓட்டுபவர்கள்கூட கொஞ்சம் காற்று வாங்கிவிட்டுப் போகலாமே என்று சொல்வார்கள். இந்தத் தலைப்பு தொல்காப்பியத்துக்கு விளம்பரம் கொடுக்கிறது. பெருமையைக் கொடுக்கிறது. தொல்காப்பியம் என்ற சொல் நினைவுக்கு வரும் போதெல்லாம் 'தொல்காப்பியப் பூங்கா' நினைவில் எழும். தொல்காப்பியம் என்ற சொல்லோடு பூங்காவை இணைத் தால் தொல்காப்பியமே மக்களுக்குத் தெரிகிறது.

இந்தத் தொல்காப்பியப் பூங்கா என்ற நூறு மலர்களில் எனக்குப் பிடித்த மலர்-2 "உயிரும் மெய்யும்" என்ற தலைப்பில் வருகின்ற பாடலில் மிகவும் அருமையாகச் சொல்லி இருக்கிறார். உயிர் எழுத்து 12 என்பதை பன்னிரு முருகன் கை என்பதிலும் - குறிஞ்சி மலர் 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை பூக்கும் என்பதிலும் ஞாபகம் வைத்துக் கொள்வார்கள் என்று கூறி - கலைஞர் கையாண்டு இருக்கும் முறை நுட்பமானது. உயிரும் மெய்யும் பகுதியை கல்வெட்டாகக்கூட ஆக்கலாம். பக்தியையே சொல்லிக் கொண்டிருப்பவர்களுக்கு பகுத்தறிவு வரும். பகுத்தறிவை வளர்ப்பதற்கு இது ஒரு நல்ல முறை. இதனால் 'உயிரும் மெய்யும்' பகுதி எனக்கு- மிகவும் பிடித்த பகுதி.

ஒரு தனி மனிதன் எழுதிய ஒன்று அதற்குள் 8 லட்சம் ரூபாய்க்கு விற்பனை ஆகியிருப்பது எனக்குத் தெரிந்தவரை இதற்கு முன் இல்லை. மேலும் இந்த நூலில் - இலக்குவனார் போன்றோரை நினைவுபடுத்தி இருக்கிறார். இலக்குவனார் கலைஞருக்கு ஆசிரியர்தான்.

கலைஞர் இலக்கிய உலகத்துக்கும் அரசியல் உலகத்துக்கும் - பத்திரிகை உலகத்துக்கும் - நிறைய தொண்டு செய்திருக்கிறார். கலைஞரின் வாழ்க்கையை அவரே கவிதை வடிவில் எழுத வேண்டும் என்பது எனது அவா. அவருக்கு நல்ல எழுத்து நடை உண்டு. புதுப்புது சொற்களை உபயோகிப்பார். ஆகவேதான் அவரது வாழ்க்கையை அவரே கவிதை நடையில் எழுத வேண்டும்.

*கலைஞரின் தொல்காப்பியப் பூங்கா வெளியீட்டு விழாவினையொட்டி முரசொலி வழங்கிய 'தொல்காப்பியப் பூங்கா' சிறப்பு மலருக்கு 2003–இல் வழங்கிய வாழ்த்துரை.*

## சிற்றோடை

நூலாசிரியர் திரு. யுவராஜ் அவர்களின் தந்தையார் கவிஞர் காஞ்சி அமிழ்தன் அவர்கள் எனக்கு நன்கு அறிமுகமானவர். அவர் நடத்திய உலகம் இதழில் எனது பேட்டி 1965 - ஆம் ஆண்டு வெளிவந்ததை என்னால் மறக்க முடியாது. மேலும் அவர் பல அரசியல் தலைவர்களோடு நெருங்கிப் பழகி, அவர்களைப் பற்றிய பலநூல்களையும் எழுதியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

கவிஞர் காஞ்சி அமிழ்தன் பற்றி மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். அவர்கள் 1975ஆம் ஆண்டு பொம்மை இதழில் மிகவும் புகழ்ந்து எழுதி உள்ளார்கள். மேலும் இந்நூலாசிரியர் திரு. யுவராஜ் அவர்களின் அத்தையின் கணவரான கவிஞர் எஸ்.டி. சுந்தரம் அவர்களையும் என்னால் மறக்க இயலாது. காரணம் அவர் இயல் இசை நாடகமன்றத் தலைவராக இருந்தபோது என்னை அழைத்து கலைமாமணி பட்டம் அளித்து கவுரவப்படுத்தினார்.

சங்கத்தமிழை தன் பாணிக்கு இந்நூலாசிரியர் கையாண்டுள்ள விதம் மிகவும் நன்றாக உள்ளது. இவர் கவிதைகளில் கருத்து ஆழமும். சொல் அலங்காரமும் அழகு. அதில் பசுமரம் என்ற கவிதையில்

"சர்ச்சையாய் மானுடன் மரம் வெட்டி
சாய்ப்பினும் சினம கொளா சிங்காரமே"

என்ற வரிகள் என்னைக் கவர்ந்தன. மேலும் இந்நூலாசிரியர் கவிதையை வடிவமைத்துள்ள விதமும். சற்று வேறுபாட்டுடன் ஆராய்ச்சிக் கண்ணோட்டத்தில் பல புதிய சொற்கள் பயனப்படுத்தப்பட்டுள்ள விதமும் பாராட்டுக்குரியன. சொல்லாட்சி நன்கு அமைந்துள்ளது.

கானமயில் என்ற தலைப்பில் அமைந்த கவிதையில்,

"இச்சை கொண்ட மயிலாடும் நடனமேடை
இணைந்தே இளைப்பாறும் அருகில் ஓர் ஓடை
மிச்சமிருக்கும் மயிலதன் இனத்தை
மிகுதிப் படுத்திட முயலுவோம் வனத்தில்"

என்கிற வரிகள் இந்நூலின் சிறப்பிற்கு எடுத்துக்காட்டாகும்.

'புலிக்குப் பிறந்தது பூனையாகாது' என்கின்ற கூற்றுப்படி தாமதமாக வந்தாலும் நூலைத் தரமாக தந்து உள்ளார். இந்தத் தமிழ்ப் பணியினைத் தொடர்ந்து செய்யுமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

கவிதைப் பற்றோடே வாழ்ந்த கவிஞனின் மகனின்று சிற்றோடை தந்தான் சிறந்தே வாழ்க.

*அரிமா யுவராஜ் அமிழ்தன் எழுதிய 'சிற்றோடை' என்னும் நூலுக்கு 2004-இல் வழங்கிய அணிந்துரை.*



## ஏ.வி.எம். எங்கள் பார்வையிடல்

நான் மந்தைவெளியில் குடியிருந்தபோது, ஒருநாள் என்வீட்டு முன் ஒரு கார் வந்து நின்றது. வெளியே வந்து எட்டிப் பார்த்தேன்.

"அய்யா, வணக்கம்" என்றவாறே ஒருவர் உள்ளே வந்தார். நானும் 'வணக்கம்' தெரிவித்தேன்.

'ஐயா உங்களைக் கையோடு அழைத்து வரச் சொன்னார்' என வந்தவர் கூற, 'நான் யார் அழைத்தார்? எனக் கேட்டேன். 'நம்ம ஏவி.எம்.ஐயாதான்' என வந்தவர் கூறினார்.

புறப்பட்டேன். கார் நின்றது. உள்ளே நுழைந்தேன்.

ஆன்மீகம் - அறிவு - ஆற்றல் - இவற்றின் கூட்டுக் கலவையாக சிரிக்கும் சிரிப்போடு, "வாங்க வாங்க" என வரவேற்றார் திரு. ஏவி.எம். அவர்கள். "அமுதும் தேனும் எதற்கு" பாடலைக் கேட்டேன். சிறப்பாக இருந்தது. உடனே உங்களைச் சந்திக்க விரும்பினேன்" என்றார். அவர் படத்தில் ஒரு பாடல் எழுதும் வாய்ப்பை எனக்களித்தார்.

'துணிந்து நில், துணிந்து செய், துணிந்து செல்...

சத்தியம் ஜெயிக்கவே! லட்சியம் நிலைக்கவே

துணிந்து நில், துணிந்து செய், துணிந்து செல்...'

என்ற பாடலே அது. 'மேஜர் சந்திரகாந்த்' படத்திற்காக!

பல்வேறு பாடல்களை எழுதி பல்வேறு விருதுகளை நான் பெற்ற போதிலும், பல துறைகளில் சிறந்தோங்கிய ஒரு 'கலைக்கோயில்' என கருதப்படும் திரு. ஏவி.எம். அவர்களின் அழைப்பு இன்றும் பசுமையாகவே என் மனத்துள் நிறைகிறது.

*இராணி மைந்தன் தொகுத்த 'ஏவி.எம். எங்கள் பார்வையிடல்' என்னும் நூலுக்கு 2004–இல் வழங்கியது*

## தமிழ் அமுதம்

பாவேந்தர் பாரதிதாசன் என்னும் கவிதைச் சூரியன் உதித்தெழுந்த புதுவையிலிருந்து மேலும் ஒரு கவிஞர் புறப்பட்டு வந்திருக்கிறார்.

தமிழ் விரிவுரையாளராகத் தேனூர் அரசு மேனிலைப் பள்ளியில் பணியாற்றிய ந.சு. தமிழ்ச்செல்வன், தேனூறும் கவிதைகளால் ஒரு புதிய நூல் வழங்கியிருக்கிறார்.

தமிழுக்கும் அமுதென்று பேர் என்ற புரட்சிக் கவிஞரின் வழியில் தமிழ் அமுதம் படைத்திருக்கிறார். இசையியலில் 15 பாடல்கள், மடலியலில் 15 பாடல்கள், இன்பியலில் 23 பாடல்கள், பொதுவியலில் 23 பாடல்கள் என 76 பாடல்களைக் கொண்ட தமிழ் அமுதம் என்ற இந்த கவிதைத் தொகுப்பில் கவிதைகள் அமுதமாக இருக்கின்றன.

சவகர்லால் நேரு தன் மகள் இந்திராகாந்திக்குக் கடிதம் எழுதினார். அது உலகப் புகழ் பெற்றது. இவர் தன் தங்கை, மாமனார், மனைவி, மகள், மருமகள், பெயரன், நண்பர் என உறவினர் களுக்குக் கவிதையிலேயே கடிதம் எழுதியிருக்கிறார், புதிய புகழ் பெறுவார்.

மொழிப்பற்றும், இனமானப்பற்றும் சுயமரியாதை உணர்வும் இவரது பாடல்களில் நிறைந்திருக்கிறது. இன்பியல் பாடல்களும் புதிய போக்கில் அமைந்திருக்கின்றன. பொதுவியல் பாடல்களும் புதிய உணர்வினை வழங்குகின்றன.

பெரியாரைப் பின்பற்றி, மறைமலையடிகள் வழி நடக்கும் கவிஞர்.ந.சு. தமிழ்ச்செல்வன் தனது அறுபதாவது வயதை நோக்கி நடைபோடுகிற நிலையில் தனத முதல் படைப்பை வெளியிட்டாலும், சிறந்ததொரு நூலொன்றைத் தமிழுக்கு வழங்கியிருப்பதாகப் பெருமைப்படலாம்.

பாப்புனைதல், இசை அமைத்தல், பாடுதல், நாடகம் இயக்குதல், நடித்தல் என பல்துறைத் தகுதிகள் பெற்றிருக்கின்ற இவரைக் கலைத் தென்றல் என்று நண்பர்கள் அழைப்பார்களாம்.

இவரது தமிழ் அமுதம் என்ற இக்கவிதை நூலைப் படிப்பவர்கள், இனி அவரை கவித்தென்றல் என்று அழைக்கக்கூடும்.

புதிய நோக்கில், புதிய போக்கில் கவிதை நூலொன்றைப் படைத்திருக்கும் கவிஞர் ந.சு. தமிழ்ச்செல்வன் அவர்களை நிறைந்த மனத்துடன் பாராட்டுகின்றேன். இவரது இலக்கியப் பணிகள் தொடரவேண்டுமென வாழ்த்துகின்றேன்.

*கவிஞர் ந.சு. தமிழ்ச்செல்வன் எழுதிய 'தமிழ் அமுதம்' என்னும் நூலுக்கு 2005–இல் வழங்கிய அணிந்துரை*



## கவிதாஞ்சலி

கவிஞர் புஷ்பாஞ்சலியின் கவிதாஞ்சலி என்ற கவிதை தொகுப்பு நூலை காணும்போது சகோதரியின் எண்ணச் சிதறல்களை, இணையில்லா கவிதை மலர்ச்சரங்களாகத் தொகுத்து, அழகிய கவிமாலையை தந்துள்ளார் என்பதை அறிய முடிகிறது. கருத்தாழம் மிக்க சமுதாயக் கவிதைகள், காதல்ரசம் சொட்டும் காதல் கவிதைகள், உணர்ச்சி பொங்கும் உறவுகளின் வெளிப்பாட்டு கவிதைகள் என்று சிறப்பான ஒரு கவிநூலை தந்துள்ளார். தேசபக்திக்கு 'கொடி வணக்கமும்' அன்புக்கு 'தெய்வத்தாயை'யும், உழைப்புக்கு 'உழைப்பின் உயர்வை'யும் நூலில் வெளிப்படுத்தியுள்ளார் ஆசிரியர். சிறந்த கவிதை நூலினை தந்த கவிஞரின் எழுத்துப்பணி இனிதாக தொடர வாழ்த்துக்கள்.

*கவிஞர் புஷ்பாஞ்சலி எழுதிய 'கவிதாஞ்சலி' என்னும் நூலுக்கு 2005–இல் வழங்கிய அணிந்துரை.*



## காசு குறைய நாலு துட்டு

மணிவாசகப்பெருமான் என ஒரு சிலரால் அழைக்கப்படுபவரால் ஒன்பதாம் நூற்றாண்டில் பாடப்பட்டதாகக் கருதப்படும்

**முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளே**

**பின்னைப் பதுமைக்கும்.... என்னும் இப்பாட்டு**

**இறைவனைப் பற்றிய பாட்டாகும்.**

பகுத்தறிவுக் கவிஞனான என்னைப் பொறுத்தமட்டில் இத்தகுதி செம்மொழி என உலகோரால் போற்றப்படும் தமிழுக்கே உண்டு.

யாருமே பார்க்காத, பார்த்ததாய்ச் சொல்லாத ஒன்றை எண்ணி எண்ணிப் பயப்படுவதைவிட, நம்மை வளர்க்கிற வாழவைக்கிற பயன்படுகிற தமிழுக்கே மேலே சொன்ன பாட்டு வரிகள் பொருத்தமாகும்.

கடவுளைப் பற்றி மட்டுமே பாடுவதையே தொழிலாகக் கொண்டிருந்தனர் அந்தக் காலப் புலவர் பல்லோர்.

பாரதி, பாரதிதாசனுக்குப் பிறகுதான் இந்நிலை பெரிதும்மாறின.

பாரதிகூட எல்லாக்கடவுள்களைப் பற்றியும் பாடினார். ஆனால் அவரை எந்தக் கடவுளும் காப்பாற்றவில்லை. (இருந்தால்தானே காப்பாற்றுவதற்கு)

பாரதிதாசனும் முற்காலத்தில் சுப்பிரமணிய துதியமுது பாடியவர்தான் பின்னர் மாறினார். பலரையும் பகுத்தறிவாளராய் மாற்றினார்.

ஆனால் நான் மட்டும் எந்தக் கடவுளையும் பாடாதவன். எண்பத்தைந்து அகவை ஆன எனக்கு இதுவரை கடவுள் பயமே வந்ததில்லை, இனிமேலும் வராது.

பாரதிதாசன் பரம்பரையில் வந்த எனக்கும் பெரும் பரம்பரை உண்டு.சேலம் மாவட்டத்திலும் என்னைப்போலவே எழுதக்கூடியவர்கள் பலர் இருக்கின்றானர். அந்தவகையில் முருகுசுந்தரம், பாவலர் எழுஞாயிறு அவர்களுடன் இப்போது பாவலர் சேலம் ஆறுமுகன் அவர்களும் இவ்வரிசையில் இடம் பெறுகிறார்.

என்பரம்பரைக் கவிஞரான புலமைதாசன், பாவலர் சேலம் ஆறுமுகன் அவர்களை என் வீட்டுக்கு அழைத்து வந்து, "இவர் சேலம் ஆறுமுகன், நல்ல கவிஞர், இவரின் கவிதை நூலுக்கு நீங்கள் வாழ்த்துரை தரவேண்டும்" எனச் சொன்னார்.

'கவிதை நூலுக்கு என்ன தலைப்பு வைத்திருக்கிறீர்கள்' எனக் கேட்ட போது "காசுகுறைய நாலு துட்டு" எனச் சொன்னார். இந்தத் தலைப்பே மலைப்பாக இருக்கிறது. புதுச்சிந்தனை இப்படித்தலைப்பு வைப்பதற்கே துணிச்சல் வேண்டும்.

இந்நூலிலுள்ள கவிதைகளை எனக்குப் படித்துக்காட்டினார். ஒவ்வொரு கவிதையும் முற்போக்குச் சிந்தனையுடன், பழைமையும் புதுமையும் கலந்து எல்லாப் பொருள்பற்றியும் மிக நுட்பமாகப் பாடியிருக்கிறார். பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம் போல "தீண்டாமை வேண்டும்" இளையோரே இளையோரே" போன்ற மிக எளிமையான பாடலும் இவரின் திறமைக்குச் சான்றாகும்.

இந்நூலில் மரபுக்கவிதைகளும், புதுக்கவிதைகள் ஒன்றிரண்டும், இவர் எழுதிய ஒரு சில திரைப்படப்பாடல்களும் அடங்கியுள்ளன.

நாலு துட்டுச் சம்பாதிக்கப் பாட்டு எழுதாமல், காசு (குற்றம்) குறைய பாட்டு எழுதும் இவரைத்திரைப்பட உலகம் தொடர்ந்து பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்பது என் ஆவல். என்பரம்பரைக் கவிஞரான இவரை நான் வாழ்த்துவதில் மகிழ்கிறேன். நீங்களும்கூட மகிழ்வீர்கள்; தனித்தமிழில் படைத்துள்ள இவரின் கவிதை நூலைப் படித்தால்!

படியுங்கள்; புதிய உலகை படையுங்கள்.

*கவிஞர் பாவலர் சேலம் ஆறுமுகன் எழுதிய 'காசு குறைய நாலு துட்டு' என்னும் நூலுக்கு 2005இல் வழங்கிய அணிந்துரை.*



என்மொழி தமிழே! அந்த
எழில்மொழி அறிவின் ஆக்கம்!
என்மொழி தமிழே! அந்த
எழில்மொழி தேனின் தேக்கம்!
என்மொழி தமிழே! அந்த
எழில்மொழி எனக்குத் தாய்ப்பால்!
என்மொழி தமிழே! அந்த
எழில்மொழி புகழின் போர்வை!

அம்மா கணினியகம்